ஊழியர்களுக்கு...

பரலோகத்தின் பனித்துளிகள்



பா. ஸ்டீபன் தேவகுமார்

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்

ஏறக்குறைய 7 ஆண்டுகளாக பல இடங்களிலிருந்து சேகரித்த சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு வரை அச்சடிக்கப்பட்ட, ஆரோக்கிய உபதேசங்கள் அடங்கிய, கிறிஸ்தவ ஆவிக்குரிய புத்தகங்களை, பல மணி நேரம் கொடுத்து, பல இலட்சங்கள் செலவு செய்து மின் நூல்களாக (E-Books) இலவசமாக (மத்தேயு 10:8) உங்கள் கரங்களில் கொடுப்பதற்கு, அற்பரும் நீசருமான எங்களை பயன்படுத்தின உன்னத தேவனுக்கே சகல கனமும் மகிமையும் துதியும் உரித்தாவதாக. இதைப் போன்ற இன்னும் ஆயிரக்கணக்கான புத்தகங்களை தரவிறக்கம் (Download) செய்ய எங்களுடைய இணையதளத்தை சொடுக்கவும்/பார்க்கவும்: www.WordOfGod.in

95 சதவீத புத்தகங்கள் அச்சில் இல்லாதவைகளும், காப்புரிமை முடிந்தவைகளுமே. மீதமுள்ள புத்தகங்கள், நல்ல உபதேசங்களை கொண்டிருப்பதால், முடிந்தவரை ஆசிரியரின் உரிமையோடு மின்-நூலாக, இலவசமாக வெளியிடுகிறோம். ஒருவேளை உங்களுடைய புத்தகம் இப்படி இலவசமாக மின்-நூல் (E-Book) வடிவில் வரக்கூடாது என்று நினைத்தீர்களானால், தயவு செய்து எங்களை மன்னித்துக்கொள்ளுங்கள். எங்களுடைய WhatsApp எண்ணிற்கோ, மின் அஞ்சலிலோ (Email) எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். உடனடியாக எங்களுடைய இணைய-தளத்திலிருந்து எடுத்துவிடுகிறோம்.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

Wishing you in the mighty name of Jesus Christ

We had collected several thousands of old Tamil Spiritual Books which are rich in Sound Doctrines across various places of India for 7 years. Some of them are more than 200 years old books. We have spent millions of hours and money in scanning them and coverting them to E-Books. The work is still in progress. These E-books are published completely free of cost (Matt 10:8) forever. We give all the praise and glory to God for giving this wonderful opportunity to server Him. You can download thousands of similar Tamil Christian E-books from our website www.WordOfGod.in completely free of cost at any time.

95% of these E-Books are not being printed now and their copyrights are already expired. The remaining books are sent as E-Books mostly with the permission from the Authors. If you feel that your books should not be published as E-Book freely, kindly execuse and forgive us. Please let us know the book details by WhatsApp or Email we will remove them from our website.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

பரலோகத்தின் பனித்துளிகள்

[ஆறாம் பாகம்]

ஆசிரியர் :

போதகர். பா.ஸ்டீபன் தேவகுமார்

வெளியிடுபவர் :
திறந்த வாசல்
பூரண சுவிசேஷ ஊழியங்கள்
65, பரமானந்த முதலி தெரு,
ஏழுகிணறு, சென்னை - 600 001.
போன் : 044 - 2528 1985

எமது பிற வெளியீடுகள்

திறந்த வாசல் துதியொலி கீதங்கள்
(பாடல் புத்தகம்)

விடுதலையின் இரகசியங்கள்

ஜெயங்கொள்ளும் ஜெபங்கள்

பாலகரின் பரவச கீதங்கள்

வாக்கத்தத்தத்தின் தேவன் (பாகம் 1 - 8)

விசுவாசத்தின் வெளிச்சம்

பரலோகத்தின் பனித்துளிக்ள (பாகம் 1 - ௨)

பாலகரின் பரவச கதைகள்

சுகமளிக்கும் வார்த்தை

வெற்றி உன் கையில் யோசுவா விளக்கவுரை

ஆசீர்வாதத்தின் பாதை
(சங்கீத விளக்கவுரை பாகம் 1, ௨)

புது சிருஷ்டியின் மேன்மைகள்

யோபின் திருப்பங்கள்

வாசனை வீசும் நறுமணம்

விசுவாசத்தின் தாய்

உள்ளே உள்ளவை

1. உங்கள் உள்ளத்தின் கிறிஸ்துமஸ் மகிழ்ச்சி நீங்கள் கொடுப்பதில் மலரட்டும் கிறிஸ்துமஸ் செய்தி 1

2. கர்த்தரின் பட்சத்தில் நிற்பவன் யார்? 20
ஊழியருக்கு

3. தேவனுக்கென்று ஒப்புக் கொடுத்தவைகளில் உண்மையாயிரு
அர்ப்பணிப்பின் செய்தி 28

4. மெய்யான பக்தியும் மேலான ஆசீர்வாதமும் தியானச் செய்தி 37

5. இருளில் ஒளியாக இருங்கள் இயேசுவை பிரதிபலியுங்கள் ஊழியருக்கு 48

6. கல்வாரி சோதனைகளும் சாதனைகளும் சிலுவை தியானம் 66

7. ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து சிலுவையில் அறையப்பட்டது வியாழக் கிழமையா? அல்லது வெள்ளிக் கிழமையா? சிந்தனைக்கு 82

8. வீழ்ச்சியின் விளைவுகள்
எழுப்புதலின் செய்தி 85

9. நீதிக்கென்று விதையுங்கள் ஊழியர்பகுதி 97

என் மனம் திறந்து...

கிறிஸ்துவுக்குள் அன்பான சகோதர சகோதரி களுக்கு, ஆண்டவர் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்!

திறந்த வாசல் இயக்கத்தின் மூலமாய் ஒன்பதாவது வெளியீட்டை ஊழியர்களுக்காக வெளியிடுவதில் மகிழ்ச்சி அடைகிறேன். பனித்துளிகள் புல்லின்மேல் இறங்குவது போல் என் வசனம் இறங்கும் உபா 32 : 2 என்ற வேத வசனத்தின்படி கர்த்தருடைய ஆசீர்வாதம் இப்புத்தகத்தை வாசிக்கும் ஒவ்வொருவர் மேலும் இறங்க, ஜெபிக்கின்றேன்.

தேவனுடைய வசனத்தை போதிக்கும் தேவ ஊழியர்களுக்கு பயனுள்ள வகையில் கிறிஸ்துமஸ், சிலுவை தியானங்கள், புத்தாண்டு, மிஷனரி அறைகூவல், வாலிபர்கள், மகளிர், பெந்தகொஸ்தே ஞாயிறு ஆகிய சிறப்புகால கூட்டங்களுக்கு ஏற்ற செய்திகளை தொகுத்து வழங்கியுள்ளேன்.

நீங்கள் ஒய்வெடுத்துக் கொண்டாலும் இப்புத்தகத்திற்கு ஒய்வு தரவேண்டாமென்று உங்களை அன்புடன் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

இப்புத்தகம் பயன்படுத்துமிடத்து எங்கும் தேவனுடைய ஆசீர்வாதம் தங்க ஜெபித்து உங்கள் கரங்களில் சமர்பிக்கின்றேன்.

கர்த்தர் உங்களை ஆசீர்வாதிப்பாராக!

இறைபணியில்,

போதகர் பா. ஸ்டீபன் தேவகுமார்

ஆசிரியரை பற்றி...

போதகர் **பா. ஸ்டீபன் தேவகுமார்** 1970ம் ஆண்டு இந்து மார்க்கத்திலிருந்து ஆண்டவர் இயேசுவை தன் சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டார். வேத வசனத்தின் மேல் ஆழ்ந்த பற்றும், பிடிப்பும் வசனத்தை பகுத்து போதிக்கும் கிருபையும் பெற்றவர் 1973ம் ஆண்டு முதல் தேவனுடைய திருப்பணியை பல்வேறு நிலைகளிலும் செய்து வருகின்றார். இவருடைய வாக்குத்தத்தத்தின் தேவன், பரலோகத்தின் பனித்துளிகள், ஆசீர்வாதத்தின் பாதை பாகம் 1, 2 ஆகிய படைப்புக்களை படித்தவர்கள் பெரிதும் ஆசீர்வதிக்கப்பட்டுள்ளனர். திறந்தவாசல் மாத இதழின் ஆசிரியராகவும் திறந்தவாசல் பூரண சுவிசேஷ சபைகளின் தலைமை போதகராகவும் தேவனுடைய திருப்பணியை செய்து வருகின்றார். இந்நூல் தேவ ஊழியர்களுக்கு பயனுள்ள வகையில் அறிந்து கொள்ளவும் போதிக்கவும் எழுதியுள்ளார்.



பெட்ரோல் வினியோகிக்கும் நிலையங்களில் SERVICE STATION என்ற விளம்பர பலகையை நீங்கள் பல இடங்களில் கண்டிருக்கலாம். இதனுடைய பொருள் **உதவி செய்யும் நிலையங்கள்** என அர்த்தம். ஆனால் அங்கே ஒன்றும் இலவசமாய்க் கிடைப்பதில்லை.

மேற்கத்திய நாடுகளில் ஆரம்ப நாட்களில் இவ்விதமான உதவி செய்யும் நிலையங்களில் (SERVICE STATION) இலவசமான காற்று (வாகனங்களுக்கு) சுத்தமான கழிவறைகள், ஓய்வறைகள், சுற்றுலா பயணிகள் தொடர்ந்து பிரயாணம் செய்ய சாலை வரை படங்கள் ஆகியவற்றை இலவசமாய் வழங்கி வந்தனர். இப்பொழுதெல்லாம் இவைகளை நினைத்துப் பார்க்கவே முடியாது.

இவற்றையெல்லாம் அளிக்கும் ஒரு நிலையத்தைக் கண்டு தான் வியப்படைந்ததாக **"வாரன்"** என்னும் தேவ மனிதன் தனது நூல் ஒன்றில் குறிப்பிட்டுள்ளார். அந்த பெட்ரோல் நிலையத்தின் முன்னால் இவ்வாறு எழுதித் தொங்கவிடப் பட்டிருந்தது."முக்கிய நெடுஞ்சாலை வழிகளில் இறுதியாக அமைந்துள்ள பெட்ரோல் நிலையம் இது. இங்கே இலவசமாக காற்று, குடிப்பதற்கு குளிர்ந்த நீர், சுத்தமான ஓய்வறைகள், வழிகாட்டும் சாலை வரைபடங்கள் இவற்றை நீங்கள் அனுபவிக்கலாம்."

இதைப்போலவே கிறிஸ்தவன் என்று கூறிக்கொண்டு கிறிஸ்மஸைக் கொண்டாடும் ஒவ்வொருவரிடமிருந்தும் ஆண்டவர் இதைத்தான் எதிர்பார்க்கின்றார்.

உதவி நிலையங்கள் உதவி செய்யாமல், கொடுக்காமல் இருந்தால் எப்படியிருக்குமோ, அப்படியே **கொடுக்காத கிறிஸ்தவனும்** இருக்கிறான். ஆண்டவரிட மிருந்து நாள்தோறும் ஏராளமான நன்மைகளைப் பெற்ற நீ மற்றவர்களுக்கும் அதைக் கொடுக்கத் தவறும்போது, உன்னுடைய வாழ்க்கை அர்த்தமற்றதாகிவிடும். கிறிஸ்மஸின் மேலான நோக்கங்கள் உன்னில் நிறைவேறவே முடியாது. தேவனுடைய கொடுக்கும் பண்பை, கொடுக்கும் நிலையை வெளிப்படுத்த நீயே முக்கிய கருவியாய் இருக்கிறாய்.

கிறிஸ்துமஸ் என்ற வார்த்தையின் முழுமையான பெயர் கொடுப்பது (Art of Giving) என்பது பொருள். நமக்கெல்லா ருக்கும் தெரிந்த வசனம் யோவான் 3 : 16. இந்த வசனத்தில் **"தந்து"**, **"அன்பு கூர்ந்து"** என்ற வசனங்களைக் கூர்ந்து

கவனித்தால் இதனுடைய உண்மைகளை நீங்கள் புரிந்துக்கொள்ள முடியும். "தருகிறது" என்பது அன்பின் அடிப்படையில் அமைகின்ற ஒன்றாகும். தருகிறவன் அன்பு கூறுகிறான், அன்பு கூறுகிறவன் தருகிறான். இந்த அடிப்படையிலேதான் கிறிஸ்மஸ் அமைந்திருக்கிறது. கிறிஸ்துமஸின் சரியான நோக்கமே கொடுப்பது. இன்றைக்கு கிறிஸ்மஸ் சம்பவத்துடன் இணைந்த ஒரு வசனத்தை நமது தியானத்திற்கு இங்கே ஆதாரமாய் எடுத்துக் கொள்ளுவோம்.

மத்தேயு 2 : 11ல் **"அவர்கள் அந்த வீட்டுக்குள் பிரவேசித்து, பிள்ளையையும் அதன் தாயாகிய மரியாளையும் கண்டு, சாஷ்டாங்கமாய் விழுந்து, அதைப் பணிந்து கொண்டு, தங்கள் பொக்கிஷங்களைத் திறந்து, பொன்னையும், தூபவர்க்கத்தையும், வெள்ளைப்போளத்தையும் அதற்குக் காணிக்கையாக வைத்தார்கள்".** கிறிஸ்மஸ் என்பதின் சரியான விளக்கம் இதுதான்.

உன்னுடைய தாலந்துகளை தருவது, (Giving your Talents), திறமைகளைத் தருவது (Giving your Ability), பணத்தைக் கொடுப்பது (Giving your Treasuries), உங்களையே அர்ப்பணிக்கிறது எனப் பொருள்படும்.

யோவான் 3 : 16ல் "தேவன் தந்தார்", "மனிதன் பெற்றுக் கொண்டான்". தேவன் தம்முடைய பகுதியில் மனிதனுக்கு தருவது மட்டுமல்ல, மனிதனும் தேவனுக்கென்று எதையாகிலும் கொடுப்பது **கிறிஸ்மஸ்** ஆகும்.

11ம் வசனம் கடைசி வரியில் "**காணிக்கையாக வைத்தார்கள்**" எனக் குறிப்பிடப்பட்டுள்ளதைக் காண்க. கிறிஸ்மஸ் என்பதற்கு இன்னொரு பொருள் "**அர்ப்பணிப்பு**" என்பதாகும். எந்தவித எதிர்ப்பார்ப்புமின்றி, எந்தவித நோக்கமின்றி, நிபந்தனையின்றி தங்களைத் தாங்களே கிறிஸ்துவுக்கும், நம்மில் அவர் கொண்ட நோக்கத்திற்கும் அர்ப்பணிப்பதுதான் கிறிஸ்மஸ்.

மத்தேயு 2 : 1ம் வசனத்திற்கும், தானியேல் 9ம் அதிகாரத்திற்கும் ஒரு பெரிய பிணைப்பு உண்டு.

இரட்சகர் இயேசு இப்பூமியிலே பிறந்தபொழுது, கிழக்கிலிருந்து சாஸ்திரிகள் அவரைக் காண எருசலேமுக்கு வந்தார்கள். கிறிஸ்துவின் பிறப்பிலே ஏராளமான மக்கள் பிண்ணிப் பிணைந்துள்ளதை இங்கே காணலாம். பிதாவாகிய தேவன், தேவ தூதர்கள், மேய்ப்பர்கள், சாஸ்திரிகள், ஆட்டுமந்தை, மரியாள், யோசேப்பு என பலருக்கும் பங்குண்டு. இவர்கள் இயேசுவின் பிறப்போடு பிணைக்கப்பட்டிருக்கிறார்கள். ஐந்தறிவுள்ள மிருகங்களிலிருந்து, தேவ தூதர்கள் வரை இயேசுவின் பிறப்பில் தொடர்பு கொண்டுள்ளார்கள் என்பது (ஒட்டகம் சாஸ்திரிகளை சுமந்து கொண்டு சென்றது) இங்கே நினைவு கூர வேண்டிய ஒன்றாகும். அன்பான தேவனுடைய பிள்ளையே!, கிறிஸ்துவின் பிறப்பில் படிப்பறியாத மேய்ப்பர்கள், படித்த சாஸ்திரிகள் என பலருக்கும் பங்கு இருக்கும்போது, உங்களுக்கும் பங்கு வேண்டாமா?

எருசலேமுக்கு கிழக்கே 300 மைலுக்கு அப்பால் பாபிலோன் அமைந்துள்ளது. பாபிலோன் புறஜாதியாருடைய

பட்டணம். இந்த பாபிலோனில், கிறிஸ்து பிறப்பதற்கு 60(ஆண்டுகளுக்கு முன்பாக, யூதர்கள் "நேபுகாத்நேச்சார்" என்ற அரசனாலே கைதியாக கொண்டுவரப்பட்டார்கள். அதில் ஒருவன் தான் தானியேல். தானியேலை ஆண்டவா உயர்த்தினபோது அவன் செய்த ஒரு பெரிய காரியம் என்னவென்றால், அவன் ஞானிகளை உண்டுபண்ணினான். ஞானிகளுக்கெல்லாம் ஞானி எதைப் பற்றி பேசுவான்? ஞானத்தைப் பற்றியே பேசுவான். தன்னுடைய ஞானத்தை, தன்னோடுகூட இருந்த ஞானிகளுடன் பகிர்ந்து கொண்டான். ஆண்டவர் தீர்க்கதரிசனமாக சொன்ன வார்த்தையை இவன் ஞானிகளுடன் அன்றைக்குப் பகிர்ந்துக் கொண்டான்.

தானியேல் 9ம் அதிகாரம் 24 முதல் 27 வரை கூறப்பட்டுள்ள இந்த வார்த்தைகளை கவனிக்கவும். மீறுதலைத் தவிர்க்கிறதற்கும், பாவங்களைத் தொலைக்கிறதற்கும், அக்கிரமத்தை நிவர்த்திபண்ணுகிறதற்கும், நித்திய நீதியை வருவிக்கிறதற்கும், தரிசனத்தையும் தீர்க்கதரிசனத்தையும் பண்ணுகிறதற்கும், உன் ஜனத்தின் மேலும், உன் பரிசுத்த நகரத்தின் மேலும், எழுபது வாரங்கள் செல்லும்படி குறிக்கப்பட்டிருக்கிறது.

இப்போதும் நீ அறிந்து உணர்ந்து கொள்ள வேண்டியது என்னவென்றால், எருசலேமைத் திரும்ப எடுப்பித்துக் கட்டுகிறதற்கான கட்டளை வெளிப்படுவது முதல், பிரபுவாகிய மேசியா வருமட்டும் ஏழுவாரமும், அறுபத்திரண்டு வாரமும் செல்லும்; அவைளில் வீதிகளும், அலங்கங்களும் மறுபடியும் கட்டப்படும்; ஆனாலும் இடுக்கமான காலங்களில் இப்படியாகும்.

அந்த அறுபத்திரண்டு வாரங்களுக்குப் பின்பு மேசியா சங்கரிக்கப்படுவார்; ஆனாலும் தமக்காக அல்ல, நகரத்தையும் பரிசுத்த ஸ்தலத்தையும் வரப்போகிற பிரபுவின் ஜனங்கள் அழித்துப் போடுவார்கள். அதின் முடிவு ஜலப்பிரவாகம் போல இருக்கும். முடிவு பரியந்தம் யுத்தமும் நாசமும் உண்டாக நியமிக்கப்பட்டது.

அவர் ஒரு வாரமளவும் அநேகருக்கு உடன் படிக்கையை உறுதிப்படுத்தி, அந்த வாரம் பாதி சென்றபோது பலியையும், காணிக்கையையும் ஒழியப்பண்ணுவார்; அருவருப்பான செட்டைகளோடே பாழக்குகிறவன் வந்து இறங்குவான். நிர்ணயிக்கப்பட்டிருக்கிற நிர்மூலம் பாழக்குகிறவன்மேல் தீருமட்டும் சொரியும் என்றான்.

இதில் ஒவ்வொரு வார்த்தைகளையும் ஆழமாய் தியானித்தால் வரப்போகும் பாவத்தை தொலைப்பதற்கும், பாவத்தை அருவருப்பதற்கும், நிவர்த்தி செய்ய பூமியில் தோன்றப் போகின்ற இரட்சகரை இந்த வசனம் வெளிப்படுத்துகின்றது. இது தானியேலுக்கு தேவன் தந்த வார்த்தை. கிறிஸ்துவின் பிறப்பிற்கு 478 வருடங்கள் முன் சொல்லப்பட்ட இந்த வார்த்தையை சாஸ்திரிகள் இப்பொழுது சிந்திக்கிறார்கள்.

தேவன் சொன்ன தானியேல் 9ம் அதிகாரத்தில் **"பாவங்களை தொலைக்க", "ஜனங்களை விடுதலையாக்க"**, என்ற இந்த மாறாத உண்மையான வார்த்தையை, இந்த ஞானிகளுக்கு தேவன் இங்கே நினைப்பூட்டுகின்றார். இது தானியேல் இவர்களுடைய முற்பிதாக்களுக்கு கூறினது, எழுதி

வைத்தது. இவர்களுடைய முற்பிதாக்கள் தங்கள் பின் சந்ததிக்கு வரப்போகின்ற மேசியாவைப் பற்றி அவ்வப்பொழுது கூறியும், எழுதியும் வைத்தனர். அந்த வார்த்தையை 437 ஆண்டுகளுக்குப் பிறகு, இந்த ஞானிகளுக்கு இதைக் குறித்த ஞானம் வந்தது. **ஞானம்** என்பது வேறு. **அறிவு** என்பது வேறு. ஆண்டவருடைய காரியங்களை அறிந்து கொள்ளத் தேவையானது ஞானம். உலகத்தின் காரியங்களை அறிந்துக் கொள்ள தேவையானது அறிவு. இவர்கள் யார்? ஞானிகள். அப்படியானால், தெய்வீக காரியங்களில் ஈடுபடுகிறவர்கள். இவர்களுக்கு இந்த இராஜ்யத்தைக் குறித்த பாரமும், தரிசனமும் இருந்தது.

தானியேல் கூறின வார்த்தைகள் எப்பொழுது நடைபெறும் என்பதைக் காண, ஞானிகள் ஒருவரோடு ஒருவர் பேசிக் கொண்டார்கள். வருடங்கள் உருண்டாலும், இந்த வார்த்தைகளை இவர்கள் மறக்கவில்லை. அதனால்தான் அவர்கள் ஞானிகள் என அழைக்கப்பட்டார்கள். பிரதான ஞானி என்ன சொல்லிட்டுப் போனாரோ அதையே அவர்கள் எதிர்பார்த்திருந்தார்கள்.

ஒவ்வொரு ஞானியும், ஒவ்வொரு காலக் கட்டத்திலும் மேற்கூறிய இந்த வசனத்தின் நிறைவேறுதலை எதிர்ப்பார்த்துக் கொண்டிருந்தார்கள். கிழக்கத்திய தேசத்திலிருந்து சாஸ்திரிகள் எருசலேமுக்கு வந்தார்கள் என மத்தேயு 2ம் அதிகாரத்தில் வாசிக்கின்றோம். காரணம், இது முற்காலத்தில் சொல்லப்பட்ட ஒரு தீர்க்கதரிசனம். இதற்கு அடையாளம் எருசலேமுக்கும், பாபிலோனுக்கும் உள்ள தூரத்தில் 300 மைல். இடையில் இரண்டு ஆறுகள். ஒன்று ஐபிராத்து, மற்றொன்று யோர்தான்.

இந்த இரண்டு ஆறுகளையும் கடந்துதான் எருசலேமுக்கு இவர்கள் வரவேண்டும். அதற்கு மத்தியில் ஒரு வனாந்திரம் உண்டு. அது சீரியாவின் வனாந்திரம். இப்படியாக வனாந்திரத்தையும், ஆறுகளையும் கடந்தால்தான் எருசலேமுக்குள் காலடி எடுத்து வைக்க முடியும்.

இன்றைக்கு கிறிஸ்துமஸ் செய்தி என்பது நமக்கு கேட்பதற்கு இலகுவாக இருக்கிறது. ஆனால் அன்றைக்கு இந்த செய்திக்காக, செய்தியின் நிறைவேறுதலுக்காக இம்மக்கள் அர்ப்பணித்த தியாகம் மிகப்பெரிது. காடுகளையும், மலைகளையும் கடந்து வந்தது மட்டுமல்ல, 300 மைல் நடைப்பயணம். இவைகளுக்கு மத்தியில் பசி, பட்டினி, குளிர் வனாந்திரம் என எதையும் பொருட்படுத்தாமல் வந்ததற்கு காரணம் அவர்கள் உள்ளத்தில் இச்செய்தியைக் குறித்திருந்த ஒரு மிகப்பெரிய எதிர்ப்பார்ப்பேயாகும். "கிறிஸ்துமஸ்" என்பது ஒன்றை பெறுவது அல்ல, அவருக்காய் ஒன்றைக் கொடுக்க ஆயத்தமாயிருப்பது. ஞானிகள் கிறிஸ்மஸில் "வாங்க" வரவில்லை, "கொடுக்க" வந்தார்கள். எனவேதான் இச்செய்தியின் ஆரம்ப வரிகளிலே கிறிஸ்மஸ் என்பது கொடுப்பதே எனக் கூறப்பட்டுள்ளது. 2ம் வசனத்தில் கிறிஸ்து பிறந்தார் எனக் கூறப்பட்டுள்ளது. கிறிஸ்து இப்பூமியில் பிறந்த அதே ஆண்டில் பாபிலோன் இராஜ்யம் பறிபோனது. இயேசு கிறிஸ்து பிறந்த அக்காலக் கட்டத்திலே பாபிலோனின் அரசாட்சி முற்றிலும் மாற்றப்பட்டது.

எது நடந்தாலும் எங்களுக்கு பரவாயில்லை, எங்கள் மனதில் வேரோடு ஊன்றிப்போன தானியேல் 9 : 24ல் கூறப்பட்டுள்ளபடி பாவத்தை தீர்க்கிற, நித்திய நீதியை இந்த

பூமியில் வருஷிக்கிற ஒருவருக்காய் இந்த ஞானிகள் காத்திருந்தார்கள். இவர்கள் நோக்கமெல்லாம் தானி 9 : 24. எனவேதான் இச்சம்பவம் நடக்க வேண்டிய காலத்தையும், இவர்களுக்கு நடக்க வேண்டிய இடத்தையும் பரிசுத்தாவியானவர் இவர்களுக்கு சுட்டிக்காட்டினார். பரிசுத்தாவியைப் பெற்றவன் தேவனுடைய வார்த்தை எப்பொழுது எங்கே நிறைவேறும் என்பதை நன்கு அறிவான்.

மேசியா வருவார் என்பது உலகத்திற்கு ஒருவேளை கேள்விக்குறியாக இருந்திருக்கலாம். ஆனால் பரிசுத்தாவியானவரால் ஆளப்பட்டிருந்த அவர்களுக்கு இவைகள் கேள்விக்குறியாயிருக்கவில்லை.

"அவர்கள் அந்த வீட்டுக்குள் பிரவேசித்து, பிள்ளையையும் அதின் தாயாகிய மரியாளையும் கண்டு, சாஷ்டாங்கமாய் விழுந்து, அதைப் பணிந்துக்கொண்டு, தங்கள் பொக்கிஷங்களைத் திறந்து, பொன்னையும் தூபவர்க்கத்தையும், வெள்ளைப் போளத்தையும் அதற்கு காணிக்கையாக வைத்தார்கள்" (வ11) இது நீண்ட ஒரு பிரயாணம். மனிதன் ஒன்றை செயல்படுத்த வேண்டுமானால், முதலாவது அச்செயல் அவனது சிந்தையில் இருக்க வேண்டும். செயலுக்கு முன்பாக இருப்பது சிந்தை. இவர்களுடைய சிந்தையிலெளெல்லாம் கர்த்தருடைய வசனமே நிறைந்திருந்தது. இவர்களுடைய நம்பிக்கை, எதிர்பார்ப்பு, ஆசை யாவும் நித்திய நகரத்தையும், மகா பரிசுத்த நகரத்தையும் மையமாய்க கொண்டிருந்தது.

தேவனுடைய திட்டத்தை நினைவு கூறுவதுதான் கிறிஸ்துமஸ். கிறிஸ்துமஸில் பிண்ணிப் பிணைந்திருப்பது கர்த்தருடைய வசனம். எனவேதான் 9ம் வசனத்தில் அவர்கள் அந்த வீட்டிற்குள் சென்று பிள்ளையையும், அதின் தாயாகிய மரியாளையும், **சாஷ்டாங்கமாய் விழுந்துப் பணிந்தார்கள்** என்று எழுதப்பட்டுள்ளது. பணிவதற்கு முன்பதாக அவர்கள் விசுவாசித்தார்கள்.

"எனக்கு விசுவாசம் இருக்கிறது, என்னால் எல்லாம் செய்ய முடியும்", என்று கூறும் மக்களுக்கு இச்சம்பவத்தின் வாயிலாக ஒன்றை நீங்கள் அறிந்துகொள்ள விரும்புகின்றேன். விசுவாசம் மட்டும் இருந்தால் போதாது, விசாரனையும் (கேட்கும் தன்மை) தேவை. ஏரோது இராஜா நட்சத்திரத்தைக் குறித்து அறிந்துக்கொள்ள சாஸ்திரிகளிடம் விசாரித்தான். அவனை விசாரிக்கத் தூண்டியவர்கள் சாஸ்திரிகள்தான்.

நீங்கள் எவ்வளவு உலகப்பிரகாரமான ஞானியாய் இருந்தாலும், உங்களுக்கும் சில நேரங்களில் ஆலோசனைத் தேவை. நாங்கள் "அந்நிய பாஷையில் எப்பொழுதும் நிரம்பியே இருக்கின்றோம். எங்களுக்கு பிரசங்கமே தேவையில்லை" என்ற தப்பான எண்ணத்தோடு வாழ்பவர்களுக்கு இச்சம்பவம் ஒரு சிறந்த எடுத்துக்காட்டு. நீங்கள் எவ்வளவு பெரிய மனிதராயிருந்தாலும், உங்களுக்கு ஒரு வேதபாரகர் தேவை. அந்த சாஸ்திரிகள் வேதபாரகர்களிடம் கேட்க, அந்த வேதபாரகர்கள்தான் மீகா 5 : 2ஐ அவர்களுக்கு சுட்டிக் காண்பித்தார்கள்.

வேதத்தில் தேர்ந்தவன் வேதபாரகன், ஞானத்தில் தேறினவன் ஞானி, சுத்தத்தில் தேறினவன் பரிசுத்தவான். இந்த கிறிஸ்துமஸ் காலங்களில் உங்களின் "தேர்ச்சி" எதை மையமாய் கொண்டுள்ளது என்பதை ஒரு நிமிடம் சிந்திக்க அன்புடன் கேட்டுக்கொள்ளுகிறேன்.

எனக்கு மறைவாக இருக்கும் பல சத்தியங்கள் உங்களுக்கு வெளியரங்கமாக இருக்கலாம். உங்களுக்கு மறைவாக இருக்கும் சில சத்தியங்கள் எனக்கு வெளியரங்கமாக இருக்கலாம். எப்படியிருந்தாலும், நாம் விசாரிக்கிறவர்களாய் பூமியிலேக் காணப்படுவோம். இதுவே கிறிஸ்துமஸ் கூறும் இரண்டாவது சத்தியம்.

உ. விசாரிக்கின்ற வாழ்க்கையில் பிரயாசம் தேவை

இந்த ஞானிகள் இரட்சகரைக் காண எத்தனை பாடுபட்டிருப்பார்கள் என்பதை சற்றே எண்ணிப்பாருங்கள். பிரயாணத்தின் மத்தியில் எங்கே உறங்கினார்கள், எங்கே உண்டார்கள் என்பதை நாமறியோம். ஆனால் இவைகள் இவர்களுக்கு பிரதானமாய் இருக்கவில்லை. இவர்களுக்குள் இயேசுவைக் காண வேண்டும் என்ற ஆயத்தமும், ஆதங்கமும் இருந்தது. இவர்கள் ஞானிகள் அல்லவா? எனவே வித்தியாசமான கண்ணோட்டத்துடன் இந்தப் பிள்ளையை இவர்கள் கண்டார்கள். இதுவே இந்தப் பிள்ளையிடம் அவர்களை உந்தித்தள்ளியது. தொடர்ந்து, அவர்கள் செய்த காரியங்களை தியானிப்போம்.

அந்த வீட்டிற்குள் சென்றவுடன் அந்த குழந்தையின் பாதத்தில் சாஷ்டாங்கமாய் பணிந்தார்கள். பொதுவாக, அறிவாளி அறிவைப் பற்றி பேசுவான். ஞானி ஞானியைப் பற்றி சிந்திப்பான். ஒருவேளை நீங்களும், நானும் இந்த குளிரில் சென்றிருந்தால் குழந்தையை இப்படி விட்டுவைத்து இருக்கிறீர்களே, குளிர்காலத்திற்கு கம்பளி போர்வையாவது போடக்கூடாதா? என்றெல்லாம் கேள்வி கேட்டிருப்போம்.

ஆனால் இக்கேள்விகளுக்கு இங்கே இடமில்லை. காரணம், அவர்களிடமிருந்தது 1. தேவனுடைய வார்த்தை, 2. எதிர்ப்பார்ப்பு, 3. விசுவாசம், 4. விசாரணை, 5. ஆயத்தம், 6. பிரயாசம், தொடர்ந்து அவர்கள் செய்த கிரியைகளைத் தியானிப்போம்.

பொக்கிஷங்களைத் திறந்தார்கள் பொதுவாக, அறிவு இருக்கிற இடத்தில் பணம் இருக்காது என்று கூறுவார்கள். பணம் உள்ள இடத்தில் அதிகமாக அறிவுக்கு இடமிருக்காது என்பது பொதுவான கருத்து. இவர்களோ ஞானிகள், இவர்களுக்கு இந்த ஐசுவரியங்கள் எங்கிருந்து வந்தது என்பது கேள்விக்குறியே. இது ஒன்றே இவர்களின் ஒரே பொக்கிஷமாக இருந்திருக்க வேண்டும். தாங்கள் என்றைக்கு இரட்சகரை பார்ப்போம் எனத் தெரியாத காரணத்தினால், இதைப் பத்திரப்படுத்தி வைத்திருந்தார்கள். ஏற்கனவே, தங்கள் பொக்கிஷங்களை ஆயத்தம்பண்ணியும், சேர்த்துவைத்த இந்த ஞானிகள் இரட்சகர் இயேசுவைக் கண்டவுடன், இந்த பொக்கிஷங்களைத் திறந்தார்கள். சிறுக சிறுக எறும்பு சேர்த்து வைப்பதுபோல, சேமித்து வைத்த தங்கள்

பொக்கிஷங்களை இரட்சகரின் பாதத்தில் அர்ப்பணிப்பதுதான் கிறிஸ்துமஸ். இது இராஜாக்களுக்கு செலுத்தும் காணிக்கைகளைக் குறிக்கின்றது. இந்த ராஜாவிற்காகவே, இந்த காணிக்கைகளை சேர்த்தும் வைத்தார்கள். அவர்கள் இவர் ராஜா என்பதைத் திட்டமாய் அறிந்திருந்தார்கள். இன்றைக்கு கிறிஸ்துமஸ் கொண்டாடுகின்ற என் அன்பு சகோதரனே, சகோதரியே! இவர் உன்னுடைய வாழ்வில் ராஜாதானா என்பதை ஆராய்ந்து பாருங்கள். இவர் ராஜாவாயிருந்தால் உன்னுடைய உடமைகள், நேரங்கள் யாவும் இவருக்காய் திறக்கப்படும். உன்னுடையவைகளை இவருக்காய் திறக்கும் மேலான சுபாவம் உனக்குண்டா? ஒரு நோயாளி மருத்துவரிடத்தில் தன் வியாதிகளை திறக்கின்றான். மேலும் தன் நீதிக்காக மனிதர்கள் தங்கள் வழக்கறிஞரிடம், தங்கள் இருதயத்தை திறக்கின்றார்கள். அப்பொழுது மட்டுமே அவர்களுடைய பிரச்சனைகளுக்கு பதில் உண்டு.

உன்னுடைய வாழ்க்கையின் பிரச்சனைகளுக்கு நீ பதில் பெறவேண்டுமானால், உன்னுடையவைகளை ஆண்டவருக்காய் ஒப்புக்கொடுக்கும் மேலான இருதயம் உனக்குத் தேவை. இவர் ராஜா என்பதையும், உன்னுடைய உடமைகளுக்கு இவர் உரிமையாளர் என்பதையும் கீழ்க்காணும் வசனங்கள் விளக்குவதைக் காணலாம்.

யோவான் 19 : 19ல் பிலாத்து ஒரு மேல் விலாசத்தை எழுதி, சிலுவையின் மேல் போடுவித்தான். அதில் நசரேயனாகிய இயேசு யூதருடைய ராஜா என்று எழுதியிருந்தது.

ஏசாயா 9 : 7 - தாவீதின் சிங்காசனத்தையும்

அவனுடைய ராஜ்யத்தையும் அவர் திடப்படுத்தி.... அதின் சமாதானத்துக்கும் முடிவில்லை.

மத் 6 : 10 உம்முடைய ராஜ்யம் வருவதாக

வெளி 5 :10 எங்கள் தேவனுக்கு முன்பாக எங்களை ராஜாக்களும் ஆசாரியர்களுமாக்கினீர்.........

வெளி 20 : 4 கிறிஸ்துவுடனே கூட ஆயிரம் வருஷம் அரசாண்டார்கள்.

வெளி 19 : 16 ராஜாதிராஜா, கர்த்தாதி கர்த்தா என்னும் நாமம்.... எழுதப்பட்டிருந்தது.

இவ்வுலக ராஜ்யத்தையும், மறுமையின் இராஜ்ஜியத்தையும் சுமக்கும் ஆண்டவர் இவர்.

இவ்வுலகத்திலுள்ள முழுமையான அரசாங்கங்கள் யாவும், அவர் தோளில் இருக்கிறது. (வெளி 5 : 10, 19 : 11 - 16, 20 : 4, 19 : 5). அவர் இராஜாதி இராஜாவாக இருக்கின்ற காரணத்தினால் நீங்கள் அவருடன் நித்தியக் காலமாய் அரசாளப் போகிறீர்கள். இந்த இராஜாவினால் நீங்களும், நானும் இந்த அந்தஸ்தை பெறுகிறோம்.

அவரை உங்கள் வாழ்க்கையில் நீங்கள் நேசிப்பதினால் உங்களுக்கு அதிகாரமும், உரிமையும் அளிக்கப்படுகின்றது. இந்த ஆண்டவர் உங்கள் வாழ்க்கையின் சொந்தக்காரர். வீட்டின் உரிமையாளருக்கு எப்படி வீட்டு வாடகையை வசூலிக்க உரிமையுண்டோ, அதைப்போல

உன்னுடைய உரிமைகளை உரிமைப் பாராட்ட அவருக்கு உரிமை உண்டு. இது ஆண்டவரின் உரிமை. ஆண்டவர் உன்னுடைய பொக்கிஷங்களை கட்டாயம் எதிர்ப்பார்க்கிறார் என்பதை அறிந்துகொள்.

உண்மையான அன்பு அடுத்தவனை மகிழ்ச்சியாக்கும். ஞானிகளுடைய இந்த பொக்கிஷம் மரியாளையும், யோசேப்பையும் மகிழ்ச்சியாக்கியது. உங்களது உண்மையான அன்பு அடுத்தவரை மகிழ்ச்சியாக்கும். இப்பொழுது மரியாள், யோசேப்புக்கும் எல்லையில்லா சந்தோஷம். இரட்சகர் இயேசு அந்த வீட்டில் பிறந்த காரணத்தினால் பொக்கிஷங்கள் குவிந்தன. அல்லேலூயா. இரட்சகர் இயேசு பிறந்ததினால் அந்த வீட்டில் விலையேறப்பெற்ற ஆசீர்வாதம் பிரவேசித்தது. கொடுப்பது முக்கியமல்ல அவரை இராஜாவாய் அங்கீகாரம் செய்து உன் வாழ்க்கையின் மையப்பொருளாய் வைத்துக்கொள்வதுதான் மிகப்பெரிய ஆசீர்வாதமாகும். உன்னுடைய இதயம், உன்னுடைய வீடு, உன்னுடைய பணம், ஆகிய இவைகளில் ஆண்டவருக்கு உரிமையுண்டே.

தொடர்ந்து, அவர்களது **இரண்டாவது** காணிக்கையான தூபவர்க்கத்தைக் குறித்து தியானிப்போம். தூபவர்க்கம் என்பதற்கு சரியான பொருள் "**துதி**", "**ஜெபம்**" எனப் பொருள்படும். இது எப்படி செய்யப்படுகின்றத என்பதை யாத் 30 : 34, 38 வரை உள்ள வசனங்களில் காணலாம்.

பின்னும் கர்த்தர் மோசேயை நோக்கி "சுத்த வெள்ளைப் போளமும் குங்கிலியமும் அல்பான் பிசினுமாகிய

கந்தவர்க்கங்களையும் சுத்தமான சாம்பிராணியையும், நீ சமநிறையாக எடுத்து,

தைலக்காரன் செய்கிறதுபோல அதற்குப் பரிமள மேற்றி, துப்புரவான பரிசுத்த தூபவர்க்கமாக்கி,

அதில் கொஞ்சம் எடுத்துப்பொடியாக இடித்து, நான் உன்னைச் சந்திக்கும் ஆசாரிப்புக் கூடாரத்திலிருக்கும் சாட்சி சந்நிதியில் வைப்பாயாக; அது உங்களுக்கு மகா பரிசுத்தமாயிருக்கக்கடவது.

இந்தத் தூபவர்க்கத்தை நீ செய்ய வேண்டிய முறையின்படி உங்களுக்காகச் செய்து கொள்ளலாகாது, இது கர்த்தருக்கென்று உனக்கு பரிசுத்தமாயிருப்பதாக.

இதற்கு ஒப்பானதை முகருகிறதற்காகச் செய்கிறவன் தன் ஜனத்தில் இராதபடி அறுப்புண்டு போகக்கடவன் என்றார்". யாத் 30 : 34 - 38

இது ஒரு கூட்டுப்பொருளாகும். நான்கு பொருட்களும் சமநிலையாக கலக்கப்பட வேண்டும். இது ஆசரிப்புக் கூடாரத்தின் உள்ளேயுள்ள சாட்சிக் கூடாரத்தில் கொண்டுபோய் வைக்க வேண்டும்.

இதைப்போலவே உன்னுடைய துதியும், உன்னுடைய ஜெபமும், உன்னுடைய சுதந்திரமும், உனக்கென்று இல்லாதபடி எல்லாமும் ஆண்டவருக்காய் அமைவதே தூபவர்க்கமாகும். இது தெய்வீகத்தைக் குறிக்கின்றது. இதைத்தான் வெளி 5 : 8ல் இவ்விதமாய் வாசிக்கின்றோம்.

"அந்தப் புஸ்தகத்தை அவர் வாங்கினபோது, அந்த நான்கு ஜீவன்களும், இரு த்துநான்கு மூப்பர்களும் தங்கள் தங்கள் சுரமண்டலங்களையும், பரிசுத்தவான்களுடைய ஜெபங்களாகிய தூபவர்க்கத்தால் நிறைந்த பொற்கலசங்களை பிடித்துக்கொண்டு", என்று எழுதப்பட்டுள்ளது. நீங்கள் ஏறெடுக்கும் ஒவ்வொரு ஜெபத்தையும் தேவதூதர்கள் உற்றுப் பார்க்கிறார்கள். உங்களுடைய இராஜாவாகிய இயேசு கிறிஸ்து அதிலே மகிமைப்படுகின்றார். இன்றைக்கு நம்முடைய துதிக்கெல்லாம் பாத்திரர், அன்றைக்கு பெத்லகேமில் வெளிப்பட்ட இந்த "பிள்ளை"தான். இவ்வளவு பெரிய வெளிப்பாடு! இந்த சாஸ்தரிகளுக்குள் இருந்தது என்பதை நினைக்கும்போது ஆச்சரியப்படாமல் இருக்க முடியாது. இந்த வீட்டிற்குள் உள்ளே பிரவேசித்து இந்த குழந்தை கறுப்பா, வெள்ளையா என்று பார்க்கவில்லை. மாறாக அவர்களுடைய நினைவெல்லாம் இந்த இராஜாவையே மையமாக கொண்டிருந்தது.

மூன்றாவது, வெள்ளைப்போளத்தை கொடுத்தார்கள். இது ஒரு இயற்கைப்பொருளாகும். இது தயாரிக்கப்படும் விதத்தை யாத் 30 : 34 வரை உள்ள வசனத்தில் காணலாம். இது இராஜாவின் சிரசிலே ஊற்றப்படும் அபிஷேக தைலமாகும். இந்த வெள்ளைப்போளம் அபிஷேகத்தைக் குறிக்கின்றது. இந்த அபிஷேகத்தில் ஒலிவ எண்ணெய், மற்ற இயற்கையின் பொருட்கள் அடங்கி இருக்கிறது. வெள்ளைபோளம் இரண்டாவதாக பயன்படுத்தப்படும் இடம் மரித்தவர்களின் வீடுகளாகும். மரித்துப்போனவருக்கு இதை பயன்படுத்துவார்கள். இராக்காலத்தில் இரட்சகர் இயேசுவின்

சரீரத்திற்கு நிக்கோதேமு வெள்ளைப் போளத்தை கொண்டு வந்து வைத்தார் என யோவான் 19 : 39ல் காணலாம். வெள்ளைப்போளம் என்று சொல்வது **"அபிஷேகம்" "பாதுகாப்பு"**.

நான்காவதாக இது பாடுகளைக் குறிக்கின்றது. துக்கம் நிறைந்தவரும், பாடுகள் அனுபவித்தவராய் இவர் பூமியில் காணப்பட்டார். இந்த வெள்ளைப்போளத்தைதான் மரியாள் அவர் பாதங்களில் உடைத்து ஊற்றினாள் என யோவான் 12 : 7ல் கூறப்பட்டுள்ளது. "என்னை அடக்கம் பண்ணும் நாளுக்காக இதை வைத்திருந்தாள்" என இரட்சகர் கூறிய வார்த்தைகள் இது பயன்படுத்தபபட வேண்டிய நாளையும் இதன் அவசியமான தன்மையையும் குறிக்கின்றது. அவர் இராஜா, துதிகளுக்கெல்லாம் பாத்திரர். மட்டுமல்ல, மனிதன் வாழ்க்கையில் துன்பங்களை கடக்கும்போது அந்த துன்பங்களை இன்பமாய் மாற்றும் நேசர் என்ற மாபெரும் உண்மையை அறிந்திருந்த காரணத்தினால் இந்த வெள்ளைப்போளத்தையே இவர்கள் காணிக்கையாக்கினதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை.

என் அன்பு வாசகரே. இக் கிறிஸ்துமஸ் காலங்களில் உங்களையும், உங்களுடையவைகளையும், உங்கள் நேரங்களையும் கொடுங்கள். பண்டிகை முக்கியமல்ல, கிறிஸ்துவே முக்கியம். அவரையே மையமாக வையுங்கள். மற்ற எல்லாவற்றையும் விளிம்பில் வையுங்கள். இந்த கிறிஸ்துமஸ் அர்த்தமுள்ள ஒரு கிறிஸ்துமஸாக மாறட்டும்.

அறிந்துகொள்ள

இரட்சகர் இயேசு கிறிஸ்துவைக் குறித்த தீர்க்கதரிசனங்களின் நிறைவேறுதல்

		தீர்க்கதரிசனம்	நிறைவேறுதல்
1.	இம்மானுவேல்	ஏசா 7 : 14	மத்1 : 22,23
2.	பெத்லேகேம்	மீகா 5 : 2	மத் 2 : 6
3.	எகிப்து	ஏசா 11 : 1	மத் 2 : 15
4.	ராமாவில்	எரேமியா 31 : 15	மத் 2 : 18
5.	நாசரேத்	பெயர் சொல்லப் படாத தீர்க்கதரிசி	மத் 2 : 23
6.	வனாந்திரத்தில்	ஏசாயா	மத் 3 : 3
7.	கலிலேயா	ஏசாயா	மத் 4:14- 16

ஊழியருக்கு

கர்த்தரின் பட்சத்தில் நிற்பவன் யார்!

மோசே பாளையத்தின் வாசலில் நின்று "கர்த்தரின் பட்சத்தில் நிற்பவன் யார்" என்றார்.

இந்த வார்த்தைகளை தேவ மனிதனாகிய மோசே யாத் 32 : 26ல் உடைந்த உள்ளத்தோடும், பாரத்தோடும், கூறுவதை நீங்கள் காணலாம்.

பொதுவாக நாம் நம்முடைய வாழ்க்கையில் உயர்ந்த அனுபவங்களை அடையும்போது, வாழ்க்கையின் சகலமும் உயர்ந்துவிடும் என்று நினைக்கிறோம். உயர்ந்த அனுபவங்களை அடையும்போது தங்களின் பொருளாதாரம் உயரும், மதிப்பு உயரும் என்று நினைக்கிற மக்கள் இன்று ஏராளம். ஆனால் வாழ்க்கையின் உயர்ந்த அனுபவங்களை,

படிப்பினையை அடையும்போது எதிர்ப்பார்க்காத சில மோசமான விளைவுகளை நாம் சந்தித்தே ஆகவேண்டும். அப்படியென்றால், நாம் பெற்ற உயர்ந்தனுபவங்களுக்கும், நாம் சந்திக்கும் மோசமான விளைவுகளுக்கும் ஏதாகிலும் தொடர்பு உண்டா, எனக் கேள்வி கேட்போர் ஏராளம்.

ஆவியானவரோடு உள்ள நெருக்கமான உறவு அவரோடுகூட இரண்டற கலந்திருப்பது, தெய்வீக சுகத்தை மற்றவர்களுக்கு அளித்து அவர்களை வசனத்தின் மூலமாய் ஆசீர்வதிப்பது, தனிப்பட்ட வாழ்க்கையில் ஆவிக்குரிய நன்மைகளை பெறுவது, அதன் மூலமாக இரட்சிப்பை தேசத்தில் கட்டளையிடுவது ஆகிய இவைகள்தான் உயர்ந்த அனுபவங்களாகும்.

இப்படிப்பட்ட நிலைகளை அடையும்போது இனி பிரச்சனையில்லை, கர்த்தர் என்னை உயர்ந்த நிலைக்கு கொண்டுபோய் விட்டார், என் வாழ்க்கையின் பொருளாதார நிலைகளை மாற்றியமைத்து விட்டார், இனி வாழ்க்கையில் மோசமான விளைவுகள் ஏற்படாது என்று எண்ணுவோமேயானால் அதுவே ஒரு மோசமான, தவறான விளைவாகும்.

இப்படிப்பட்ட மோசமான விளைவுகளைச் சந்திக்க உன்னை ஆயத்தப்படுத்தவே பல நேரங்களில் வாழ்க்கையின் விரக்திகளை, ஏமாற்றங்களை, அனுமதிக்கின்றார். இவைகளை சந்திப்பது என்பது தவிர்க்க முடியாத ஒன்றாகும். இப்படிப்பட்ட

மேடு பள்ளங்களை நீ சந்திக்கவும் அப்படிப்பட்ட பிரதி கூலங்களில் ஆண்டவரை மகிமைப்படுத்தவுமே ஆண்டவர் உயர்ந்த அனுபவங்களை உனக்கு தருகிறார். உன்னுடைய வேத அறிவும், ஆவியின் நிறைவும் வாழ்க்கையில் நீ சந்திக்கிற சோதனையான கட்டங்களை தாண்டிச் செல்லவே.

சிலர் தங்களுடைய வாழ்க்கையில் ஏமாற்றம், தோல்வி இவைகள் ஏற்படவே கூடாது என்று நினைப்பது தவறான எண்ணமும் முதிர்ச்சியில்லாத தன்மையே!

உயர்ந்த அனுபவங்களை பெற்ற ஒரு மிகப்பெரிய தேவ மனிதனுடைய வாழ்க்கையில், ஒரு மிகப் பெரிய வீழ்ச்சி காத்துக்கொண்டிருந்தது. அந்த வீழ்ச்சியில்தான், எத்தனை பெரிய அனுபவங்களை இத்தேவ மனிதன் பெற்றார் என்பதை வெளிப்படுத்தவும், தோல்விகளை சந்திக்கிற நேரத்தில்தான் பெற்ற அனுபவங்களும், ஆழமான தன்மைகளும் உண்மைகளா என்பதும், அதனுடைய தன்மையும், ஸ்திரமும் புலப்படும். இவைகள்தான் நீங்கள் யார் என்பதை, எத்தன்மையுள்ளவர்கள் என்பதையும் வெளிப்படுத்தும்.

இத்தகைய பிரதிகூலங்கள், மோசமான நிலைகள் வாழ்க்கையில் பலருக்கு ஏற்பட்டதுண்டு. நான் ஆண்டவரை பார்த்தேன், அவரோடு பேசுகிறேன், பரலோகத்திற்கு போனேன், பல பாஷைகள் பேசுகிறேன், மணிக்கணக்காய் முழங்காலில் நிற்கிறேன், பேய்களை துரத்துகிறேன், தீர்க்கதரிசனம் உரைக்கின்றேன் எனக்கூறும் என் அன்பான

கர்த்தருடைய பிள்ளையே! இவையெல்லாம் பொய் என்று சொல்ல மாட்டேன். உன்னை சந்திக்கிற எதிர்மறையான காரியங்களில், பிரதிகூலமான சூழ்நிலைகளில் வாழ்க்கையின் தோல்விகள் யார் மூலமாய் ஏற்படக் கூடாதோ, அவர்கள் மூலமாய் இவைகள் ஏற்படும்போது அதைத் தாங்குகிற மனப்பக்குவம்தான் உன் வாழ்க்கையில் உயர்ந்த அனுபவங்களை உண்மையென்று வெளிப்படுத்தும்.

இங்கே தேவ மனிதனாகிய மோசேயின் வாழ்க்கையை உங்கள் முன் நிறுத்த விரும்புகிறேன். அவர் வாழ்க்கையில் ஒரு சம்பவம், இச்சம்பவத்திற்கும், அவருடைய கசப்பிற்கும், மேலே கூறப்பட்ட இந்த கேள்விக்குறிக்கும் காரணம் மோசேயினுடைய சொந்த சகோதரனே!

கர்த்தரின் பட்சத்தில் நிற்பவன் யார்? இதுதான் அன்றைக்கு மோசேயின் கேள்வி. மோசே சபை நடுவே நின்று எந்த மக்களுக்காக தன்னுடைய வசதி வாய்ப்புகளை இழந்து அவர்களுக்காக தன்னை ஒப்புக் கொடுத்தாரோ, அதே மக்களைப் பார்த்துக் கேட்ட கேள்விதான் இக்கேள்வி.

இவர்கள்தான் மோசேயிடம் நீங்கள் மலைக்குப் போய் வாருங்கள். உங்களை எப்பொழுதும் அரவணைப்போம், உங்களை மறக்கவே மாட்டோம், என்று சொன்னவர்கள். ஆனால், இன்றோ அவருடைய உணர்ச்சிகளைக் காலால் போட்டு மிதிக்கும் நிலை. இவர்களுடைய காரியங்கள் இந்த தேவ மனிதனை எந்த அளவுக்கு பாதித்து விட்டது. இத்தேவ

மனிதனின் உணர்ச்சிகளை, தரிசனங்களை, வரங்களை, நோக்கங்களை எல்லாவற்றையும் மிதித்து சுக்குநூறாக்கின. இப்படிப்பட்ட மக்களை நோக்கித்தான் இந்த வார்த்தை அன்றைக்கு கேட்கப்பட்டது. இந்த வார்த்தைக்குள் இருக்கிற இன்னொரு பொருள் என் பட்சத்தில் (கர்த்தருடைய பட்சத்தில்) இருக்கிறவர்கள் யார்? அப்படியென்றால் நீங்கள் எந்தக் கூட்டத்தைச் சார்ந்தவர்கள்? இரண்டு வித்தியாசமான கூட்டத்தார் எப்பொழுதும் இப்பூமியில் உண்டு.

முதல் கூட்டத்தார் கர்த்தரைப் பிரியப்படுத்த விரும்புகிற, கர்த்தரோடு சேர்ந்து வாழ, தேவனுடைய முடிவில்லா இரக்கங்களுக்கும், ஞானத்திற்கும் உரிமையாளர்களாய் வாழ விரும்பும் ஒரு கூட்டம். இவர்களே கர்த்தருடைய பட்சத்தில் நிற்கும் கூட்டத்தார் ஆவார்கள். இவர்களுடைய ஆசை விருப்பமெல்லாம் தேவனும், தேவனுடைய காரியங்களுமே.

இரண்டாவது கூட்டத்தார் :- சத்துருவின் பக்கம் நிற்பவர்கள். இதை வேறொரு வார்த்தைகளினால் கூறினால் மனித புகழின் பட்சம், பெருமையின் பட்சம், ஆணவத்தின் பட்சம் என பொருள் கொள்ளலாம். வெள்ளி, பொன் விலையேறப்பெற்ற பொருட்கள் ஆகிய இவைகளைச் சார்ந்த மற்றொரு கூட்டம்.

பலவீனம், பாவம், அந்தகாரம், அசுத்தம், உலகத்தின் மாயை, உலகத்தின் கவர்ச்சி, வாழ்க்கையின் அன்றாடத்

தேவைகள் சந்திக்கப்பட "எதையும் செய்யவும் ஆயத்தம்" என்ற நிலையில் வாழ்பவர்கள்.

எப்பொழுதும் இந்த இரண்டு கூட்டத்தாரும் கலந்தே காணப்படுவார்கள். அன்பானவரே! உங்களுடைய நோக்கங்கள் எப்படிப்பட்டது என்பதை ஒரு கணம் சிந்திக்க அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். **உங்களுடைய நோக்கங்கள் வருங்காலத்தை முன்னிட்டே இருக்கட்டும்.** அதாவது இயேசு கிறிஸ்து இன்னும் 100 வருடங்களுக்கு பிறகு வருவார் என்ற எண்ணத்துடன் அவருக்காய் திட்டங்கள் தீட்டி செயல்படுங்கள். அதே வேளையில் "இன்றைக்கு வருவார்" என்று எதிர்பார்த்து ஆயத்தமாயிருங்கள். இப்பொழுது இந்த இரு கூட்டத்தாரும் இரண்டறக் கலந்திருக்கின்ற காரணத்தினாலே இக்கேள்விக்கு அவசியமாயிற்று. இன்றும் திருச்சபைகளில் இரண்டு கூட்டத்தாரும் கலந்து இருக்கின்ற நிலையைக் காணலாம். இவைகள் மேலோட்டமான பார்வைக்கு ஒன்றும் தெரியாது.

கோதுமையும், பதரும் சேர்ந்தே கலந்து காணப்படும். அதை பிரிப்பதுதான் திருச்சபையில் ஆவியானவரின் வேலை. இதைக் கண்டுபிடிப்பது சற்று கடினமானாலும், சாத்தியமானதே!

பிரிந்து வாழ வேண்டியதின் அவசியம்

இன்று நல்லவர்களும், தீயவர்களும், பரிசுத்தவானும், துன்மார்க்கனும், தேவபக்தியுள்ளவர்களும், தேவபக்தி

யற்றவர்களும், விசுவாசமுள்ளவர்களும், விசுவாசமில்லாதவர்களும் உலகம் முழுவதும் இரண்டற கலந்தே வாழ்கின்றனர். எனவேதான் இக்கேள்வி இங்கே கேட்கப்படுகிறது.

அழைப்பின் நோக்கம்

கர்த்தருடைய பட்சத்தில் நீதி, நியாயம், சத்தியம், விவேகம், வெளிச்சம், உண்மை, மனதுருக்கம், பரிசுத்தம் ஆகியவைகள் உண்டு. சாட்சியின் வாழ்க்கை உண்டு. இது நிச்சயமாய் வாழ்க்கையில் நடைபெற வேண்டிய ஒன்றாகும். எனவேதான் அப்போஸ்தலனாகிய பவுல் 2கொரி 6 : 17ல் **"ஆனபடியால், நீங்கள் அவர்கள் நடுவிலிருந்து புறப்பட்டுப் பிரிந்து போய், அசுத்தமானதைத் தொடாதிருங்கள்"** என்று சொல்கிறார். நான் அங்கும் இருப்பேன், இங்கும் இருப்பேன் எனக்கூறி பிரிந்துவாழும் வாழ்க்கையை உதாசீனப்படுத்துவீர்களேயாகில், உங்களுடைய வாழ்க்கையின் முடிவு பரிதாபமாயிருக்கும் என்பதை மிகுந்த துக்கத்தோடு இங்கே சொல்ல விரும்புகிறேன்.

இப்படிப்பட்ட மக்களுக்குத்தான் இன்று ஆண்டவர் ஒரு அன்பின் அழைப்பை தருகிறார். இந்த அழைப்பு ஒரு அன்பின் அழைப்பு! இந்த அழைப்பு திருச்சபையிலே, சமுதாயத்திலே, குடும்பங்களிலே, தேசத்திலே நாளுக்கொரு நாள் வேடம் மாறி கலந்து வாழ்கிற என் அன்பான சகோதரனே! சகோதரியே! நீங்கள் கர்த்தருடைய பட்சத்தில் நிற்பவரா? அல்லது சத்துருவின் பட்சத்தில் நிற்பவரா? என்பதை ஒரு கணம் இங்கே சிந்திக்க வேண்டுகின்றேன்.

செங்கடலை பிளந்த மோசே மக்களைப் பிரிக்க முடியாமல் தவிக்கும் ஒரு குழப்பத்தை இங்கே காணலாம். இதைக் கண்டுபிடிப்பது என்பது மிகவும் கஷ்டமானதுதான் அப்படி கண்டுபிடித்துவிட்டால் அவன் "ஞானி", "விவேகி" என்ற நிலைக்கு ஆளாகிவிட முடியும்.

இந்த அழைப்பிற்கு காரணமென்ன! எதற்காக இந்த வார்த்தைகளை சொல்லுகிறார் என்பதின் பதிலை 27ம் வசனத்தில் காணலாம். தேவனுடைய கோபம் காத்துக் கொண்டிருக்கிறது. மாத்திரமல்ல, ஆண்டவருடைய கோபாக்கினையின் நாள் வந்துவிட்டது. ஆண்டவருடைய கோபாக்கினை, தேவனுடைய நியாயத்தீர்ப்பு, தேவனுடைய வீட்டில்தான் முதன்முதலாக ஆரம்பிக்கும் என வேதம் தெளிவாகப் போதிக்கிறது.

அன்பான ஊழியரே! நீங்கள் தேவனுடைய பட்சத்திலா? உலகத்தின் பட்சத்திலா? நீங்கள் நீங்களாகவே இருக்க முயற்சியுங்கள். வேறு ஒருவராய் இருக்க விரும்பவேண்டாம். அது உங்கள் அழைப்பும் தகுதியுமல்ல.

இது கடைசி காலம்! தேவனுக்கு சுடர்களாய், தீபங்களாய், சிங்காரவனமாய், தோட்டமாய் வாழ தீர்மானியுங்கள். தேவன் உங்களை அப்படியே நடத்துவார்!

அர்ப்பணிப்பின் செய்தி

தேவனுக்கென்று ஒப்புக் கொடுத்தவைகளில் உண்மையாயிரு!

இன்றைக்கு ஆவிக்குரியவர்கள் தங்கள் அவசரத்திற்காகவும் அவசியத்திற்காகவும் பல காரியங்களில் தங்களை ஒப்புக்கொடுக்கின்றார்கள். ஆனால் "ஒப்புக்கொடுக்கப் பட்ட" காரியங்களில் கடைசிவரை நிலைத்திருப்பதில்லை. காரணம் அவர்கள் ஒப்புக்கொடுத்தல் "ஒப்புக்காகவே".

வேதம் ஒப்புக்கொடுத்தலைக் குறித்து ஏராளமாய் போதிக்கின்றது. ஞானியான சாலொமோன் கூறும் சில வார்த்தைகளை இங்கே கவனிக்கவும்.

நீ தேவனுக்கு ஒரு பொருத்தனை பண்ணிக் கொண்டால், அதைச் செலுத்தத் தாமதியாதே; அவர் மூடரில் பிரியப்படுகிறதில்லை; நீ நேர்ந்து கொண்டதைச் செய், நீ நேர்ந்து கொண்டதை செய்யாமற் போவதைப் பார்க்கிலும், நேர்ந்து கொள்ளாதிருப்பதே நலம். பிரசங்கி 5 : 4, 5.

நான்காம் வசனத்தினுடைய கடைசி வார்த்தையில் "**நேர்ந்து கொண்டதைச் செய்**" என்றும், ஐந்தாம் வசனத்தின் கடைசிப் பகுதியில் "**நேர்ந்து கொள்ளாதிருப்பதே நலம்**" என்றும் இரண்டு எதிர்மறையான காரியங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளதை சற்றே ஆழமாய்க் கவனிக்கவும். நம்முடைய வாழ்க்கையின் தோல்விகளுக்கு பல காரணங்கள் உண்டு. அதில் ஒரு காரணத்தை உங்களுக்கு இங்கே சுட்டிக்காண்பிக்க விரும்புகின்றேன்.

இன்றைய மனிதன் தன்னுடைய தோல்விகளுக் கெல்லாம் ஆண்டவரையும், மனிதரையும், சுற்றுப்புறத்தையும், சூழ்நிலைகளையும், உறவினர்களையும், போதகரையும் இப்படியாக ஒவ்வொருவரையும் குற்றம் கூறிக்கொண்டே வந்தால் அது சிறுபிள்ளைத்தனமேயன்றி வேறொன்று மில்லை. இன்றைய தேவமனிதன் கென்னத் ஹெகின் (Kenneth Hegin) தன்னுடைய ஆரம்ப காலத்தில் மிக பிரபலமான தேவ ஊழியர்களோடுகூட சேர்ந்து ஊழியம் செய்தாராம். அவர்கள் தங்கள் ஊழியத்தில் எப்படி எதையெல்லாம் செய்வார்களோ அதையே இவரும் செய்து வந்தார். இப்படியாக, ஒவ்வொரு காலக்கட்டத்திலும் ஒவ்வொருவரிடத்தில் ஊழியம் செய்தார். கடைசியாக, ஆண்டவர் இவரிடம் சொன்னவார்த்தை "மகனே யாரிடமும் சேர்ந்து ஊழியம் செய்தாலும், நீ மாறாவிட்டால் உன்னை நான் மாற்ற முடியாது. மாற்றப்பட வேண்டியது நீதானேயொழிய உன்னை மாற்ற யாராலும் முடியாது" என்றாராம். இதில் நீங்கள் கவனிக்க வேண்டிய ஆழமான சத்தியம் ஒன்று உண்டு. வாழ்க்கையின் தோல்விகளுக்கு என்ன காரணம்? நன்றாய் வேதம்

வாசிக்கிறாய், ஜெபிக்கிறாய், உபவாசிக்கிறாய், ஊழியஞ் செய்கிறாய், காணிக்கை கொடுக்கிறாய், அதிலே எந்த விதமான தவறுதலுமில்லை. உனக்கிருக்கிற பெலத்தோடு கர்த்தருக்கு ஊழியமும் செய்கிறாய். எல்லாவற்றிற்கும் மத்தியிலே தோல்விக்கு என்ன காரணம்? உன்னுடைய சபை சரியல்லையா? அல்லது நீ சார்ந்திருக்கிற போதகர் சரியில்லையா? உனக்குள்ளே ஏதாவது கோளாறா? என்று நீங்கள் உங்களையே ஆராய்ந்து பார்க்க வேண்டுமென்று அன்பாய்க் கேட்கின்றேன். இதற்கு காரணத்தைக் கண்டுபிடியுங்கள்.

முதலாவது, "உடைத்து போட்ட வாக்குத்தத்தங்கள்", "அர்ப்பணமில்லாத அப்பணிப்புகள்". வேதாகமத்தில் ஏராளமான வாக்குத்தத்தங்கள் உள்ளன. வேதாகமம் முழுவதுமே வாக்குத்தத்தங்களால் நிறைந்திருக்கிறது. இந்த முழுமையான வாக்குத்தத்தங்களால் நிறைந்த மாபெரும் பொக்கிஷம் உடைந்து போயிருக்கிறது. வாழ்க்கையின் முழுமையான சகல ஆசீர்வாதங்களும் இதற்குள் இருக்கும் போது இது உடைந்து போயிருக்கிறது. இதற்கு யார் காரணம்? திருப்பி செலுத்த முடியாத உங்களுடைய தீர்மானங்களே.

வேதத்தில் சொல்லப்பட்டிருக்கிற பலக்காரியங்களுக்கு நீ உண்மையாயில்லை. நீ வாழ்க்கையில் தீர்மானித்த பல தீர்மானங்களை நீ இன்னும் நிறைவேற்றவில்லை. திருப்பி செலுத்தப்படாத உன்னுடைய தீர்மானங்களால் நீயே வாக்குத்தத்தங்களை உடைத்து விட்டாய். திரும்ப செலுத்தப்படாத உன் தீர்மானங்களினாலே, உன் வாழ்க்கையிலே பல காரியங்கள் இன்னும் நிறைவேற்றப்படாமல் இருக்கிறது.

இந்தப் பூமியிலே மூன்று விதமான வித்தியாசமான கூட்டத்தார் அன்றும், இன்றும் இருக்கிறார்கள்.

1. மதவாதி
2. ஆன்மிகவாதி
3. தூஷணவாதி

"இயேசு" என்று சொல்லுகிறவர்கள் மதவாதி. "இயேசுவே ஆண்டவர்" என்று சொல்லுகிறவர்கள் ஆன்மீகவாதி அல்லது நீதிமான்கள் என அழைக்கலாம். "இயேசுவே! இயேசுவே!" என்று கூறியும், தங்கள் கிரியைகளிலும், வாழ்க்கையிலும் ஆண்டவரை மறுதலிக்கிறவர்கள் தூஷணவாதி அல்லது மாய்மாலக்காரர்கள் எனக் கூறலாம். இப்படி பூமியிலே வித்தியாசமான கூட்டத்தாருக்கு மத்தியிலே கர்த்தருடைய வார்த்தை உன்னை நோக்கி "நேர்ந்து கொண்டதைச் செய்" எனக் கூறுவது தேவன் உன்மேல் வைத்துள்ள ஆழமான நம்பிக்கையையேக் குறிக்கிறது.

"நேர்ந்து கொள்" என்ற வார்த்தைக்கு "அர்ப்பணிப்பு" என்று பொருள். இந்தச் செய்தியினுடைய மையப்பொருள் என்னவென்றால், உங்கள் வாழ்க்கையின் தீர்மானத்தில் நீங்கள் எப்படியிருக்கிறீர்கள் என்பதுதான் கேள்வி. நீங்கள் உங்கள் வாழ்க்கையில் ஒப்புக்கொண்ட தீர்மானம். பண்ணின தீர்மானத்தில் உறுதியாயிருக்கிறீர்களா? நீங்கள் எடுத்த தீர்மானத்தை ஆண்டவராய் கேட்கவில்லை. நீங்கள்தான் தீர்மானத்தை எடுத்தீர்கள். ஆனால் உங்களுடைய

தீர்மானத்திலே அர்ப்பணிப்பில்லை. இது ஆண்டவரை ஏமாற்றுகிற நிலையேயன்றி வேறல்ல.

பிரசங்கி 5 : 1ல் "மூடர் பலியிடுவது போல" என்று சொல்லப்பட்டிருக்கிறது. மூடர்கள் பலியிடுவார்களாம். மூடரின் பலி என்ன? என்பதை மத்தேயு 5 : 23, 24 ஆகிய வசனங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. வேதாகமத்தில் இரண்டு விதமான பலிகள் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஒன்று ஞானியின் பலி

மற்றொன்று மூடரின் பலி

"முன்பு ஒப்புரவாகி, பின்பு வந்து உன் காணிக்கையைச் செலுத்து" என்பது வேதத்தின் போதனை. முதலில் உனது வாழ்க்கை, பின்புதான் தீர்மானங்கள். தேவனுடைய வாக்குத்தத்தங்கள் உங்கள் வாழ்க்கையிலே செயலாக்கப்பட வேண்டுமானால் உங்கள் வாழ்க்கையின் "**தரம்**" தான் முக்கியம். உங்கள் வாழ்க்கையின் தீர்மானங்கள் இரண்டாவது கட்டமே. ஆண்டவர் எவரையும் தீர்மானங்கள் பண்ணவேண்டும் என்று கட்டாயப்படுத்தவில்லை. 5ம் வசனத்தின் கடைசி வார்த்தையில் "நேர்ந்து கொள்ளாதிருப்பதே நலம்" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

சரியான வெளிப்பாடில்லாமல் எந்தத் தீர்மானமும் பண்ணாதிருங்கள் என அன்பாய் உங்களைக் கேட்டுக்கொள்கிறேன். Your dedication should be with your Revelation.

ஊழியத்திற்கு வந்தால் பசி, பட்டினி, தேவையில்லாத பேச்சுகளுக்கு இடமாகும் சூழ்நிலை, இவையாவும் கண்டிப்பாய் நடந்தே தீரும். இவை எல்லாவற்றையும் நன்கு யோசித்து, சரியான வெளிப்பாட்டுடன்தான் ஊழியத்துக்கு வரவேண்டும். அப்பொழுது மாத்திரமே ஊழியத்தில் கடைசிவரை நின்று ஜெயிக்க முடியும். இது அநேக பரிசுத்தவான்களின் அனுபவம். என்னுடைய சொந்த அனுபவமும்கூட.

நான் இந்த ஊழியத்திற்கு வருவதற்கு முன்னர் தென்னக இரயில்வேயில் இரண்டு ஆண்டுகாலம் பணியாற்றினேன். பின்னர் தேவனுடைய திட்டவட்ட்மான அழைப்பை எசேக்கியேல் 38 : 7ன் படி தீர்க்கமாய் அறிந்தேன். சிறிது காலம் நாட்களை கடத்தினேன். 1973ம் ஆண்டு முதல் தேவனுடைய ஊழியத்தை பல்வேறு நிலைகளில் செய்துவந்தேன். அந்த நாட்களில் என்னுடைய மாத உதவி ரூ.150- மட்டுமே. 13 ஆண்டுகளுக்கு பின்னர் 270ரூபாய் ஆனது.

இந்நாட்களில்தான் ஊழியத்தின் பாதையில் எத்தனை போராட்டங்கள், அவமானங்கள், தேவையற்ற பழிச்சொல், குடும்பத்திலே நாள்தோறும் போராட்டங்கள், மனந்திரும்பி ஆண்டவருக்கு ஊழியம் செய்த 21 வயது நிரம்பிய என்னுடைய தம்பியின் அகால மரணம் (சரீரத்தைக் கூட காண முடியவில்லை) அவன் அணிந்திருந்த உடைகளை மட்டுமே காண முடிந்தது. மரித்து பத்து நாட்களுக்கு பின்னர்தான் செய்தி அறிந்தோம்.

ஆனால், இவை எல்லாவற்றின் மத்தியிலும் உள்ளத்திலே பரிபூரண அமைதி இருந்ததை துல்லியமாக அறிந்தேன். இப்படி பல பிரச்சனைகளைத் தாண்டித்தான் இந்த நிலையில் இதை என்னால் உங்களுக்கு எழுத முடிந்தது. காரணம் WHEN GOD CALLS, HE GUIDES எத்தனை உண்மை.

உங்களது அர்ப்பணம், தீர்மானங்கள் செயல்படுத்தப் படவேண்டுமானால், கீழ்காணும் மூன்று காரியங்கள் மிக இன்றியமையாதவை.

1. RESPONSE பொறுப்பு
2. RESOLVE உறுதி
3. REVELATION வெளிப்பாடு

1. பொறுப்பு (Response)

தீர்மானம் பண்ணுகிறது முக்கியமல்ல. அந்தத் தீர்மானத்திலே நீங்கள் பொறுப்பாயிருக்க வேண்டும். பொறுப்பில்லாத தீர்மானம் இருந்து என்ன பிரயோஜனம்? ஊழியத்திற்கு செல்ல வேண்டும், தேவனால் பயன்படுத்தப்பட வேண்டும் என்ற சிந்தைக்கு, விருப்பங்களுக்கு முன்னால் உங்களுக்கு பொறுப்பு அவசியம். முதலாவது உங்களைப் பற்றிய பொறுப்பு.

2. உறுதி (Resolve)

அர்ப்பணிப்பிற்கு இரண்டாவது மிக முக்கியமான தேவை உறுதி (Resolve). "உனக்குள்ள எல்லாவற்றையும்

விற்று தரித்திரருக்கு கொடு" என்று ஆண்டவர் கூறின வார்த்தைகளை இங்கே நினைவு கூறவும். அதனால் இந்த ஐசுவரியமுள்ள வாலிபன் மிகுந்த துக்கத்தோடு சென்றான் என வேதம் அவனைக் குறித்து கூறுகின்றது. தேவனுடைய காரியங்களில் ஆவல் இருந்தது, ஆனால் அவனது தீர்மானங்களிலே உறுதியில்லை, வெளிச்சமில்லை, அதினால் பொறுப்புமில்லை.

3. வெளிப்பாடு (Revelation)

அர்ப்பணத்திற்கு இன்றியமையாத மூன்றாவது காரியம் வெளிப்பாடு. (Revelation) 6ம் வசனத்தில் "உன் மாம்சத்தைப் பாவத்துக்குள்ளாக்க உன் வாய்க்கு இடங்கொடாதே" எனக் கூறப்பட்டுள்ளது. உறுதியிலிருந்து விலகுவதும் ஆண்டவருடைய சந்நிதானத்திலே பொய் சொல்லுகிறதும், பாவத்திற்கு சமானம்.

"நான் உயர்த்தப்படும்போது எல்லாரையும் என் பக்கம் இழுத்துக் கொள்வேன், சேர்த்துக்கொள்வேன்" என்பது தேவனுடைய வார்த்தை. அவரை உயர்த்துவது யார்? நாம் தான்.

நம்முடைய பணி என்ன? ஆண்டவரை உயர்த்துவதே. அவருடைய பணி என்ன? மக்களை தம்மிடத்திலே சேர்த்துக் கொள்வதே.

நீங்கள் உங்கள் பணியை செய்யும்போது அவர் தம்முடைய பணியை நிச்சயமாய்ச் செய்வார். அப்படி நீங்கள்

செய்யத் தவறும்போது தேவன் உன் வார்த்தைகளினாலே கோபங்கொண்டு "உன் கைகளின் கிரியையை அழிப்பேன்" எனக் கூறுகிறார். அதைத்தான் ஆதி 6 : 3ல் அப்பொழுது கர்த்தர் : "என் ஆவி என்றைக்கும் மனுஷனோடே போராடுவதில்லை; அவன் மாம்சந்தானே" என்றார்.

அவர் உயர்ந்தவரும், உன்னதமுமான சிங்காசனத்தில் வீற்றிருக்கிறவர். என்றைக்கும் அவர் உன்னோடு போராடுவதில்லை. எனவேதான் ஸ்தேவான் மரிக்கும் போது அப் 6 : 51ல் "வணங்காக்கழுத்துள்ளவர்களே! இருதயத்திலும் செவிகளிலும் விருத்தசேதனம் பெறாதவர்களே! உங்கள் பிதாக்களைப் போல நீங்களும் பரிசுத்த ஆவிக்கு எப்பொழுதும் எதிர்த்து நிற்கிறீர்கள்" எனக் கூறினான்.

உங்கள் அர்ப்பணிப்பிலே சிறிய தாழ்ச்சி, சரிவு ஏற்படும்பொழுது நீங்கள் பரிசுத்த ஆவியானவரை வேதனைப் படுத்துகிறீர்கள், எதிர்த்து நிற்கிறீர்கள் என்பதே அதனுடைய பொருள்.

இன்றைக்கு அந்த அர்ப்பணிப்பு உங்கள் வாழ்க்கையில் வராவிட்டால் இனி என்றைக்குமே வராது. நீ பொருத்தனைகளை செய்யும்பொழுது அதை செலுத்த தாமதியாதே! அப்படி செய்யத் தவறுவதும் ஆண்டவரை பரியாசம் பண்ணுகிறதும், அவரை கோபப்படுத்துகிறதுமான ஒரு செயலாகும். தேவனுடைய விளைவுகள் மிக மோசமான தாகும். நம்மை நாமே ஆண்டவருக்கு அர்ப்பணித்து செயல் படுவோம். அப்பொழுது ஆண்டவர் உங்கள் வாழ்க்கையில் மிகப்பெரிய ஆசீர்வாதத்தைக் கட்டளையிடுவார், ஆமென்!

தியானச் செய்தி

மெய்யான பக்தியும் மேலான ஆசீர்வாதமும்!

இன்று அநேக கிறிஸ்தவர்கள் "நான் ஒரு கிறிஸ்தவன்(ள்)" என்று எல்லாருக்கும் சொல்லித் தெரிய வேண்டிய கட்டாயம் உள்ளது. காரணம், அவர்கள் உலகத்தாரோடு முற்றிலும் ஒத்திருப்பதால் அவர்கள் பரலோகத்துக்குரியவர்கள் என்பதை பிரித்துக்காட்ட வாழ்க்கையின் பல நிலைகளிலும் தவறிப் போகிறார்கள்.

தனது நாட்களில் சில விசுவாசிகளிடையே இத்தகைய நிலை காணப்படுவதை உணர்ந்த தேவமனிதன் சி.எச். ஸ்பர்ஜன் இவ்வாறு எழுதினார். "நாங்கள் பள்ளியில் படிக்கும்போது வீடுகள், குதிரைகள் இவற்றின் படங்களை வரைவோம். வீட்டின் படத்துக்கு கீழே "வீடு" என்றும், குதிரையின் படத்துக்கு கீழே "குதிரை" என்றும் எழுதி வைப்போம். இல்லாவிட்டால் அதைப் பார்க்கும் எவரேனும் வீட்டைக் "குதிரை" என்று நினைத்துக் கொள்வார்கள் அல்லவா. அதைப் போல சிலக் கிறிஸ்தவர்கள் தங்கள் கழுத்தில் கிறிஸ்தவர்கள் என்று சுட்டிக்காட்டும் ஏதேனும்

அடையாளம் ஒன்றை அணிய வேண்டியதாயிற்று. இல்லாவிட்டால், அவர்களைப் பாவிகள் என்று தவறாக நினைத்து விடுவோமல்லவா? என்று எழுதினார் சி.எச்.ஸ்பர்ஜன்.

தெய்வ பக்தியுள்ள கிறிஸ்தவனின் அடையாளமாக வேதம் பல்வேறு காரியங்களைக் குறிப்பிடுகிறது. இன்று அநேகருக்கு "நான் தெய்வ பக்தியுள்ளவன்", "கிறிஸ்தவன்" என மற்றவர்களுக்கு சொல்லித் தெரிய வேண்டிய கட்டாயம் உள்ளது. இந்த நிலைமாற தெய்வபக்தி என்றால் என்ன? அதனுடைய தன்மைகள், ஆசீர்வாதங்களை விளக்கவே இச்செய்தி உங்களைத் தேடி வருகின்றது.

இன்றைக்கு பூமியில் ஒரு பக்கம் தேவபக்தி பெருகிக் கொண்டிருந்தாலும் இன்னொரு பக்கம் பூமியில் உண்மையான தேவபக்தி குறைந்து வருகிறது. எனவேத்தான் 1தீமோத்தேயுவின் புத்தகத்தில் பவுல் அப்போஸ்தலன் தீமோத்தேயுவுக்கு தேவபக்தியின் மேன்மைகளையும், மகத்துவங்களையும் கூறுவதைக் காணலாம்.

"தேவபக்தி" என்ற வார்த்தைக்கு வேதாகமத்தில் நான்கு விதமான அர்த்தங்கள் கொடுக்கப்பட்டுள்ளது. "விசுவாசம்" (Faith), இரண்டாவது "பரிசுத்தம்" (Holiness), மூன்றாவது கீழ்ப்படிதல் (Obedience), அடுத்து ஆராதனை (Worship) என்ற நான்கு வார்த்தைகள் பயன்படுத்தப்பட்டிருக்கிறது.

மேலும்அதிகமாக 1தீமோத்தேயுவின் புத்தகத்தில் "தேவபக்தி" என்கிற வார்த்தையை அடிக்கடி பவுல்

அப்போஸ்தலன் சுட்டி காண்பிப்பதை உங்கள் கவனத்திற்கு இங்கே கொண்டுவர விரும்புகின்றேன்.

வேதம் வாசிப்பது, ஜெபிப்பது, ஆலயத்திற்குப் போவது, வெள்ளை உடை அணிவது ஆகிய இவைகள்தான் தெய்வபக்தியா? இவைகள் தெய்வ பக்தி என்று பெயர் பெற்றிருந்தாலும், இவைகளுக்கும் மேலாக இந்த வார்த்தைக்கு 1தீமோத்தேயு முதலாம் அதிகாரத்தில் 7 விதமான விளக்கங்கள் கொடுக்கப்பட்டுள்ளது.

தேவபக்தி என்பது பொறுப்புள்ள நல்லொழுக்கமுள்ள வாழ்க்கை. இதை 1தீமோ 2 : 2ல் வாசிக்கலாம். நாம் எல்லாப் "பக்தி"யோடும், நல்லொழுக்கத்தோடும், கலகமில்லாமல் அமைதலுள்ள ஜீவனம் பண்ணும்படிக்கு, ராஜாக்களுக்காகவும், அதிகாரமுள்ள யாவருக்காகவும் அப்படியே செய்ய வேண்டும்.

இந்த வசனத்தில் "பக்தி" என்பதற்கு சரியான விளக்கத்தைக் காணலாம். "நல்ல அணுகுமுறை". ஒரு நபர் உங்களோடு பேசும்போது நீங்கள் நல்ல குணமுள்ளவர், பழகுவதற்கு அன்பானவர், பணிவானவர், மிருதுவான வார்த்தைகளையே பேசுபவர், காரியங்கள் ஆராய்ந்து, நிதானித்து அறிகிறவர், சாந்தகுணமுள்ளவர், தொலை நோக்கு தரிசனம் உடையவர் என்று அவரை அறியச் செய்வதே பக்தியாகும். ஒழுக்கமில்லாமல் பக்தியாய் இருந்து என்ன பிரயோஜனம்? கிறிஸ்தவ வாழ்க்கையே ஒரு ஒழுக்கமுள்ள வாழ்க்கை. கிறிஸ்தவ பள்ளியில் படிக்கிற பிள்ளைகள்

ஒழுக்கமுள்ள பிள்ளைகளாக இருப்பார்கள் என்று கிறிஸ்தவரல்லாத, இயேசுவை நம்பாத மக்கள்கூட சொல்லுகின்ற நிலையை நீங்கள் கேட்டிருக்கலாம். காரணம் கிறிஸ்தவ மிஷனரிகள் இந்தியாவில் வெறும் மார்க்கத்தை மட்டும் போதிக்கவில்லை, ஒழுக்கத்தையும், முன்மாதிரியான வாழ்க்கையையும் முன்வைத்து வாழ்ந்து காண்பித்தார்கள். எனவேதான் இன்று கிறிஸ்தவ பள்ளிகளும், பொதுநல மையங்களும் முன்மாதிரியான வாழ்க்கையை போதிக்கின்றது. "தெய்வபக்தி" என்பது நல்லொழுக்கமுள்ள வாழ்க்கை மட்டுமல்ல, அது ஒரு "தொழில்". ஒரு தனிமனிதனுக்கு தொழில் எப்படி அவனுடைய வாழ்க்கையின் ஆதாரமாய், மூலப்பொருளாய், அதில் கருத்தாய் இருக்கின்றதோ அதைப் போலவே தேவபக்தி மனிதனின் ஆதாரமும் ஆணிவேருமாகும். அது நீங்களாகவே விரும்பும் ஒரு வாழ்க்கையாகும். A Life of Desirability. தேவ பக்தி என்பது Life Style ஆகும். தேவ பக்தியாயிருக்கிறவர்கள் மிகவும் அமைதியாய், கலகமில்லாமல் அமைதியான ஜீவனம் பண்ணும் மேலான வாழ்க்கை வாழுவார்கள்.

நீங்கள் விரும்பினால்தான் பக்தி வரும். விரும்பாவிட்டால் தேவ பக்தி ஏற்பட வாய்ப்பில்லை. ஆண்டவர் கட்டாயப்படுத்தி பக்தியை யாருக்கும் தருவதில்லை.

முதலாவது தேவ பக்தி என்பது நீங்கள் விரும்புகிற வாழ்க்கையாய் இருக்க வேண்டும்.

இரண்டாவது, தேவ பக்தி என்பது "பொறுப்புள்ள வாழ்க்கையாகும்". A Life of Responsibility. இதை

1தீமோ 2 : 10 தகுதியான வஸ்திரத்தினாலும், நாணத்தினாலும் தெளிந்த புத்தியினாலும், தேவபக்தியுள்ளவர்களென்று சொல்லிக்கொள்ளுகின்ற ஸ்திரீகளுக்கு ஏற்றபடியே நற்கிரியைகளினாலும் தங்களை அலங்கரிக்க வேண்டும் என வேதம் விவரிக்கின்றது. இந்த வசனம் பல்வேறு காரியங்களைக் குறித்து பேசுகின்றது. இந்த வேத புத்தகத்தில் பெண்பாலுக்கு சொல்லப்பட்ட வார்த்தைகள் ஆண்களுக்கும் பொருந்தும் அதேப் போல ஆண்களுக்கு சொல்லப்பட்ட வார்த்தைகள் பெண்களுக்கும் பொருந்தும்.

முதலாவது, எல்லா மனுஷருக்காகவும் விண்ணப்பங்களையும், ஜெபங்களையும், வேண்டுதல்களையும், ஸ்தோத்திரங்களையும் பண்ண வேண்டும். **இரண்டாவது**, கலகமில்லாமல் அமைதலுள்ள ஜீவனம் பண்ண வேண்டும். **மூன்றாவது**, அப்படியே செய்ய வேண்டும். **நான்காவது** எல்லா இடங்களிலேயும் ஜெபம் பண்ண வேண்டும். **ஐந்தாவது** நற்கிரியைகளினால் தங்களை அலங்கரிக்க வேண்டும். **ஆறாவதாக** கற்றுக்கொள்ள வேண்டும். **ஏழாவதாக** அடக்கமுடையவராக இருக்க வேண்டும். **எட்டாவதாக** அமைதலாயிருக்க வேண்டும். இப்படி "வேண்டும்" "வேண்டும்" என்று சொல்வது விருப்பமல்ல. அது ஒரு பொறுப்பாகும்.

மூன்றாவது, தேவபக்தி என்பது மகா பெரிய இரகசியம். இதை 1தீமோ 3 : 16ல் "தேவ பக்திக்குரிய இரகசியமானது யாவரும் ஒப்புக்கொள்ளுகிற படியே மகா மேன்மையுள்ளது" என வேதம் குறிப்பிட்டுள்ளதைக் காண்க. தேவ பக்தியின் இரகசியத்தை எழுத ஏடுகள் கொள்ளாது,

வார்த்தைகள் போதாது. ஆனாலும் தேவபக்தி எல்லோராலும் விளங்கிக் கொள்ள கூடியது. (Visibility) தேவ பக்தியாய் வாழுகின்றவர்களை எவரும் மதிக்கிரதில்லை. இதை யோபின் வாழ்க்கையில் காணலாம். யோபு 19 : 15, 16 வசனங்களில் "என் வீட்டு ஜனங்களும், என் வேலைக்காரிகளும் என்னை அந்நியனாக எண்ணுகிறார்கள்: பார்வைக்கு நான் பரதேசியானேன். நான் என் வேலைக்காரனைக் கூப்பிடுகிறபோது அவன் எனக்கு உத்தரவு கொடான். என் வாயினால் நான் அவனைக் கெஞ்ச வேண்டியதாயிற்று" என யோபு கூறும் காரியங்களை கவனித்துப் பார்த்தால் தேவபக்தி என்பது எல்லோராலும் பொதுவாக அங்கீகரிக்கப்படுகின்ற ஒன்றாய் இல்லாதிருந்தாலும் அது எல்லோராலும் அறியப்படுகிற, ஒப்புக்கொள்ளப்படுகிற ஒன்று. இது மக்களாலே "மெய்யாய்" காணப்படும்.

தேவபக்தியின் மேன்மை பலருக்குப் புரியாது. அதைப் புரிய வைப்பது என்பது மிகவும் கடினமான ஒன்று. ஆனால் இதை புரிய வைக்கிறவர் பரிசுத்த ஆவியானவர் ஒருவரே! நீங்கள் மெய்யாய் தேவபக்தியுள்ளவர்களாயிருந்தால் ஜனங்களால், கண்டும், கேட்டும் வாசிக்கப்படுகிற நிருபமாய் மாறுவீர்கள்.

தேவ பக்தியை பார்க்க முடியும், கேட்க முடியும், தேவ பக்தியுள்ளவர்களை மக்கள் புரிந்து கொள்ள முடியும்.

நான்காவதாக, தேவபக்தி என்பது ஒரு பயிற்சி (Exercise) ஆகும். இது தானாய் ஏற்படுவதல்ல என்பதை

முன்னமே இங்கே நான் குறிப்பிட்டுள்ளேன். அதை நாள்தோறும் பயிற்சி (Practice) செய்ய வேண்டும். உங்களுக்குள் இருக்கின்ற நல்லொழுக்கம் அமைதி, கலகமில்லாத ஜீவியம், நற்கிரியை உங்களை தேடி வருபவர்களுக்கும், உங்கள் மூலமாய் கிடைக்க வேண்டும் (Availability). இதற்குத்தான் பயிற்சி என்று பெயர்.

இதை இதே அதிகாரம் 4 : 8ல் காணலாம். "சரீர முயற்சி அற்ப பிரயோஜனமுள்ளது". இங்கே சரீர முயற்சியைக் குறித்து அற்பபிரயோஜனமுள்ளது என்று எழுதப்படுவதினால் இதை ஒதுக்கி தள்ளிவைக்க முடியாது. பிரயோஜனமானதுதான், ஆனால் அற்ப பிரயோஜனமானது (Some Value) என ஆங்கில வேதாகமத்தில் குறிப்பிடும் சொற்றொடரை கவனிக்கவும். சரீர முயற்சியே பிரயோஜனமானது (அற்ப) என்றால் ஆன்மீக முயற்சி எத்தனை அதிக பிரயோஜனமானது என ஒரு கணம் எண்ணிப்பாருங்கள். தொடர்ந்து பக்தி என்பது...

5. நம்பகமானதும் ஆரோக்கியமானதுமாகும். இதை 1தீமோ 6 : 3ல் ஒருவன் நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் ஆரோக்கியமான வசனங்களையும், தேவ பக்திக்கேற்ற உபதேசங்களையும் ஒப்புக்கொள்ளாமல், வேற்றுமையான உபதேசங்களை போதிக்கின்றவனானால் என்று எழுதப்பட்டுள்ளது. ஒன்று தேவபக்திக்கேற்ற ஆரோக்கியமான உபதேசம் (Sound Doctrine). இன்னொன்று வேற்றுமையான உபதேசம். "தேவபக்தி" என்பது ஆரோக்கியமான உபதேசங்களை கேட்பதும், வேற்றுமையான

உபதேசங்களை விட்டு விலகுவதாகும். இதுவே தேவ பக்தி. எந்தக் காரியத்தை நீங்கள் செய்தாலும் அது வேதவசனத்தை சார்ந்து இருக்க வேண்டும். வசனத்தின் ஒரு பகுதியை பிடித்துக்கொண்டு "ஊஞ்சலாடும்" மக்கள் இன்று ஏராளமாய் கிறிஸ்தவ உலகில் மலிந்து உள்ளனர்.

இன்றைக்கு அநேக கிறிஸ்தவ விசுவாசிகள் விளிம்பில் வைக்க வேண்டியதை மையத்தில் வைக்கிறார்கள். மையத்தில் வைக்க வேண்டியதை விளிம்பில் வைத்திருக்கிறார்கள்.

ஒரு வசனத்தைத் தியானிக்கும்போது அதற்கு முந்தின வசனத்தையும், அதற்கு பிந்தின வசனத்தையும் பாருங்கள்! ஜனங்கள் வசனங்களை ஒப்புக்கொள்ள வேண்டுமானால் நீங்கள் ஆரோக்கியமான வசனங்களை உபதேசிக்க வேண்டும். செய்தியில் ஒரே வசனத்தை பேசுவதும், காலம் முழுவதும் அதையே தியானிப்பதும் ஆரோக்கியமான வசனமாகாது.

ஆறாவதாக, தேவபக்தி என்பது 1தீமோத்தேயு 6 : 6 போதுமென்கிற மனதுடனே கூடிய தேவபக்தியே மிகுந்த ஆதாயம். தேவபக்தியே ஆதாயமான ஒன்று (Profitable One). வீடு, சொத்து, சுகம், நிலம் இவைகள் மட்டும் ஆதாயமல்ல, தேவ பக்தியே மிகுந்த ஆதாயம்.

இந்த வசனத்திற்கு அநேகர் தவறான அர்த்தத்தைக் கொடுக்கிறார்கள். அதாவது போதுமென்கிற மனது என்ற

வார்த்தையை அடிப்படையாய்க் கொண்டு இந்த "பக்தி" போதும், இதனுடைய எல்லைப் போதும் என்ற தவறான முடிவிற்கு வந்துவிடுகிறார்கள். இதனுடைய சரியான விளக்கம் என்னவென்றால் தேவபக்தியில் சரியான ஒரு ஸ்திரத்தன்மையே மிகுந்த திருப்தி. மட்டுமல்ல, திருப்தி என்பதே தேவபக்தியில்தான் இருக்கின்றது. தேவ பக்திக்கு வெளியே "திருப்தி" என்பதே இல்லை.

ஒருவனுடைய ஸ்திரத்தன்மைக்கும், அசையாத வாழ்விற்கும் பெரிதும் இன்றியமையாதது தேவனுடைய வார்த்தையே. அதிகமாக "போதுமென்கிற மனது" உலகப் பிரகாரமான பொருளாதார விஷயங்களில், லௌகீக காரியங்களுக்கும் பயன்படுத்தப்படுகின்ற ஒரு வார்த்தையாகும். இதை 8ம் வசனத்திலேயே நாம் காணலாம்.

"உண்ணவும், உடுக்கவும், நமக்கு உண்டாயிருந்தால் அது போதுமென்றிருக்கக்கடவோம்". எனவே, இப்படிப்பட்ட காரியங்களில்தான் "போதும்" என்ற நிலைவர வேண்டுமேயொழிய, பக்தியிலே போதும் என்ற நிலை உருவானால், அது ஆரோக்கியமான வாழ்விற்கு அடையாளமாகாது. இங்கு குறிப்பிடப்பட்ட Contenment என்ற சொற்றொடருக்கு Willing என்ற மற்றொரு பொருளும் அகராதியில் பயன்படுத்தப்பட்டுள்ளன.

எனவேதான் இரட்சகர் இயேசுவும் மத் 6 : 25 - 34 ஆகிய வசனங்களில் திருப்தியற்ற, கவலையுள்ள ஒரு

வாழ்க்கையைக் குறித்தும் அதற்கு நிவாரணத்தையும் விளக்கியுள்ளார். இதே அதிகாரம் 7ம் வசனத்தில் கூறப்பட்டுள்ளதைப்போல **உலகத்திலே நாம் ஒன்றும் கொண்டு வந்ததுமில்லை, இதிலிருந்து நாம் ஒன்றும் கொண்டு போவதுமில்லை என்பது நிச்சயம்.**

இந்த வார்த்தையை மனதில் கொண்டு செயல்படும்போது "தேவபக்தி" மட்டுமே மிஞ்சி நிற்கும் என்பது தெள்ளத் தெளிவாய் புலனாகும். இதைத்தான் யோபு கூறுமிடத்து "நிர்வாணியாய் என் தாயின் கர்ப்பத்திலிருந்து வந்தேன்; நிர்வாணியாய் அவ்விடத்திற்கு திரும்புவேன்" என்ற நிலையற்ற வாழ்க்கையையும், வாழ்வின் முடிவையும் குறிப்பிட்டு விட்டு இதன் மத்தியிலே தேவபக்தி மட்டுமே நிலையானதும் உறுதியானது. மட்டுமல்ல ஆதாயமானதும் (Profitable), உறுதியானதுமாகும் (Utility).

ஏழாவதாக, **தேவபக்தியானது புத்திமதிகளை ஏற்றுக்கொள்ளுவதாகும்.** எனவேதான் 11ம் வசனத்தில் "**நீயோ, தேவனுடைய மனுஷனே, இவைகளை விட்டோடி நீதியையும், தேவபக்தியையும், விசுவாசத்தையும், அன்பையும், பொறுமையையும், சாந்தக் குணத்தையும் அடையும்படி நாடு**" என நாட வேண்டிய எதிர்மறையான (Negative) காரியங்களைக் குறித்தும், நாட வேண்டிய நேர்மறையான (Positive) காரியங்களைக் குறித்தும் வேதம் கூறுகின்றது.

இதனுடைய விளக்கம் வாழ்க்கையில் சரியான காரியங்களை தேர்ந்தெடுப்பது (Seeking the right things). வாழ்க்கையின் காரியங்களை தேட முயலும்போது எல்லாமே சரியானதாகத்தான் தோன்றும். ஆனால் அவைகளை சரியாகத் தேர்ந்தெடுத்து, ஒதுக்கித் தள்ள வேண்டியவைகளை ஒதுக்கித் தள்ளி சரியான கிறிஸ்தவ வளர்ச்சியில் முன்னேற தன்னை ஒப்புக் கொடுப்பதும், தேவனும், தேவ மனிதர்கள் கூறும் காரியங்களை ஏற்றுக் கொள்வதுமே (Advisibility) தேவபக்தியின் மேன்மையான வழியாகும்.

கடைசியாக இச்செய்தியின் சுருக்கத்தை கீழே தந்துள்ளேன். கருத்தாய் வாசியுங்கள்.

தேவ பக்தியானது

1. **விரும்பப்படத்தக்கது** - Disirability 2 : 2

2. **பொறுப்புள்ளது** - Responsibility 2 : 10

3. **காணப்படக்கூடியது** - Visibility

4. **பயன்தரக்கூடியது** - Availability

5. **நம்பத்தகுந்தது** - Reliability

6. **உறுதியானது** - Utility

7. **ஒப்புக்கொள்ளக் கூடியது** - Advisibility

ஊழியருக்கு

இருளில் ஒளியாக இருங்கள்! இயேசுவை பிரதிபலியுங்கள்!

தேவனுடைய ஊழியராகிய டி.எல்.மூடி அவர்கள் கூறின கதை ஒன்றினை இங்கே கூறி இச்செய்தியினை ஆரம்பிப்பது இச்செய்திக்கு மிகப் பொருத்தமாக இருக்கும் என நம்புகிறேன்.

"பார்வைத் தெரியாத ஒருவன் ஒரு பட்டனத்து தெருவின் ஓரத்தில் அமர்ந்திருந்தான். அவனருகே ஒரு விளக்கு இருந்தது. அவனருகே சென்ற ஒருவன், விளக்கு இருப்பதினால் என்ன பயன்? அவனுக்கு வெளிச்சமும், இருளும் ஒன்றுதானே என்று கேட்டான். யாரும் என்மீது இடறி விழுந்து விடக்கூடாது என்றே விளக்கை வைத்திருக்கிறேன்" என்றான் அந்த பார்வையற்றவன்.

கிறிஸ்துவை அறிந்த நாம், நிச்சயமாக பார்வையற்றவர்கள் அல்ல. ஆனால் அந்த மனிதனைப் போலவே, பரலோகப் பாதையில் தவறிப்போனவர்களுக்கு

வழிகாட்டும்படி நாம் ஒளிவீசக் கடமைப்பட்டுள்ளோம். அவருடைய சீடர்களாகிய நம் மூலமாக கிறிஸ்துவின் ஒளி பிரகாசியாவிட்டால், சமாதானத்தையும், திருப்தியையும் தேடி அலையும் அவர்கள் இடறிவிழ ஏதுவாகும் அல்லவா?

இன்றைய உலகில் ஆவிக்குரிய இருள் சூழ்ந்திருக்கிறது. எனவே, **நான் உலகத்திற்கு ஒளியாயிருக்கிறேன், என்னைப் பின்பற்றுகிறவன் இருளிலே நடவாமல் ஜீவ ஒளியை அடைந்திருப்பான்** என்று கூறிய இயேசுவை விசுவாசிகளாகிய நாம் பிரதிபலிக்க வேண்டும். தற்போது நமது ஆண்டவருடைய மகிமைக்கு மற்றவர்களையும் அந்த ஒளியினிடத்தில் இழுத்து வரப்படும்படி நாம் அவரது ஒளியைப் பிரதிபலிக்க வேண்டும். இவ்வாறு நாம் செய்யும்போது பரலோகப் பிதாவை மகிமைப்படுத்துகிறோம். **மனுஷர் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு, பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவை மகிமைப்படுத்தும்படி, உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாகப் பிரகாசிக்கக்கடவது.** (மத் 5 : 16)

நம்மோடு தொடர்பு கொள்பவர்களுக்கு, நாம் தேவனுக்கு நம்முடைய வாழ்வை ஒப்புவித்து வாழும் வாழ்க்கையை உணரமுடியா விட்டால் நம்மில் ஏதோ தவறு இருக்கிறது என்பது தான் பொருள்.

நாம் கிறிஸ்துவின் மீது கொண்டுள்ள விசுவாசத்தை நம்மை அறிந்தவர்களும், உடன் ஊழியர்களும் உணர்ந்திருக்கிறார்களா? ஆவியானவரால் நிரப்பப்பட்ட கிறிஸ்தவர்கள் இரகசிய கிறிஸ்தவர்கள் அல்ல என்பதை மறந்து

விடாதீர்கள்! எல்லாருக்கும் முன்பாக கிறிஸ்துவின் சாட்சிகளாய் ஒளியாய் திகழுங்கள்!

என் அன்பு ஊழியரே! இருளான உலகத்திற்கு வெளிச்சமாய் இருப்பது எப்படி? வெளிச்சத்தின் ஆசீர்வாதங்கள் என்ன? என்பதை இச்செய்தியில் உங்களுக்கு சுட்டிக் காட்டியுள்ளேன். பழைய வசனமாயினும் புதிய வெளிச்சத்தையும் சத்தியத்தையும் இச்செய்தியில் நீங்கள் காணலாம்.

நீங்களும், உங்களது ஊழியமும் இவ்வுலகத்திற்கு இலவசம். ஆனால் மலிவு அல்ல என்பதை உணருங்கள். Your Service is Free, But you are not Cheap. ஜெபத்தோடு இச்செய்தியை வாசித்துப் பயன்பெற அழைக்கின்றேன்.

மத்தேயு 5 : 14ல் **நீங்கள் உலகத்துக்கு வெளிச்சமாயிருக்கிறீர்கள்** யார் வெளிச்சம்? நீங்களே வெளிச்சம். மின்சாரம் வெளிச்சம் அல்ல, சூரியனும், சந்திரனும் அல்ல நீங்களே வெளிச்சம்.

அந்த வார்த்தையை இரண்டுப் பகுதிகளாக பிரிக்க விரும்புகிறேன்!

எங்கே? உலகத்தில்!

என்ன நிலையில்? "வெளிச்சமாய்"

நீங்கள் உலகத்துக்கு "வெளிச்சமாயிருக்கிறீர்கள்" என தமிழில் சொல்லப்பட்டுள்ளது. ஆனால் ஆங்கிலத்தில் இந்த

வார்த்தை "You are the Light" என்று கூறப்பட்டுள்ளது. தமிழ் வேதாகமத்தில் இல்லாத ஒரு வார்த்தை ஆங்கில வேதாகமத்தில் இருக்கிறது. அந்த THE என்ற வார்த்தையே. இதனுடைய பொருள் உலகத்தில் நீங்கள் மாத்திரம்தான் வெளிச்சம். உலகத்தில் பல வெளிச்சங்கள் உண்டு. போலியான வெளிச்சம், கவர்ச்சிக்கு வெளிச்சம், மயக்கும் வெளிச்சம், ஈர்க்கும் வெளிச்சம் என பல தவறான வெளிச்சங்கள் இப் பூமியில் இருக்கின்றது.

மனிதனை சிற்றின்பத்திற்குளளும், சீரழிக்கும் பாதையிலும் ஈர்க்கும் பல வெளிச்சங்கள் உண்டு. இப்படி பலதரப்பட்ட வெளிச்சங்கள் உள்ள இந்த உலகத்திலே நீங்கள் மாத்திரம்தான் இந்த உலகத்திற்கு "மெய்யான", "நித்தியமான", உண்மைகளை உலகிற்கு எடுத்துச் சொல்லும் மெய்யான வெளிச்சமாகும். அப்படியானால் இந்த உலகத்தின் வெளிச்சங்கள், வெளிச்சங்கள் அல்ல. நீங்கள் மட்டுமே இந்த உலகத்தின் "வெளிச்சம்" என்று வேத வசனம் திட்டவட்டமாய் போதிக்கின்றது. "God has no Superstars, Only Servants" தேவனுக்கு பிரத்தியேகமான ஆட்கள் எவருமில்லை, அவருக்கு ஊழியர்கள்தான் உண்டு.

இந்நிலையில் நீங்கள் இல்லையேல், இப்பூமியில் வெளிச்சமில்லை, பிரகாசமில்லை, அழகில்லை, இப்பூமிக்கு வடிவமில்லை, கிரகிக்கும் தன்மையில்லை. இதை மையமாகக் கொண்டதுதான் இந்த செய்தி. ஒவ்வொரு தேவபிள்ளையும் தன்னில்தானே அறிய வேண்டிய முதல் காரியம் "நான் இப்பூமியில் வெளிச்சமாயிருக்கிறேன் (பரலோகத்தில் அல்ல)

நான் வாழ்கின்ற இந்தப் பூமியிலே, மனித சமுதாயத்திலே, குடும்பங்களிலே, என்னுடைய அலுவலகத்திலே, என் பணிஸ்தலங்களிலே நான் வெளிச்சமாயிருக்கிறேன்".

பூமியிலே பல தேவனுடைய தாசர்கள் வெளிச்சமாயிருக்கிறார்கள், அவர்களோடு சேர்ந்து நீயும் வெளிச்சமாயிரு. இந்த வெளிச்சத்தின் ஆசீர்வாதங்களையும், இதனுடைய தன்மைகளையும் தொடர்ந்து தியானிப்போம்.

தேவன் முதன் முதலாக இப்பூமியிலே படைத்தது "வெளிச்சம்"தான். இதற்கு முன்னதாக வேறு எதையுமே தேவன் படைக்கவில்லை. மட்டுமல்ல, தேவன் முதன் முதலாக பூமியிலே சொன்ன முதல் வார்த்தையும் இதுதான். ஆதி 1 : 3ம் வசனத்தில் காணலாம். **"தேவன் வெளிச்சம் உண்டாகக் கடவது என்றார். வெளிச்சம் உண்டாயிற்று".**

அப்படியானால், இந்த பூமி முழுவதும் இருள் நிறைந்திருந்தது என்பது சொல்லாமலே புரிகின்றது அல்லவா? தேவன் "வெளிச்சம்" என்று சொன்ன இந்த வார்த்தையை கேட்ட மாத்திரத்திலே இருள் தானாகவே போய் விட்டது. ஆம்! வெளிச்சம் உண்டாகக்கடவது என்று தேவன் கூறும் போது இருள் தானாகவே சென்று விடும். 2ம் வசனத்தில் **பூமியானது ஒழுங்கின்மையும், வெறுமையுமாய் இருந்தது. ஆழத்தின் மேல் இருள் இருந்தது.**

ஒழுங்கின்மையாய் இருந்த பூமி தேவனுடைய இந்த வார்த்தையைக் கேட்ட மாத்திரத்திலே ஒழுங்காகிவிட்டது.

வெறுமையாய் இருந்த பூமி நிறைவாகி விட்டது. இந்தப் பூமியிலே தேவன் சொன்ன முதல் வார்த்தையை இந்த பூமி கேட்டது மாத்திரமல்ல, தேவ சித்தத்தை நிறைவேற்றியது. இதுவரைக்கும் இந்த பூமி தேவனுடைய சத்தத்தைக் கேட்டதே இல்லை.

இதிலே நீங்கள் அறிந்து கொள்ள வேண்டிய இரண்டாவது சத்தியம், ஒவ்வொன்றையும் தேவன் ஒவ்வொரு கால கட்டத்திலே செய்கிறார். முதலாவது வெளிச்சம் உண்டாகக்கடவது என்று சொன்னார்.

அடுத்து, "ஆகாயவிரிவு உண்டாகக்கடவது" என்று சொன்னார். வானம் உண்டாயிற்று.

மூன்றாவதாக, "வானத்தின் கீழே இருக்கிற ஜலம் ஓரிடத்திலே சேரவும், வெட்டாந்தரைக் காணப்படவும் கடவது" என்று சொன்னார். அது அப்படியே ஆயிற்று. இங்கே நீங்கள் கவனிக்க வேண்டிய காரியம்.

தேவன் எல்லாவற்றையும் ஒட்டு மொத்தமாய் செய்யவில்லை, படிப்படியாக செய்தார். ஆனால், பயன்படும் விதத்திலே செய்தார். God done everything gradually **தேவன் காரியங்களை நிதானமாக செய்கிறவர். ஆனால், ஸ்திரமாய் நேர்த்தியாய் செய்கிறவர்.**

இன்றைக்கு மனிதன் எல்லாவற்றையும் ஒன்றாக, ஒரே நேரத்தில் செய்ய வேண்டும் என்று நினைக்கின்றான். ஆனால்

தேவன் காரியங்களை நிதானமாக, ஒவ்வொன்றாக, இடைவெளி விட்டு செய்கிறார். தேவன் காரியங்களை ஸ்திரமாய், உறுதியாய், நேர்த்தியாய், மனிதன் பயன்படுத்தும் விதத்திலே செய்கிறார்.

இன்றைக்கு அநேகருக்குள் எழும்பும் கேள்வி "ஆண்டவர் எல்லாவற்றையும் ஒரே நேரத்தில் செய்ய முடியாதா?" அவர் சகலத்தையும் படைத்தவர். சகலவற்றையும் ஆளுகிறவர், அவரால் எல்லாம் ஆகும். ஆனால், அவர் அப்படிச் செய்வதில்லை. இன்றைக்கு மனிதன் ஒரே நேரத்தில் தேவனிடமிருந்து எல்லா ஆசீர்வாதங்களையும் பெற்றுக்கொள்ள வேண்டும் என்று விரும்புகிறான். ஆனால், தேவன் பொறுமையாய், அதே வேளையில் ஞானமாயும் காரியங்களைச் செய்கிறார்.

"வெளிச்சம்" என்று சொன்னார். அதற்கு பிறகு, ஒரு கால இடைவெளி. "ஆகாயவிரிவு" என்று சொன்னார். அதற்கு பிறகு ஒரு கால இடைவெளி. "வெட்டாந்தரை" என்று சொன்னார். அதற்கு பிறகு ஒரு கால இடைவெளி. "ஜலம்" என்று சொன்னார், அதற்கு பிறகு இன்னொரு இடைவெளி. "கனிதரும் செடிகள்" என்று சொன்னார். இப்படியாக அந்தந்த காலங்களிலே, அதினதின் காரியத்தை சிருஷ்டிப்பில் மாத்திரமல்ல, நம்முடைய வாழ்க்கையிலும் அவர் நேர்த்தியாய் செய்கிறார். ஆனால் ஆண்டவர் எல்லாவற்றையும் இப்பொழுதே செய்து விடக்கூடாதா என்ற தவறான நினைப்பு மனிதனுக்குள் இருக்கின்றது.

தேவன் செய்வதெதுவோ அது வாய்க்கும். வெளிச்சம் என்று தேவன் சொன்ன வார்த்தை யாரோ ஒருவர் சொல்லி அவர் சொல்லவில்லை, அவராகவே சொன்னார் என்பதை அறிய வேண்டும். இந்த முதல் வார்த்தையை இந்த பூமி கேட்டதனுடைய பலன்தான் இன்றைக்கு நாம் இந்த வெளிச்சத்தையும், சூரியனையும், சந்திரனையும், இந்த நிலைமையையும் பார்க்கிறோம். மட்டுமல்ல, அதனுடைய ஆசீர்வாதங்களை அனுபவிக்கிறோம். 4ம் வசனத்தில், வெளிச்சத்தைக் குறித்து அறிந்து கொள்ள வேண்டிய மூன்றாவது சத்தியம் வெளிச்சத்தையும், இருளையும் தேவன் வெவ்வேறாகப் பிரித்தார் எனக் கூறப்பட்டுள்ளது. (God Seperated)

ஆண்டவர் சாதாரணமான மக்களைக் கொண்டுத்தான், அசாதாரணமான காரியங்களை செய்து கொண்டிருக்கிறார்.

சரித்திரத்தின் பக்கங்களை புரட்டிப்பாருங்கள். சரித்திரத்திலே தேவனால் பயன்படுத்தப்பட்ட பலரும் சாதாரண எளிமையான, படிப்பறியாத, பாமர வாழ்க்கையின் அடித்தளத்திலே வாழ்ந்தவர்கள் ஒரு **வில்லியம் கேரி.** சாதாரண செருப்பு தைக்கிற ஒருவர். நம்முடைய தமிழ் வேதாகமம் நம்முடைய கரங்களில் தவழ காரணமானவரும் இவரே. இப்படி வாழ்க்கையில் தேவன் சாதாரண மக்களைக் கொண்டு, அசாதாரணமான காரியங்களை செய்கிறார். இதற்கு காரணம் இவர்கள் தேவனுடைய வார்த்தையை கேட்டது மாத்திரமல்ல, அந்த வார்த்தைக்கு அவர்கள் கீழ்ப்படிந்ததே காரணம். எப்படி தேவன் இணைத்ததை மனிதன் பிரிக்க

முடியாது என்பது சத்தியமோ, அப்படியே தேவனாலே பிரிக்கப்பட்ட ஒன்று மனிதனாலே இணைக்கப்பட முடியாது. 1பேதுரு 2 : 9ல் சொல்லப்பட்டுள்ளதைப் போல அந்தகாரத்திலிருந்து அந்த ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு அவர் நம்மை மாற்றி விட்டார்.

அதாவது, ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்திற்கு (Transfer) இடமாற்றம் செய்யப்படுவதைப் போல, இருளிலிருந்து ஒளியினிடத்திற்கு அவருடைய புண்ணியங்களை அறிவிக்கும்படி அவர் நம்மை வரவழைத்தார்.

நீதியின் சூரியனாகிய இயேசு கிறிஸ்து என்றைக்கு உங்கள் வாழ்க்கையில் பிரவேசிக்கிறாரோ அன்றைக்கு உங்கள் பாவ இருள், அஞ்ஞானம் என்ற இருள், அக்கிரமத்தின் இருள், அறியாமையின் இருள், வியாதியின் இருள் இவையெல்லாம் தானாகவே போய்விடும். அல்லேலூயா!

இங்கே ஒரு சிறிய கேள்வியை நீங்களே உங்களை கேட்டுக்கொள்வது நல்லது. இரவு கடந்து போவதால் சூரியன் வருகிறதா? அல்லது சூரியன் வந்ததால் இரவு போகிறதா? தேவனுடைய சத்தத்தை "ஒழுங்கின்மை", "வெறுமை" கேட்டது. இன்று ஒழுங்கின்மையும், வெறுமையும், இருளும் மனிதனோடு கூட பிறந்து விட்ட ஒன்று. தேவனுடைய வார்த்தையை கேட்ட போது இயற்கை பூமியில் ஒழுங்கின்மையும், வெறுமையும் கடந்து போக வேண்டும். காரணம், அது வெளிச்சத்திலும், தேவனுடைய வார்த்தைக்குள்ளும் இருக்கிற மாபெரும் வல்லமையாகும். தொடர்ந்து...

வெளிச்சத்தின் தன்மைகள் என்ன? என்பதைப் பற்றி இங்கே குறிப்பிட விரும்புகின்றேன்.

இயேசுகிறிஸ்து ஒளியாயிருக்கிறார். நாம் வெளிச்சமாயிருக்கிறோம். தமிழ் வேதாகமம் ஒரு அற்புதமான மொழியாக்கமாகும். இயேசு ஒளியாயிருக்கிறார். அவர் ஒளி, நாம் "வெளிச்சம்".

ஒளி என்பது வேறு, வெளிச்சம் என்பது வேறு. தன்னில் தானே தருவது ஒளி, அதை வாங்கி பிரதிபலிக்கிறது "வெளிச்சம்". ஒளி என்ற வார்த்தைக்கு "The Source of the Light". ஒன்றை வாங்கித் தருவது வெளிச்சம். நீதியின் சூரியனாகிய இயேசு கிறிஸ்துவினிடத்தில் காலை தோறும், நாட்கள் தோறும், நிமிடங்கள்தோறும் வாங்கி இருள் நிறைந்த இந்த உலகத்திற்கு வெளிச்சம் கொடுக்கின்ற நிலையில்தான் நீங்கள் இருக்க வேண்டும்.

நீங்களே உங்களாகவே வெளிச்சம் கொடுக்க முடியாது. அந்த ஒளியை நாம் பெற வேண்டுமானால், நாள்தோறும் அவருடைய பாதத்திலே இருக்க வேண்டும். **உம்முடைய வசனம் என் கால்களுக்குத் தீபமும், என் பாதைக்கு வெளிச்சமுமாயிருக்கிறது** என சங்கீதம் 119 : 105ல் சொல்லப்பட்டுள்ளது. அந்த ஒளியை நாம் பெற்று இருள் நிறைந்த உலகத்திற்கு கொடுப்பதுதான் "வெளிச்சம்".

முதலாவதாக வெளிச்சம் சுத்தமானது. (Light is Pure) There is no mixture of pollution வெளிச்சத்திலே கலப்படமேயில்லை. தேவன் தரும் வெளிச்சமானாலும், அது உலகத்தின் வெளிச்சங்களானாலும் அதிலே கலப்படமில்லை. யாக்கோபு 3 : 17ல் பரத்திலிருந்து வருகிற ஞானமோ முதலாவது சுத்தமுள்ளதாயி இருக்கிறது ஆங்கில வேதாகமத்தில் "It is pure" என்று சொல்லப்பட்டுள்ளது. தேவனுடைய வெளிச்சம் சுத்தமாயிருக்கிறது.

நாம் இந்தப் பூமியில் கலப்படமில்லாத ஒரு வாழ்க்கை வாழ வேண்டும் என தேவன் விரும்புகிறார். காலையில் ஒரு வாழ்க்கை, மாலையில் வேறொரு வாழ்க்கை. ஞாயிற்றுக்கிழமை இன்னொரு வாழ்க்கை, மற்ற நாட்களில் ஒரு மாதிரியான வாழ்க்கை வாழ நாம் அழைக்கப்படவில்லை. வெளிச்சம் எப்படி சுத்தமாயிருக்கிறதோ, எப்படி அதிலே எந்தவிதமான கலப்புத்தன்மையில்லையோ அதைப்போலவே ஒரு விசுவாசி இருக்க வேணடும் என வேதம் நமக்கு போதிக்கின்றது. "There is no pollution".

இரண்டாவதாக, வெளிச்சம் என்று சொன்னாலே அது "பிரகாசம்". ஆயிரம் மேகங்கள் தடுத்தாலும் ஒளியை யாராலும் மறைக்க முடியாது. (No Clouds can hide the Sun)

ஆயிரம் கைகள் அதைத் தடுத்தாலும், அந்த சூரியனுடைய வெளிச்சத்தை யாராலும் தடை பண்ண முடியாது. காரணம், அதில் அவ்வளவு பெரிய பிரகாசம். அந்த

பிரகாசத்தை உலகத்தின் ஆயிரம் சக்திகள் தடுத்தாலும் அதனை கடுகளவும் தடை பண்ண முடியாது. ஒருவேளை கடந்துபோகிற மேகங்கள் ஒருசில நிமிடங்கள் தடை செய்யலாம்.

இந்த உலகத்திலே நீங்கள் வெளிச்சமாயிருக்கிறீர்கள். அதனால் உங்களை யாருமே தடை பண்ண முடியாது. நீங்கள் ஜெபிப்பதை, பேசுவதை, பாடுவதை, ஆராதிப்பதை, துதிப்பதை இந்த உலகத்திலே எந்த சக்திகளும் தடை செய்யவே முடியாது. அதுதான் வெளிச்சத்தினுடைய மெய்ப்பொருள். ஒளி ஆளப்படுமேயானல் அது ஒளியல்ல. அது ஒரு போலியான தோற்றம்.

Light is Bright அது சுத்தமும், பிரகாசமுள்ளது. இரட்சகர் இயேசு கிறிஸ்துவின் பிறப்பில் இது மாபெரும் ஒரு பங்கை வகித்தது. **கர்த்தருடைய மகிமை அவர்களைச் சுற்றிலும் பிரகாசித்து** என லூக்கா 2 : 9ம் வசனம் சொல்கிறது. மேய்ப்பர்கள் தங்கள் மந்தையைக் காத்துக் கொண்டிருக்கையில், கர்த்தருடைய தூதன் அவர்களிடத்தில் வந்து நின்றான்.

மேலே கூறப்பட்டுள்ள இந்த செய்தி மனுக்குலத்திற்கு நம்பிக்கையின் செய்தியும், நங்கூரமான செய்தியுமாகும். வெளிச்சம் எவ்வளவு சுத்தமோ (Pure) அவ்வளவாக தேவகுமாரனும், தேவகுமாரனில் விசுவாசம் வைக்கும் தேவ மக்களும் இருப்பார்கள் என்பது மாறாத உண்மை.

எத்தனை தடைகள் வந்தாலும் உங்கள் மகிமையை யாராலும் மாற்றவோ தடை செய்யவோ முடியாது. மட்டுமல்ல,

அது மகிமையான ஒன்று. ஒளியினிடத்திலிருந்து வருகின்ற ஒளிக்கதிர்கள் எந்த இடத்திற்கும் ஊடுருவும் தன்மையுடையது. ஒளிக்கதிர்கள் ஒரு வினாடிக்கு ஒரு இலட்சத்து எண்பத்தாறாயிரம் மைல் வேகத்திற்கு கடந்து போகிறது என விஞ்ஞானிகள் கூறுகிறார்கள். தேவன் ஒளியாயிருக்கிறார். அவரில் எவ்வளவேனும் இருளில்லை. அந்த ஒளியை பெறுகிற நாம், அந்த ஒளிக்கதிர்களாய் உலகத்திலே அவருக்காக வாழ முடியும். மட்டுமல்ல,

ஆண்டவரிடமிருந்து ஒளியைப் பெற்றவர்கள் இந்த உலகம் முழுவதும் ஒளிக்கதிர்களாய் உலகத்தின் பல இடங்களுக்குச் சென்று ஆண்டவருக்காக ஆத்துமாக்களை ஆதாயம் பண்ண முடியும். ஆம்! நாம் ஆண்டவருடைய "ஒளிக்கதிர்கள்". அந்த புது பெலனால் நிரம்ப, நிரம்ப நம்முடைய ஒளிக்கதிர்கள் இருள் நிறைந்த தேசத்திலே பிரகாசிக்கும்.

இங்கே பிரகாசம் (Bright) என்று கூறப்படும்போது, வெளிச்சத்தை மட்டும் குறிக்காமல், எதிர்காலம், நம்பிக்கை கிறிஸ்து, பிதாவின் மகிமை, பரலோகம், உன்னைக் குறித்த தேவனுடைய திட்டம், இவையாவுமே அவரால் உனக்கு பிரகாசமானது என்பதை நினைவில் கொள்ளவும். தேவன் உனக்கருகில் இருந்தாலே "பிரகாசம்தான்". உன் வாழ்வின்

பக்கங்கள் பிரகாசம், நீ பிரகாசம், உன்னுடைய செய்தியை கேட்புவர்கள் பிரகாசமடைவார்கள்.

மூன்றாவது வெளிச்சம் என்று சொல்லும்போது, வெளிச்சத்திலே ஒரு கவர்ச்சி, பெலன் (Light is Lovely) ஆகியவற்றைக் காணலாம்.

அது எந்த வெளிச்சமாக இருந்தாலும் சரி. வெளிச்சம் என்றாலே "அலங்காரம்". எனவேதான் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவை ஆயிரம் பதினாயிரங்களில் சிறந்தவர் எனக் கூறுகின்றது. மேலும், உன்னதப்பாட்டில் நீர் "அழகுள்ளவர்", ஆயிரம் பதினாயிரங்களில் சிறந்தவர் என இந்த அன்பான தேவனைக் குறித்துக் கூறுகின்றது.

வெளிச்சம் என்பதற்கு "அலங்காரம்", "அழகு", "சௌந்தரியம்" என பொருள் கொள்ளலாம். எனவேதான், சங்கீதக்காரன் சங்கீதம் 149 : 4ல் **சாந்த குணமுள்ளவர்களை இரட்சிப்பினால் அலங்கரிப்பார்** எனக் கூறப்பட்டுள்ளது. அப்படியானால் ஒளியைப் பெற்றவர்கள் அலங்காரமாயிருப்பார்கள். ஒளியைப் பெற்றவர்களுக்கு புறம்பான அலங்காரம் தேவையில்லை. இந்த அலங்காரத்தின் வெளிச்சத்தினால்தான் தாவர உலகின் பூக்களும், நிறங்களும், இயற்கைகளும் பார்ப்பதற்கு அழகாயும், கவர்ச்சியாயும் உள்ளது. மெய்யான ஒளியின் சிறப்பே இதற்குக் காரணம்.

நான்காவதாக, வெளிச்சம் இலவசம்! எவராவது சூரியனை, சந்திரனை பாரக்கிறதற்கு காசு கொடுத்து பார்க்கிறார்களா? என்றால் இல்லை. சூரியன் உதிக்கும் உரிமையை யாராலும் பறிக்க முடியாது. எனவேதான் ஆண்டவர் ஏசாயா 55 : 1ல் **நீங்கள் வந்து, பணமுமின்றி, விலையுமின்றித் திராட்சரசமும், பாலும் கொள்ளுங்கள்** என்றார். தேவனுடைய வெளிச்சம் ஏழை, பணக்காரன், படித்தவன், படிக்காதவன், என்று எவருக்குமே பட்சபாதம் பார்ப்பதல்ல. இவர் பாவம் ஏழை, இவருக்கு வெளிச்சம் தரலாம் என்று நினைப்பதில்லை. மண் குடிசையோ, மாளிகையோ எல்லாருக்கும் வெளிச்சம் என்பது இலவசம். எந்தத் திறமை பெற்றவராலும் திறமைகளாலும் இதைக் கட்டுப்படுத்தவோ, வரையறுக்கவோ முடியாது. இதை எத்தனை கடின உழைப்பாலும் உண்டாக்க முடியாது. வெளிச்சத்திலிருந்து வருகின்ற அத்தனையுமே இலவசம்.

என் அன்பானவரே! இதைப்போன்ற தேவன் உனக்களித்த கிருபைகளையும், வல்லமையும், மற்றவர்களுக்கு இலவசமாக கொடுக்க நீ முன் வருவாயா! நீங்கள் இலவசமானவர்கள். **உங்களுடைய ஊழியம் இலவசம். ஆனாலும், நீங்கள் மலிவு அல்ல.**

ஐந்தாவதாக, வெளிச்சத்தில் எல்லா உண்மைகளும் வெளிப்படும். (Light reveals all things) வெளிச்சத்தில் பல உண்மைகள் வெளிப்படும். உன் வாழ்க்கையில் உள்ள தடைக்கல், ஆழம், உயரம், ஆபத்து, சத்துரு, தீமை ஆகிய

இவைகளை வெளிச்சத்தினால் காண முடிகிறது. இந்த உண்மையை இச்செய்தியின் ஆரம்பத்திலேயேக் குறிப்பிட்டுள்ளேன். திரும்ப ஒரு முறை அதை வாசிக்க அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

நீங்கள் எங்கெல்லாம் போகிறீர்களோ, அங்கெல்லாம் ஜனங்களுக்கு பூரண சத்தியத்தை வெளிப்படுத்துகிறவர்கள். நீங்கள் கலப்படமில்லாத சத்திய வசனத்தை துப்புரவோடு பேச அழைக்கப்பட்டவர்கள். இருளான இடங்களில் இவ்வெளிச்சம் பிரகாசிக்கும் போது, இருள் அடியோடு ஒழிக்கப்படுகின்றது. ஒளியின் கதிர்களால் பாவம் கண்டுபிடிக்கப்படுகின்றது. இதைத்தான் கிறிஸ்துவும், பரிசுத்த ஆவியானவரும் இன்றைக்கு திருச்சபையிலும் ஒவ்வொரு தேவனுடைய பிள்ளையின் வாழ்க்கையிலும் செய்து கொண்டு வருகின்றனர்.

அடுத்தபடியாக, இந்த வெளிச்சம் உள்ளத்தில் உள்ளவைகளை ஆராய்ந்து அறிகிறது மறைவான காரியங்களை வெளியே கொண்டு வருவது வெளிச்சமே!

ஆறாவதாக, வெளிச்சத்தினாலேதான் பூமியிலே கனிகளும், காய்களும், பூக்களும் உண்டாகிறது. வெளிச்சம் தான் இயற்கைக்குத் தாய். இயற்கையின் வளங்கள் பூமியிலே பெருகவேண்டுமானால் இலைகளும், பூக்களும், கனிகளும் பூமியிலே உண்டாக வேண்டுமானால் இயற்கைக்கு தாயாக இருக்கிறது வெளிச்சம். வெளிச்சமில்லை என்றால், கனிகளும் பூக்களும், இலைகளும் பசுமையாக இருக்காது என்பது நாம் யாவரும் அறிந்த ஒன்றாகும்.

இருள் நிறைந்த உலகத்திற்கு நாம்தான் ஆதாரம். கனியுள்ள வாழ்க்கை வாழ வேண்டுமானால், இயேசுவை பிரதிபலிக்க வேண்டுமானால், தேவனால் பயன்படுத்தபட வேண்டுமானால், நமக்கு வெளிச்சம் தேவை! தேவனுடைய வெளிச்சத்திலே நாள்தோறும் களிகூறுங்கள். தேவனுடைய வெளிச்சத்திலே தேவ வசனத்தை படியுங்கள். வேத வசனத்தின் வெளிச்சத்திலே வெளிச்சம் காணுங்கள்!

ஏழாவதாக, வெளிச்சம் பூமியை சமநிலை பிரமாணத்தில் வைத்துக்கொள்ளுகின்றது. வெளிச்சம் மட்டும் இல்லாவிட்டால் பூமி பனிக்கட்டியைப் போல் உறைந்து, பிறகு எங்கு பார்த்தாலும் பனிக்கட்டியாகவே காணப்படும். இப்படியாக பூமியின் தட்பவெப்ப நிலையை ஒழுங்காகச் சீர்ப்படுத்தி சமநிலைப் பிரமாணத்திலே வைத்துக்கொள்ளுகின்றது. இந்த வெளிச்சம் பூமிக்கு உஷ்ணத்தைத் தந்து, பூமியை சரியான நிலையிலே பக்குவப்படுத்துகிறது.

வெளிச்சம் இல்லாவிட்டால், இந்தப் பூமியானது பனிக்கட்டி மாதிரி ஆகிவிடும். நாம் சாலையில் கடந்து போக முடியாது. வீட்டிலே இருக்க முடியாது. நம்முடைய அன்றாட அலுவல் எதையுமே செய்ய முடியாது. வெளிச்சம் இல்லாவிடில் உறைந்து போன உலகம், உறைந்து போன மக்கள், உணர்ச்சியற்ற ஜீவன்கள் என பட்டியல் நீண்டு கொண்டே போகும். இவ்விதமாக, உணர்ச்சியற்ற ஜீவனுக்கு உணர்ச்சியைத் தருவதும், உறைந்து போன பனிக்கட்டியை போலிருக்கிற இந்த மனித சமுதாயத்திற்கு வெளிச்சத்தைத் தந்து, அவர்களைப் பக்குவப்படுத்துவதும் "வெளிச்சமே".

எட்டாவதாக, வெளிச்சம் மகிழ்ச்சியையும், புதிய நம்பிக்கையையும் தருகின்றது. LIght Gives Joy அப்போஸ்தலனாகிய பவுல் அப்போஸ்தலர் 27 : 20ல் "அநேக நாளாய்ச் சூரியனாவது நட்சத்திரங்களாவது காணப்படாமல், மிகுந்த பெருங்காற்று மழையும் அடித்துக் கொண்டிருந்த படியினால், இனி தப்பிப் பிழைப்போம் என்ற நம்பிக்கை முழுமையும் அற்றுப்போயிற்று" என தங்களது பிரயாணத்தின் அனுபவத்தைக் குறித்து கூறுவதைக் காணலாம். தங்கள் பிரயாணத்திலே இது இரவா? பகலா? என்று கூட அவர்களுக்கு புரிந்து கொள்ளமுடியாத ஓர் சூழ்நிலை. இனி தப்பிப் பிழைப்போமென்னும் நம்பிக்கை முழுமையும் தங்களுக்கு அற்றுப்போன ஒரு நிலையில்தான் வெளிச்சத்தைக் கண்டார்கள்.

வெளிச்சத்தைக் கண்ட பிறகுதான் சாப்பிட்டார்கள். இன்றைக்கும் இந்த உலகத்திலே எத்தனையோ பேர் ஆத்தும பசியாலும், எழுத்தின்படியான பசியினாலும் வாழ்கிறார்கள். ஏனென்றால் ஒளியாகிய இயேசுவை அவர்கள் இன்னும் கண்டுகொள்ளாததே காரணம். நம்பிக்கை அற்ற உலகத்திலே நம்பிக்கையைக் கொடுப்பது வெளிச்சமே. சூரியனைப் பார்த்த பிறகுதான் அவர்கள் ஜீவன் பெற்றார்கள். அதற்கு பிறகு அவர்களுக்குள் ஒரு புது பெலன். அன்பு ஊழியர்களே! இருளில், சாபத்தில், பசியில், பட்டினியில், அந்தகாரத்தில் வாழும் மக்களுக்கு ஒளிதரும் தீபங்களாய் வாழ நம்மை அர்ப்பணிப்போம்.

ஒளியான தேவனும், வெளிச்சத்தின் ஊழியர்களுமே வாழ்வின் சகல ஆசீர்வாதங்களுக்கும் மூலகாரணம்!

சிலுவை தியானம்

கல்வாரியின் சோதனைகளும், சாதனைகளும்!

கல்வாரியின் இரட்சகர் இயேசு கிறிஸ்துவின் ஒவ்வொரு பாடுகளும் உன் **கசப்பான வாழ்க்கையை களிப்பான வாழ்க்கையாய்** மாற்றவே! எப்படி என்பதை இச்செய்தி விளக்குகின்றது. கருத்தாய் தியானியுங்கள்!

ஒரு மனிதனுக்கு ஒரு சிறிய பாடு இருந்தாலே அதைச் சமாளிப்பது என்பது கடினமான ஒரு காரியம். ஒரு சிலர் சொல்லுவார்கள் வியாதி இருந்தால் பரவாயில்லை, அதை சமாளிக்க முடியும். ஆனால், மனபாரத்தை தான் என்னால் சமாளிக்க முடியவில்லை எனக் குறைபட்டுக் கொள்ளுவார்கள். ஆனால் ஒரு மனிதனுக்கு மேலே கூறின இரண்டு பாடுகளும் சேர்ந்து வரும்போது அவன் செயலற்றவனாய் மாறிவிடுகிறான். ஆத்தும பாடுகளும், சரீரப் பாடுகளும் சேர்ந்து ஒரு மனிதனை தாக்கும்போது, அவன் எவ்வளவு பெரிய பலசாலியாய் இருந்தாலும், அவன் செயலற்று விடுகிறான்.

உலகத்தின் பாடுகள் ஒரு மனிதனை தாக்கும்போது, அவன் நம்பிக்கையற்றவனாய், உதவியற்றவனாய் மாறிவிடுகிறான். நமது இரட்சகராகிய இயேசு கிறிஸ்துவோ இந்த இரண்டு நிலைகளிலுமே தாக்கப்பட்டார். He sufferd Physically and Mentally. ஆண்டவர் இயேசு உள்ளத்தாலும், சரீரத்தாலும் தாக்கப்பட்டார். அதைத் தான் இந்த சிலுவை தியான நாட்களில் நான் உங்களோடு பகிர்ந்துக்கொள்ள விரும்புகின்றேன். சிலுவைக்கு முகவுரையாக இரண்டு காரியத்தைக் கூற விரும்புகின்றேன். Cross is Anything and, Cross is Everything.

இந்த வேதத்தினுடைய மையமே சிலுவைதான் என்று கூறினால் மிகையாகாது. சிலுவை இல்லாவிட்டால், இன்றைக்கு கிறிஸ்தவமே இல்லை. பல நாடுகள், பட்டணங்கள் என பலவற்றை தனக்குள்ளே வைத்திருக்கின்ற ஐந்து கண்டங்கள். ஆனால், உலகத்தினுடைய நடுமையம் இங்கிலாந்திலுள்ள வெஸ்ட் மினிஸ்டர் (இங்கேதான் விக்டோரியா மகாராணி முதல் இளவரசியாய் முடிசூட்டப்பட்ட இடம், இங்கிலாந்தின் மிகப்பெரிய கதீட்ரல் இங்குதான் உள்ளது) இதைப்போலவே, வேதத்தினுடைய நடுமையமே சிலுவைதான். அந்த சிலுவையினுடைய நடுமையமாய் விளங்குகிறவர் கிறிஸ்து.

வேத புத்தகத்திலே நீங்கள் எங்கு பார்த்தாலும் சிலுவையில்லாமல் இல்லை. ஆதியாகமத்திலிருந்து வெளிப்படுத்தல் வரை சிலுவை பின்னிப் பிணைந்துள்ளது.

ஆதியாகமம் 3 : 15லேயே "சிலுவை" ஆரம்பிக்கிறது. **அவர் உன் தலையை நசுக்குவார். நீ அவர் குதிக்காலை**

நசுக்குவாய். உன் வித்துக்கும் அவள் வித்துக்கும் பகையை உண்டாக்குவேன். தொடர்ந்து, வேதத்தின் கடைசி புத்தகமாகிய வெளிப்படுத்தலும் சிலுவையோடு முடிகிறதை வெளி 13 : 8ல் காணலாம். உலகத்தோற்றமுதல் அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியினுடைய ஜீவபுஸ்தகம்.

அந்த ஆட்டுக்குட்டி சிலுவையிலே அடிக்கப்பட்டது. மட்டுமல்ல, யாத்திராகமம், லேவியராகமம், எண்ணாகமம் போன்ற எல்லாப் புத்தகங்களிலும் சிலுவையைக் குறித்து வாசிக்கிறோம்.

லேவியராகமத்தில் முதல் அதிகாரம் **சிந்தனையில் சிலுவை.**

2ம் அதிகாரம் - **வாழ்க்கையின் அன்றாட தேவைகளில் சிலுவை.**

3ம் அதிகாரம் - **சமாதானத்தின் சிலுவை.**

4ம் அதிகாரம் - **பாவத்தின் சிலுவை.**

5ம் அதிகாரம் - **மீறுதலின் சிலுவை.**

6ம் அதிகாரம் - **நிவிர்த்தியாக்கும் சிலுவை.** (லேவி 6 : 7)

அப்போஸ்தலனாகிய பவுல் எங்கெல்லாம் வசனத்தை போதித்தாரோ, அங்கெல்லாம் "சிலுவையைப்" பற்றி பேசாமல் இருந்ததில்லை. வேதமே சிலுவையினால் சூழப்பட்டிருக்கிறது. மத்தேயு சுவிசேஷத்தில் மாத்திரம் 141 முறை சிலுவை வருகிறது.

மாற்கு சுவிசேஷத்தில் 119 முறை சிலுவை வருகிறது.

லூக்கா சுவிசேஷம் 2 அதிகாரங்கள் சிலுவையைக் குறித்துப் பேசுகிறது.

யோவான் சுவிசேஷம் பாதிக்குமேல் சிலுவையைக் குறித்துதான் பேசுகிறது.

பவுல் நிருபங்கள் முழுவதும் சிலுவை. இப்படியாக வேதத்திலுள்ள ஒவ்வொரு புத்தகத்திலும் சிலுவை இரண்டறக் கலந்து இருக்கிறது.

இராஜாக்கள் புத்தகத்திலே சிலுவை மறைந்திருக்கிறது. காணாமற்போன கோடாரி. அந்தக் கோடாரியை உருவகப்படுத்துவது "சிலுவை". அவன் ஒரு கொம்பை வெட்டி, அந்த கொம்பை தண்ணீருக்குள் வீசி, அதை மிதக்கப்பண்ணினான், விழுந்துபோன மனித சமுதாயத்தை தூக்கியெடுப்பது "சிலுவை". மூழ்கிப்போன கோடாரியை தூக்கியெடுத்தது ஒரு மரம். அந்த மரம் ஏசாயாவில் எழுதப்பட்டிருக்கிறது (ஏசாயா 11 : 1) ஈசாயென்னும் அடிமரத்திலிருந்து ஒரு துளிர் தோன்றி, அவன் வேர்களிலிருந்து ஒரு கிளை எழும்பிச் செழிக்கும் எனக் கூறும் சிலுவை மரத்தையேக் குறிக்கின்றது.

சிலுவையிலே தொங்கும் சிலுவையின் ஆண்டவரைக் குறித்து நான் உங்களோடு மூன்று தலைப்புகளில் இங்கே பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

1. கண்கள் மறைக்கப்பட்ட கிறிஸ்து Blinded Christ

2. கரங்கள் கட்டப்பட்ட கிறிஸ்து Bounded Christ

3. நிர்வாணியாக்கப்பட்ட கிறிஸ்து Naked Christ

முதலாவது, குருடாக்கப்பட்ட கிறிஸ்து. லூக்கா 22 : 64லும், மத்தேயு 26 : 68லும் அவர் அடிக்கப்பட்டார், நொறுக்கப்பட்டார், சிறுமைப்படுத்தப்பட்டார் எனவும், தொடர்ந்து லூக்கா நற்செய்தி நூலில் அவருடைய கண்கள் கட்டப்பட்டது எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. ஒரு மனிதனுடைய கண்கள் மறைக்கப்படும்போது அவன் "குருடாகிறான்". பார்க்கும் திறமையை இழந்து விடுகிறான். மட்டுமல்ல, செயல்படும் திறமையையும் அவன் இழந்து விடுகிறான். செயல்படும் மனிதன் கண்கள் கட்டப்படும்போது, செயல்படாத நிலைக்கு தள்ளப்படுகின்றான்.

என் அன்பான தேவப்பிள்ளையே! இந்த பூமியிலே அவர் பரியாசப்படுத்தப்பட்டார், சிறுமைப்படுத்தப்பட்டார், அவமானப்படுத்தப்பட்டார். இதற்கு மேலாக, அவர் கண்கள் கட்டப்பட்டார். இந்நாளிலே ஒரு நிமிடம் இதை சற்றே சிந்தித்துப் பார்ப்பாயா? இதைச் செய்தவன் "காய்பா" என்ற ஆசாரியன். பிறவிக் குருடனாகிய பர்திமெயுவினுடைய கண்களைத் திறந்தவர், இருளாயிருக்கிற உலகத்திற்கு வெளிச்சத்தைக் கொடுத்த அதே இயேசு கிறிஸ்து கல்வாரிச் சிலுவையிலே கண்கள் கட்டப்பட்டார். மத்தேயு 26 : 68ல் கிறிஸ்துவே உம்மை அடித்தவன் யார்? அதை "ஞானதிருஷ்டியினால் எங்களுக்குச் சொல்லும்" என்றார்கள்.

ஆன்மீக குருடர்கள் மத்தியிலே, ஆண்டவர் இயேசுவை அவரை இந்த நிலைக்கு ஆளாக்க வைத்தது என்ன? இதற்கு விளக்கத்தை ரோமர் 1 : 2ல் காணலாம். "அவர்கள் தேவனை அறிந்தும் அவரை தேவனென்று மகிமைப்படுத்தாமலும், ஸ்தோத்தரியாமலுமிருந்து தங்கள் சிந்தனைகளினாலே வீணரானார்கள்; உணர்வில்லாத அவர்களுடைய இருதயம் இருளடைந்தது". இது ஆண்டவரைத் துதிக்காத மக்களைக் குறித்து எழுதப்பட்ட வார்த்தை, உணர்வுகளிலே, சிந்தனையிலே, வார்த்தையிலே வீணரானார்கள், அந்தகாரப்பட்டார்கள்.

அன்பான கர்த்தருடைய பிள்ளைகளே! அன்றைக்கு அவருடைய கண்களை கட்டியவர்கள் தேவனென்று அறிந்தும், மார்க்க வெறியினால், ஒருவன் கண்களைக் கட்டினான், வேறு ஒருவன் குட்டினான், இன்னொருவன் "உம்மை அடித்தவன் யார்? ஞானதிருஷ்டியினாலே அதை எங்களுக்குச் சொல்லும்" என ஒவ்வொருவரும் ஒவ்வொரு தகாத செயலை செய்தனர்.

"வரப்போகிற காரியங்களையெல்லாம் சொல்லுகிற தீர்க்கதரிசியே, உன்னை அடித்தவன் யார்?" என்று சொன்ன இந்த வார்த்தைகள் ஒரு தனிமனிதனுடைய வார்த்தைகள் அல்ல. ஒட்டுமொத்தமான ஒரு சமுதாயத்தின் வார்த்தையாகும். மட்டுமல்ல, இதை ஒரு தனிமனிதன் செய்யவில்லை, ஒரு ஒட்டுமொத்தமான மனித சமுதாயத்தின் செயல்பாடு. It is not a man it is a society who done these things. நீதிமொழிகள் 8 : 27 -30ல் "அவர் வானங்களைப் படைக்கையில், நான் அங்கே இருந்தேன்; அவர் சமுத்திர விலாசத்தை

வட்டணிக்கையிலும், உயரத்தில் மேகங்களை ஸ்தாபித்து, சமுத்திரத்தின் ஊற்றுகளை அடைத்து வைக்கையிலும், சமுத்திர ஜலம் தன் கரையை விட்டு மீறாதபடிக்கு, அதற்கு எல்லையைக் கட்டளையிட்டு, பூமியின் அஸ்திபாரங்களை நிலைப்படுத்துகையிலும், நான் அவர் அருகே செல்லப்பிள்ளையாயிருந்தேன்" எனக் கூறப்பட்டுள்ளது. சிருஷ்டிப்பின் ஆரம்பத்திலிருந்த கிறிஸ்து, சிருஷ்டிகளின் உருவாக்கத்தைக் கண்ட கிறிஸ்து, இப்பொழுதோ சிலுவையில் **கண்கள் கட்டப்பட்டவராயிருக்கிறார்.**

திரளான ஜனங்களைக் கண்டு மனதுருகின கிறிஸ்து இப்பொழுதோ பார்க்க முடியாதவராய் சிலுவையிலே இருந்தார், 1பேதுரு 2 : 22. 23ல் **"அவர் பாவஞ் செய்யவில்லை, அவருடைய வாயிலே வஞ்சனை காணப்படவுமில்லை; அவர் வையப்படும்போது பதில் வையாமலும், பாடுபடும்போது பயமுறுத்தாமலும் நியாயமாய்த் தீர்ப்புச் செய்கிறவருக்குத் தம்மை ஒப்புவித்தார்"** இந்த வசனங்களை சிலுவையிலே இரட்சகர் நிறைவேற்றினார்.

இருள் நிறைந்த உலகத்திற்கு வெளிச்சம் தந்தவர். இன்றைக்கு இருளுக்குள்ளானார். அவர் கண்களில் பரிசுத்தம், அவருடைய கண்களிலே கிருபை, அவருடைய கண்கள் அக்கினி ஜுவாலிக்கிற வெளிச்சம் நிறைந்த கண்கள் என்றெல்லாம் வேதத்தில் கூறப்பட்டுள்ளது. மட்டுமல்ல, இவர்தான் உலகத்தின் சாட்சி. சிலுவைக்கு சாட்சியாய் வாழ்ந்தவர். அப்படிப்பட்டவர் அன்றைக்கு சிலுவையிலே கட்டப்பட்டார்.

எனக்கு அன்பானவரே! இன்றைக்கு உங்கள் வாழ்க்கையிலே அவர் எப்படியிருக்கிறார்? அவர் கண்கள் கட்டப்பட்டவராய் இருக்கிறாரா? கட்டவிழ்க்கப்பட்டவராய் இருக்கிறாரா?

உன் வாழ்வில் ஆண்டவருடைய கண்கள் கட்டப்படும் பொழுது அவருடைய பரிசுத்தம், கிருபை, காருண்யம், இரக்கங்களும்கூட கட்டப்படுகிறது என்பதை மறந்து போக வேண்டாம்!

ஏசாயா 53 : 7 **"அவர் நொறுக்கப்பட்டும், ஒடுக்கப்பட்டும் இருந்தார். ஆனாலும் தம்முடைய வாயை அவர் திறக்கவில்லை, அடிக்கப்படும்படி கொண்டு போகப்படுகிற ஒரு ஆட்டுக்குட்டியைப் போலவும், தன்னை மயிர் கத்தரிக்கிறவனுக்கு முன்பாகச் சத்தமிடாதிருக்கிற ஆட்டைப் போலவும், அவர் தம்முடைய வாயைத் திறவாதிருந்தார்".** இந்த நிலைக்கு இரட்சகர் தன்னை உட்படுத்திக் கொள்ளக் காரணம்.....

இந்த பூமியிலே ஒவ்வொரு தனிமனிதனின் கண்களும் எப்படியாவது திறக்கப்பட வேண்டும் என்பதற்காகவே! மட்டுமல்ல, இப்பிரபஞ்சத்தின் தேவனாகிய பிசாசு உன் கண்களை குருடாக்கி விடக்கூடாது என்பதற்காகவுமே அவர் இந்த நிலைக்கு ஆளானார்.

அன்பானவர்களே! இருளுக்குள்ளே வாழ்ந்து கொண்டிருக்கிற மனித சமுதாயத்தை கட்டவிழ்ப்பதற்காக இயேசு

தன்னுடைய கண்கள் கட்டப்படும்போது அதை ஏற்றுக் கொண்டார். அவருடைய மகிமை பரியாசம் பண்ணப்பட்டது. அவருடைய கண்களில் இருந்த "பரிசுத்தம்" ஒரு சமாரிய ஸ்திரீயை மாற்றியது.

பரிசுத்தம், கிருபை, நீதி, நேர்மை, சத்தியம் ஆகிய இவைகள் பரியாசம் பண்ணப்பட்டது. கட்டப்பட்ட அவருடைய கண்களைக் குறித்து ஒவ்வொருவரும் ஒவ்வொரு கேள்வி கேட்டனர். ஆனால் ஒருவராவது இதைச் சரியாய் புரிந்து கொள்ளமுடியாத குருடராயிருந்தனர். "Every one talks, but no one reads". அவருடைய கண்கள் எதையெல்லாம் பார்த்ததோ, அங்கெல்லாம் அற்புதம். இப்படிப்பட்ட அற்புதத்தின் கண்கள் கட்டப்பட்டிருந்தது.

சிலுவையிலே என் தேவனே ஏன் என்னைக் கைவிட்டீர் என்றவர்,

அதோ உன் மகன் என்றவர்.

உம் கரத்தில் என் ஆவியை ஒப்புவிக்கிறேன் என்றவர்

"இந்தக் கட்டை அவிழ்த்து விடுங்கள்" என்று சொல்லியிருக்கலாம். ஆனால், அவர் அதைக் கூறவில்லை. மாறாக, சமுதாயத்தை வாழவைக்க இந்த கட்டுகளை ஏற்றுக் கொண்டார். சிலுவையினாலே மனிதனுக்கு கிடைக்கிற முதல் ஆசீர்வாதம் அவருடைய மகிமையின் ஒளி, மனிதனுடைய வாழ்க்கையில் பிரகாசிக்கின்றது. எனவேதான், தேவனுடைய

பக்தர்கள் "உம்முடைய முகத்தின் ஒளியை எங்கள்மேல் பிரகாசிக்கப்பண்ணும்" என்று கூறும் உள்ளத்தின் ஆதங்கத்தை வேதத்தில் அநேக இடங்களில் நாம் காண்கிறோம்,

2கொரிந்தியர் 4 : 4ல் பவுல் **தேவனுடைய சாயலாயிருக்கிற கிறிஸ்துவின் மகிமையான சுவிசேஷத்தின் ஒளி** என இந்த ஒளியின் மேன்மையை விவரிக்கிறார்,

இன்றைக்கு ஆண்டவர் உன்னுடைய வாழ்க்கையில் கண் கட்டப்பட்டவராய் இருக்கிறாரா? அல்லது "காண்கிறவராய்" இருக்கிறாரா? ஆண்டவர் கண்கள் கட்டப்பட்டும் பதில் பேசாமலிருந்தார். காரணம், நீயும் அவரைப் போல் இப்படிப்பட்ட சூழ்நிலைகளில் அமைதியாய் இருக்க வேண்டும் என்பதற்காக, அவர் அமைதியாயிருந்து ஏசாயாவின் தீர்க்கத்தரிசனத்தை நிறைவேற்றினார்.

இரட்சகர் இயேசுவிற்கு சிலுவையில், சரீர வேதனைகளும் ஆத்தும வேதனைகளும் இருந்தது. இந்த வேதனைகள் எல்லாம் இருந்தும்கூட அவருடைய வாயில் தேவனுடைய வசனமிருந்தது.

கண்கள் கட்டப்பட்டிருந்தாலும், உள்ளம் திறந்திருந்தது. அவருடைய கண்கள் கட்டப்பட்டதினால் அவருடைய மகிமை, பரிசுத்தம், வல்லமை யாவும் கட்டப்பட்டது. அதனாலேயே பூமி அந்தகாரம் அடைந்தது. அவர் கண்கள் கட்டப்பட்டதனால், உன் வாழ்க்கை வெளிச்சம், பிரகாசம் என்பது இதினால் புலப்படுகின்றது அல்லவா!

மனிதனுடைய குருட்டாட்டம் இயேசுவின் சத்தியத்தை மறைக்க முயன்றது. ஆனால் சத்தியம் இன்றும் பூமியில் தழைத்துக் கொண்டிருக்கிறது. அன்றைக்கு அவர்கள் கண்கள் மாத்திரமல்ல, சத்தியத்தையும் கட்டினார்கள். ஆனால் சிலுவையோ இன்றைக்கும் பேசுகின்றது.

இரண்டாவது, கட்டப்பட்ட கிறிஸ்து மத்தேயு 27 : 1, 2ல் இரட்சகர் இயேசுவின் கண்களை கட்டினது காய்பா என்கிற பிரதான ஆசாரியர். இங்கே, பொந்தியு பிலாத்துவினிடத்தில் கட்டி கொண்டுபோய் ஒப்புக் கொடுத்தார்கள். ஆதியாகமம் 22 : 9ல் இதே வார்த்தை பயன்படுத்தப்பட்டுள்ளன. (வேதத்தை திறந்து வாசிக்க அன்புடன் கேட்டுக்கொள்ளுகின்றேன்). இந்த இடங்களிலே பயன்படுத்தப்பட்ட ஒரு வார்த்தை கிரேக்க பாஷையில் Akadarf (அக்காடர்ப்) என்று சொல்லப்பட்டுள்ளது.

ஆண்டவர் தம்முடைய கரங்களினால் செய்த அற்புதங்கள் சொல்லி முடியாதது. இந்தப் பூமியில் அவர் எத்தனையோ வியாதியஸ்தர்களை தொட்டார். பேதுரு மல்குஸ் என்னும் பிரதான ஆசாரியனின் வேலைக்காரனின் காதை வெட்டினபோது, எந்த மல்குஸ் காதை தொட்டு சுகமாக்கினாரோ, அதே மல்குஸ் இந்த இடத்தில் இருந்தார். கட்டப்பட்டவனை கட்டவிழ்த்த இயேசு கிறிஸ்து கட்டப்பட்டவராய் இருந்தார்.

ஆதி 42 : 24ல் "யோசேப்பு சிமியோனை கட்டுவித்தான்" எனக் கூறப்பட்டுள்ளது. யோசேப்பு அன்புக்காக அவனைக் கட்டினான்.

ஆண்டவருடைய வார்த்தைக்கு கீழ்படிந்து, ஆபிரகாம் ஈசாக்கை கட்டினான்.

சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ கட்டப்பட்டவர்களாய், அக்கினி ஜ்வாலைக்குள் போடப்பட்டார்கள்.

சிம்சோன் பாவத்தினால் கட்டப்பட்டான்.

எரேமியா உட்காவலறையில் கட்டப்பட்டவனாய் இருந்தான்.

இவ்விதமாக. அநேகர் வேத புத்தகத்திலே கட்டப்பட்டவர்களாய் இருந்தார்கள். ரோம அரசாங்கத்தின்படி கைகள் கட்டப்படக்கூடாது என்பது பிரமாணம்.

அப்போஸ்தலர் 22 : 29ல் பவுல் கட்டப்பட்டபோது, அங்கேயிருந்த சேனாபதி, இவன் ரோமனல்லவா! இவன் கைகள் கட்டப்படக்கூடாதே என்று சொன்னான். "சேனாபதி அவன் ரோமனென்று அறிந்து, அவனைக் கட்டுவித்ததற்காகப் பயந்தான்" என வேதம் கூறுகின்றது. மட்டுமல்ல,

ஒரு யூதனும் கட்டப்படக்கூடாது இது பிரமாணம். ஆனால் இயேசுவோ கட்டப்பட்டார். யூதன் ஒரு பாரம்பரியமுள்ளவன். அவன் கொலையே செய்திருந்தாலும் கூட அவனை நியாயாஸ்தனத்திற்கு கொண்டுவரும்போது அவன் கட்டப்பட்டவனாய் கொண்டுவரக்கூடாது. இதையும் மீறி இயேசு கட்டப்பட்டார். அவருக்கு இந்த பிரமாணங்கள் எல்லாம்

தெரிந்தும் அவர் மௌனமாய், அமைதியாய், பேசாமலிருந்தார். காரணம், உங்களுக்கும் எனக்கும் மாதிரியை வைத்துப் போயிருக்கிறார். இதேக் கரம்தான் அன்றைக்கு ஆலயத்தில் காசுக்காரர்களையும், வியாபாரிகளையும், சவுக்கால் அடித்தது. பிதாவின் வீட்டை கள்ளர் குகையாக்காதீர்கள் என தேவனுடைய வீட்டிற்காக பரிந்து செயல்பட்ட கரங்களாகும்.

பாவத்திலிருந்தும், சாபத்திலிருந்தும் விடுவித்தக் கரங்கள்.

இவ்விதமாக செயல்படுகிற ஆண்டவர் செயல்பட முடியாதவராய் கட்டப்பட்டு இருந்தார்,

சிலுவை மனிதனுக்கு தருவது விடுதலை, மீட்பு, ஒப்புரவாகுதல் ஆகும். கொலோசெயர் 1 : 20ன் படி விண்ணிலே உள்ளவர்களையும், மண்ணிலே வாழ்கிறவர்களாகிய இந்த இரண்டு பேரையும் நித்தியத்திலே ஒப்புரவாக்குவது சிலுவை.

அன்பானவர்களே! உங்களை அவர் நித்தியத்திலே சேர்க்க வேண்டுமானால், உங்கள் வாழ்க்கையில் அவர் சுயாதீனராய் இருக்க வேண்டும். பிரமாணத்தினாலே அவர் கட்டப்படக் கூடாதிருந்தது. ஆனால், அவர் உங்களுக்காக கட்டப்பட்டார். உங்கள் வாழ்க்கையில் கிறிஸ்து சுயாதீனமாய் இருக்கிறாரா? கட்டப்பட்டு இருக்கிறாரா?

மூன்றாவதாக. நிர்வாணியாக்கப்பட்ட கிறிஸ்து. (Naked Christ) சங்கீதம் 22 : 18, மத்தேயு 27 : 31,

மாற்கு 15 : 24, லூக்கா 23 : 34, யோவான் 19 : 23 ஆகிய வசனங்கள் இச்சம்பவத்தை வெளிப்படுத்துகின்றது.

சங்கீதம் 22 : 18ல் **"என் வஸ்திரங்களைத் தங்களுக்குள்ளே பங்கிட்டு, என் உடையின் பேரில் சீட்டுப் போடுகிறார்கள்"** எனக் கூறப்பட்டுள்ளது.

முந்தின ஆதாம், பூமியிலே நிர்வாணியாய் பிறந்தான். அவன் நிர்வாணி என்று அவனுக்கு முதன்முதலாய் அவனை உணர்த்தியது அவனுடைய பாவமே. எனவே, முந்தின ஆதாமின் பாவத்தினுடைய அந்த நிர்வாணத்தை மாற்றும் படியாக, பிந்தின ஆதாமாகிய ஆண்டவர் இயேசு இந்த பூமியிலே நிர்வாணியானார். சிலுவையிலே மரித்த மூன்று நபர்களுடைய பெயர்கள் பின்வருமாறு சொல்ல விரும்புகிறேன்.

1, இயேசு

2, கெஸ்தாஸ்

3. தெஸ்மாஸ்

ரோம அரசாங்கத்தில் மரிக்கிற எல்லா குற்றவாளிகளையுமே நிர்வாணியாகத்தான் சிலுவையிலே அறைவார்கள். இதுதான் ரோம அரசாங்கத்தின் பாரம்பரியம். முந்தின ஆதாம் நிர்வாணியாய் பிறந்தான். அவன் நிர்வாணம் அவனுக்கு தெரியவில்லை. ஆனால், அவன் பாவம் செய்தபோது தன்னுடைய நிர்வாணத்தை உணர்ந்தான். அந்த நிர்வாணத்தை மூடும்படியாகத் தான் பிந்தின ஆதாமாகிய இயேசு கிறிஸ்து கல்வாரி சிலுவையிலே நிர்வாணியானார்.

ஏன் இயேசுகிறிஸ்து கல்வாரி சிலுவையிலே நிர்வாணியானார்?

வெளி 16 : 15ல் "**தன் மானம் காணப்படத்தக்கதாக நிர்வாணமாய் நடவாதபடிக்கு விழித்துக்கொண்டு, தன் வஸ்திரங்களைக் காத்துக்கொள்ளுகிறவன் பாக்கியவான்**" என வேதம் கூறுகின்றது. இரட்சகர் இயேசு உலகத்தினுடைய எல்லா அவமானத்தையும் தன்மேல் ஏற்றுக்கொண்டார். ஆதாம் பாவம் செய்த பிறகுதான், தன்னுடைய நிர்வாணத்தை உணர்ந்தான். ஆனால் இவரோ பாவமே அறியாதவராயும், பாவத்தைப் பாராத பரிசுத்தக் கண்ணராயிருந்தும், முழு மனுக்குலத்தினுடைய பாவத்தையும் தன்மேல் ஏற்றுக்கொண்டபோது, அவர் நிர்வாணியாக்கப்பட்டார்.

நீ இந்தப் பூமியிலே மானத்தோடும், மரியாதையோடும் வாழ வேண்டும், விழித்திருந்து வாழ வேண்டும் என்பதற்காகவே அவர் அப்படியானார். அன்றைக்கு அவர் அவமானச் சின்னமாய் இருந்ததற்குக் காரணம் உன் மானம் காக்கும்படியாகவே! எனவேதான் "**உன் நிர்வாணத்தை நான் மூடினேன்**" என எசேக்கியேல் 16ம் அதிகாரத்தில் ஆண்டவர் கூறும் வார்த்தைகளைக் காணலாம்.

உன்னதமானவரின் மறைவுக்குள்ளே உன்னை பாதுகாக்கும்படியாய், இந்தப் பூமியிலே எல்லாவற்றையும் விட்டார்.

வஸ்திரத்தை மட்டுமல்ல, தன்னுடைய மாட்சிமையையும், வல்லமையையும், மகிமையையும், எல்லாவற்றையும் பூமியிலே உனக்காக விட்டார். காரணம், நீங்கள் இரட்சிப்பின் வஸ்திரத்தையும், வரப்போகிற இராஜாதி ராஜாவைப் பார்க்கிற அந்த எதிர்பார்ப்பின் வஸ்திரத்தை அணிந்து கொள்ளும்படியாகவும், மானம் காக்கும்படி உனக்கு வஸ்திரம் கொடுக்கும் படியாகவும், அவர் தன்னுடைய வஸ்திரத்தையே இழந்தார். இவைகள் யாவற்றிற்கும் ஒரே ஒரு காரணம், உங்களுக்காகவே! சிலுவையில் மரித்த, செயல்படுகிற கிறிஸ்துவை இப்பூமியில் நீ செயலாக்கவே இந்த சிலுவைப்பாடுகள்.

இரண்டு பேர்களில் ஒருவன் தன் ஜீவனை ஆதாயப்படுத்திக் கொண்டான். இரண்டு பேரும் பாவத்தில் மரித்துகிடந்தவர்கள். இரட்சகர் இயேசுவோ பாவத்துக்காக மரித்தவர்.

நீ கிறிஸ்துவை இந்தப் பூமியிலே எப்படியாவது வெளிப்படுத்த வேண்டும் என்பதற்காகவே பவுல் கலாத்தியர் 6 : 14ல் "நானோ நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் சிலுவையைக் குறித்தேயல்லாமல் வேறொன்றையுங் குறித்து மேன்மைபாராட்டாதிருப்பேனாக, அவரால் உலகம் எனக்குச் சிலுவையிலறையுண்டிருக்கிறது; நானும் உலகத்திற்குச் சிலுவையிலறையுண்டிருக்கிறேன்" எனக் கூறுகின்றார்.

சிந்தனைக்கு

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து சிலுவையில் அறையப்பட்டது வியாழக்கிழமையா? அல்லது வெள்ளிக்கிழமையா?

சமநோக்கு சுவிசேஷங்களான (Synoptic Gospels) மத்தேயு, மாற்கு, லூக்கா ஆகிய நற்செய்தி நூலாசிரியர்களின் கருத்து என்னவெனில் வெள்ளிக்கிழமை அன்றுதான் கிறிஸ்து சிலுவையிலறையப்பட்டார் என்று அழுத்தமாகவேத் தெரிவிக்கிறார்கள்.

ஆனால், யோவான் நற்செய்தி நூலில் 19ம் அதிகாரம் 14ம் வசனத்தில் அந்தநாள் பஸ்காவிற்கு ஆயத்தநாளும் ஏறக்குறைய ஆறுமணி நேரமுமாயிருந்தது; அப்பொழுது அவன் (பிலாத்து) யூதர்களை நோக்கி: **இதோ உங்கள் ராஜா** என்றான்.

இப்படியாக இல்லாவிட்டால், இம்முக்கிய விஷயம் சர்ச்சைக்குரியதாய் எழும்பியிருக்க அவசியமிருந்திருக்காது. இதேவண்ணம் புதிய திருப்புதல் (NIV) இதை இன்னும் எளிதாக்கி இவ்வண்ணம் கூறுகின்றது.

அது பஸ்கா பண்டிகை, வாரத்தினுடைய ஆயத்த நாளாயிருந்தது. ஏறக்குறைய அப்போது ஆறாம்மணி நேரமாயிருந்தது என்று எழுதப்பட்டுள்ளது. பிந்திய மொழி பெயர்ப்பில் (NIV) இரண்டு முக்கிய குறிப்புகளை உபயோகத்தில் கொண்டுள்ளது. முதலாவது Paraskueue என்ற வார்த்தை, ஏற்கனவே கி.பி. முதல் நூற்றாண்டு தொடங்கிய வெள்ளிக்கிழமையைக் குறிக்கும் மரபுச் சொல்லாகும். மேலும் ஒவ்வொரு சனிக்கிழமையாகிய ஓய்வு நாளுக்கும் வெள்ளிக்கிழமையே ஆயத்த நாளாகவும் இருந்து வந்திருக்கிறது. எனவே Paraskuae என்ற நவீன கிரேக்க வார்த்தை வெள்ளிக்கிழமையையே குறிக்கும். இரண்டாவது கிரேக்க மரபுச் சொல்லான Tou Pascha என்றும், பஸ்கா வாரம் என்றும் சமமாகவே இரண்டுக்கும் பயன்படுத்தப்படுகிறது.

இது புளிப்பில்லா அப்பம் சாப்பிடுகிறதான ஏழுநாள் பண்டிகையையும், உடனே அதைத் தொடர்ந்து வருகிறதான ஆபிப் மாதத்தின் 14வது நாளின் மாலையில் ஆட்டுக் குட்டியை அடித்துப் புசித்தலுமாகிய பண்டிகையின் நாளையும்

குறிப்பதாகும். எனவே சூரியன் அஸ்தமித்தவுடன் எபிரேய கணக்கின்படி 15வது நாள் தொடங்கிவிடுகின்றது.

ஏழு நாள் புளிப்பில்லா அப்பப் பண்டிகையானது (Massot) பஸ்கா பண்டிகையைத் தொடர்ந்து வருதலாகும். பஸ்கா பண்டிகையானது (கசப்பான கீரையோடு ஆட்டுக் குட்டியின் மாம்சத்தையும் எழுத்தின்படி புசித்தலாகிய நியமம்) புளிப்பில்லா அப்பப் பண்டிகை, பஸ்கா பண்டிகை ஆகிய இவ்விரண்டும் சேர்ந்து பஸ்காவின் வாரம் என்று அறிந்துக் கொள்ளப்படுகிறது. (ஆதாரம் பிரிட்டானிகா கலைக் கருவூலம்) எனவே, இது 15வது நாள் தொடங்கி 21ம் நாள் வரை தொடர்கிறது. எனவே பஸ்காவை, புளிப்பில்லா அப்பம் சாப்பிடுகிற பண்டிகையாக உடனே தானே தொடர்ந்து வருகிறது. (15வது நாள் தொடங்கி 21வதுநாள் முடிய) எனவே, இந்த இரண்டு தனித்தனி பண்டிகைகளும் ஒன்றோடொன்று நடைமுறை அவசியத்தால் பழக்கமாக ஒன்றுபோல் கூறப்பட்டு ஒரே அமைப்பாக கருதப்பட்டுவிட்டது. எனவே, வாரம் என்று குறிப்பிடாமல், அவ்விதமான பண்டிகையை அது புரிந்து கொள்ளப்பட்டிருந்ததால் விசேஷித்தபடி, புதிய வார்த்தை (வாரம்) இணைக்க அவசியமில்லாமல் போய்விட்டது. ஆகையால் எழுத்தின்படியே, **பஸ்காவுக்கு ஆயத்த நாள்** என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

எழுப்புதலின் செய்தி

வீழ்ச்சியின் விளைவுகள்!



தேமா இந்த பிரபஞ்சத்தின் மேல் ஆசை வைத்தான், இந்த உலகத்தில் வாழ்வது என்பது ஒன்று. இந்த உலகத்தின் மீது ஆசை வைப்பது என்பது வேறொன்று.

ஆசை என்பதின் பொருள்

இப்பிரபஞ்சத்தின் மேலும், பிரபஞ்சத்திலிருக்கின்ற காரியத்தின் மேலும் அதிகமாய் இரண்டற கலந்துவிடுவது. நாம் சாதாரணமான மக்கள் அல்ல. அசாதாரணமான காரியங்களை செய்யும்படி நாம் சிருஷ்டிக்கப்பட்டோம். ஒரு வித்தியாசமான நோக்கம் என்னவென்றால் நீங்கள் உலக தோற்றத்திற்கு முன்னே சிருஷ்டிக்கப்பட்டவர்கள். உங்களுக்கு உங்கள் பிறந்தநாள் மட்டுமே தெரியும். ஆனால் உங்களைப் படைத்த தேவனுக்கு உங்களது வாழ்வின் எல்லா நாட்களும் தெரியும். வானத்தையும், பூமியையும் உருவாக்கும்போதே நீங்களும், நானும் இருந்தோம். அப்படியானால் உலக தோற்றத்திற்கு முன்னே இருந்த நாம் நம்முடைய நோக்கங்களை தவறான இடங்களில் படரவிட்டு விட்டோம்.

தேமா

"தேமா இப்பிரபஞ்சத்தின் மேல் ஆசை வைத்து" என்று வேதம் கூறுகின்றது. ஆசையில்லாத மனிதர்கள் எவருமில்லை. எல்லோருக்கும் ஏதோ ஒரு வகையில் ஆசையிருக்கும். ஆனால் உம்முடைய முழுமையான "இழுப்பு" சக்தி உலகத்தினுள் போய்விட்டால் உனது நிலை பரிதாபமாயிருக்கும். இந்த வசனத்தை இன்னொரு முறை படித்துப்பாருங்கள். "**ஆசை வைத்து, என்னை விட்டு பிரிந்து**" என்று எழுதப்பட்டுள்ளது. அப்படியானால் உலகத்தின்மேல் ஆசை வைக்கும்பொழுது தேவன் மேல் "பிரிவு" ஏற்படும் என்பதில் சந்தேகமில்லை. "பிரிவு" என்று சொன்னால் ஒரு இடைவெளி. அதாவது பின்மாற்றம்., ஒரு சரிவு. இதைத்தான் "பிரிந்து" என்று எழுதப்பட்டுள்ளது. ஜெபத்திலே பிரிந்து, வேதத்திலே பிரிந்து, சபையை விட்டு பிரிந்து, ஐக்கியத்தை விட்டு பிரிந்து, ஆவியானவரை விட்டு பிரிந்து, கடைசியில் எல்லாவற்றையும் விட்டு பிரிந்து வாழும் நிலை. என்றைக்குமே இழந்துபோனவர்கள் தாங்கள் ஒன்றை இழந்து போனோம் என்பதை எளிதில் ஒத்துக்கொள்ள மாட்டார்கள். இப்படிப்பட்ட உணர்வு அவர்களுக்கு சீக்கிரத்தில் வருவது கடினம். உணர்வு வரும், ஆனால் அது எல்லாம் முடிந்த பிறகு வருவது அர்த்தமற்றது. எனவேதான் ஆண்டவர்,

"**என் ஜனங்கள் என்னை விட்டு தூரப்பட்டு மாயையை பின்பற்ற என்னிடத்தில் என்ன அநியாயத்தைக் கண்டார்கள்**" என்று தம்முடைய ஜனத்தை பார்த்து கேட்டதாக வேதம் கூறுகின்றது.

"தூரமாயிருக்கிறார்கள்" என்று தேவன் சொல்கிறார். ஆனால் ஜனங்களோ நாங்கள் எங்கே தூரமாயிருக்கிறோம் என்று அறியாத மக்களைப் போல கேட்பது வேடிக்கையான ஒன்று. இதைத்தான் மல்கியா 4 அதிகாரம் 6 வசனத்தின் பின்பகுதியில், அதற்கு **நாங்கள் உமது நாமத்தை எதினால் அசட்டைபண்ணினோம்** என்கிறீர்கள். அசட்டை செய்கின்ற ஒருவரும் தான் அசட்டை செய்ததை ஒத்துக்கொள்வதில்லை. "நாங்கள் எதினால் உம்மை அசட்டை பண்ணினோம்" இதை இன்னொரு விதத்தில் சொன்னால் எங்கே ஆண்டவரை விட்டுவிட்டோம், ஆண்டவரை விடவில்லையே, ஆண்டவரோடுதானிருக்கின்றோம் என்ற பொய்யான ஒரு மாயையோடு சபைக்கு வருவதால் ஆண்டவரோடு இருப்பதாக அர்த்தமில்லை. இயேசுவாகிய பிள்ளை பன்னிரண்டாம் வயதிலே அவருடைய தாய், தகப்பன் கூட, குடும்பமாகத்தான் எருசலேமிற்கு வந்தார்கள். ஆனால் மூன்று பேராக வந்தவர்கள், திரும்பி போகும்போது இரண்டு பேராக சென்றார்கள். வரும்பொழுது பிள்ளையாகிய இயேசுவோடு கூட வந்தார்கள். ஆனால் திரும்பி போகும் பொழுது இயேசுநாதர் இல்லாமல்தான் போனார்கள். ஆனால் அவர்களுடைய நினைப்பு பிள்ளையாகிய இயேசு தங்களோடுதான் இருக்கிறார் என்று தவறாக நினைத்திருந்தார்கள். ஆனால் இயேசு தங்களோடு இல்லையென்பது மூன்று நாட்களுக்கு பிறகுத்தான் தெரிந்தது. இதுதான் இன்றைய கிறிஸ்தவ சமுதாயமும், ஆவிக்குரியவர்களின் நிலையும் ஆகும். நாங்கள் ஜெபம் செய்கின்றோம். ஆண்டவர் எங்கள் ஜெபத்தை கேட்கின்றார் என்று கூறும் பல கிறிஸ்தவர்கள் இங்கே கவனிக்க வேண்டும். "ஜெபத்தை கேட்கின்றார்" என்பதால் தேவன் உங்களோடு

இருக்கின்றார் என்று அர்த்தமல்ல. லேகியோன் பிசாசு பிடித்தவன் "ஆண்டவரே! நாங்கள் பன்றி கூட்டத்திற்குள் போக வேண்டும் உத்தரவு கொடும் என்று கேட்டான். ஆண்டவர் அப்படியே ஆகட்டும் என்றார். அப்படியானால் லேகியோன் பிசாசு பிடித்தவனோடு இயேசு இருந்தார் என்று அர்த்தமா? இல்லை. தேவன் ஜெபத்தை கேட்பது கிருபையின் அடிப்படையில்தான் என்பதை மறந்து போக வேண்டாம். உன் ஜெபம் கேட்கப்பட்டதினால் நீ பரிசுத்தவான் என்பதல்ல. **உன்னுடைய கிரியைகள்தான் உன்னை "பரிசுத்தவான்" என்று சொல்ல வேண்டும்.**

தொடர்ந்து மல்கியா 1 : 6ல் "நாங்கள் எதினால் உமது நாமத்தை அசட்டை பண்ணினோம்". இந்த வசனத்தில், ஆண்டவரே! "நீ என்னை அசட்டை செய்கிறாய், நீ என்னோடு இல்லை, நீ என்னை உதாசீனம் செய்கின்றாய்" என்று சொல்லும்பொழுது இவனோ, எப்படி நான் உம்மை அசட்டை செய்கிறேன்? என்று சொல்லுவது ஆச்சரியமாய் உள்ளது. ஆண்டவர் உன்னை குறித்து, உன் நிலைமையைக் குறித்து, உண்மையைத்தான் சொல்லுவார். "தேமா இப்பிரபஞ்சத்தின் மேல் ஆசை வைத்து பிரிந்து போய்விட்டான்". தவறு செய்கின்றது அவர்களுக்கே தெரியாமல் இருப்பது பரிதாபமானது. தேமா, அப்போஸ்தலனாகிய பவுலோடு கூடத்தானிருந்தான். ஆனால் அவன் மனந்தான் தூர போய்விட்டது. எலிசாவோடு கேயாசி என்கின்ற வேலைகாரனிருந்தான். எலிசா அவனை நோக்கி "நீ நாகமானோடு சென்றபோது என் மனம் உன்னோடு வரவில்லையா? என்றான்". கேயாசி எலிசாவோடுதான், அவன்

வீட்டில், அவன் கூடாரத்தில், அவனுடைய ஆகாரத்தைத்தான் சாப்பிட்டுக் கொண்டிருந்தான். ஆனால் இப்பொழுது அவன் மனம் பொருட்களின் மேலும், வசதியின் மேலும், வாய்ப்புகளின் பின்னாலும் போய்விட்டது.

தேமா பவுலை விட்டு பிரிந்து போக பவுலிடம் என்ன குறை இருந்தது என்பது யோசித்துப் பார்க்க வேண்டிய ஒன்று. கேயாசி எலிசாவிடம் "நான் எங்கும் போகவில்லை" என்று கூறின வார்த்தைகளைத்தான் நாமும் இன்று சரளமாக சொல்ல பழகிக் கொண்டு இருக்கின்றோம். இதைப்போலவே நம்முடைய எண்ணங்கள் யாவும் சில நேரங்களில் உலகத்தோடு போய்விடுகின்றது. இந்த பூமியில் பணம் தேவைதான். அது நமக்கு **நல்ல வேலைக்காரனாக இருக்க வேண்டுமே தவிர எஜமானாக மாறக் கூடாது.** உலகத்தினுடைய குறிக்கோள் உங்களை ஒன்றுமில்லாதவர்களாக மாற்ற வேண்டுமென்பதே. இந்த உலகம் பொல்லாத உலகம். இந்த உலகத்தில் நீங்கள் அதிகமான நேரத்தை, உலக காரியங்களுக்கு செலவழிக்கும் போது நீங்கள் உலக மனிதராகவே மாறிவிடுவீர்கள். யார்? எதற்கு? எங்கே? அதிக நேரத்தை செலவு செய்கின்றார்களோ அவர்கள் அவைகளை போலவே மாறிவிடுவார்கள். இந்த பொல்லாத உலகம் உங்களையும் பொல்லாதவர்களாக மாற்றிவிடும்.

இரண்டாவதாக, உலகத்தினுடைய குறிக்கோள் உங்களை எப்படியாகிலும் தேவனை விட்டு பிரித்து விட வேண்டும் என்பதே. தேவமனிதனாகிய பவுலோடு தேமா இருந்தால் அவனுக்கு தனிப்பட்ட மதிப்பும், மரியாதையும்

நிச்சயமாய் உண்டு. ஒரு மேலான மதிப்பையும், உறவையும் பொதுவாக எல்லாரும் விரும்புவார்கள். பவுலோடு இருப்பதால் மேலான "மதிப்பு" நிச்சயம் உண்டு. ஆனால் அதைவிட மேலான தவறான, மாயையான ஒரு மதிப்பை இவர்கள் கண்டுபிடித்து விட்டார்கள். இதைவிட ஒரு மதிப்பை தேமா கண்டதால்தான் பவுலைவிட்டு பிரிந்து போய்விட்டான்.

விளைவு தேவனை விட்டு, சபையை விட்டு, வேதத்தை விட்டு, ஜெபத்தை விட்டு, கடைசியில் தேவனை விட்டே பிரிந்து விடும் ஒரு நிலை. **தேவனை விட்டு உங்களை பிரிப்பதற்கு என்னவெல்லாம் வழியிருக்கின்றதோ அத்தனை வழிகளையும் பிசாசு கையாள்கின்றான்.** தேமா அப்போஸ்தலனோடு இருந்தவன். ஊழியங்களை செய்தவன். அற்புதங்களை கண்டவன். அப்போஸ்தலனாகிய பவுலுக்கு உதவியாயிருந்தவன். அவன் இந்த உலகத்தின் மேல் தன் கண்களை பதித்தான். "லோத்து தன் கண்களை ஏறெடுத்துப் பார்த்தான்". ஏறெடுத்துப் பார்த்தபொழுது அவனுக்கு சோதோம், கொமோரா பட்டணங்கள் "நீர்வளம்" பொருந்தியிருக்கக் கண்டான். லோத்து, பார்க்க வேண்டிய பிரகாரமாக பார்க்கவில்லை. ஆபிரகாம் தன் கண்களை ஏறெடுத்துப் பார்த்தான். வெறும் பாலைவனம்தான். ஒரு தேவமனிதன் ஆபிரகாமை குறித்து எழுதும்போது இப்படி குறிப்பிடுகின்றார். லோத்தின் பிள்ளைகள் ஆபிரகாமின் பிள்ளைகளை பார்த்து உன் தகப்பனுக்கு புத்தியேயில்லை. எப்பொழுதும் "பலிபீடம்", "ஆராதனை" என்று கூறி உங்களை நாடோடிகளாக்கி விட்டார் என்று சொன்னார்களாம். ஆனால் அந்த லோத்து சிறைபிடிக்கப்பட்டபோது, ஆபிரகாம்தான் அவனை மீட்டுக்

கொண்டு வந்தான். ஒருவனின் பார்வை "நீர்வளம் பொருந்தின பட்டணத்தின் மீது". அப்பொழுது லோத்து தன் கண்களை ஏறெடுத்துப் பார்த்து, யோர்தான் நதிக்கு அருகான சமபூமி முழுவதும் நீர்வளம் பொருந்தினதாயிருக்கக் கண்டான். கர்த்தர் சோதோமையும், கொமோராவையும் அழிக்கும் முன்னே சோவாருக்கு போம் வழிமட்டும் அது கர்த்தருடைய தோட்டத்தைப் போலவும், எகிப்து தேசத்தை போலவுமிருந்தது. கடைசியாக அவன் மனைவி, பிள்ளைகள் சிறையாக கொண்டு போகப்பட்டார்கள். அவனது வீடு, உடைகள் அனைத்தும் பறிபோனது. தேவ மனிதனாகிய ஆபிரகாமோ கர்த்தர் எப்படி பார்த்தாரோ அப்படியே பார்த்தான். இதை ஆதி 13 : 10ல் காணலாம்.

இன்னொரு மனிதனின் பார்வை அழிந்துபோகும் ஆத்துமாவின் மீது. ஆனால் பாலைவனத்தில் கூடாரம் போட்ட ஆபிரகாம் இன்றும் பேசுகின்றான். உங்கள் பார்வை சரியில்லையென்றால் உங்கள் வாழ்க்கை சரியாயிருப்பது மிகவும் கடினம். தடைகள் மத்தியிலும் காரியங்களை தெளிவாய் காண முயலுங்கள். தேவன் காண்கிறபடி காண ஜெபியுங்கள். நாம் இன்றைய நிலையைத்தான் காண்கிறோம். ஆனால் தேவனோ வருங்காலத்தை காண்கிறார்.

தேவனை விட்டு பிரிந்து போவதற்கு காரணங்கள்

எபே 2 : 2, 3ல் "அவைகளில் நீங்கள் முற்காலத்திலே இவ்வுலக வழக்கத்திற்கேற்றபடியாகவும், கீழ்ப்படியாமையின்

பிள்ளைகளிடத்தில் இப்பொழுது கிரியை செய்கிற ஆகாயத்து அதிகார பிரபுவாகிய ஆவிக்கேற்றபடியாகவும் நடந்துகொண்டீர்கள்" என்று கூறப்பட்டுள்ளது.

இன்றைக்கு உலகத்தில் அதிகமாக நடந்து கொண்டிருக்கின்றது உலக வழக்கமே. "உலக வழக்கம்" என்று ஒன்று இருக்கும்பொழுது "பரலோக வழக்கம்" என்று ஒன்றும் உள்ளது. நம் வாழ்க்கையில் இதுவரை நாம் எதை கடைபிடிக்கின்றோம்? உலக வழக்கமா? அப்படியானால் நம்முடைய முடிவு உலக வழக்கத்தோடே முடிந்து விடும். இரட்சிக்கப்பட்டு, ஞானஸ்நானம் பெற்றதற்கு ஏதாகிலும் அர்த்தம் இருக்கின்றதா? என்பதை ஒரு கனம் சிந்தித்து பாருங்கள். உலக வழக்கத்தின்படி வாழ்கின்ற நமக்கு உலகம் தரப்போகின்ற பரிசு என்ன? **இந்த உலகம் மேலான ஒன்றை வாக்குப்பண்ணும். ஆனால் கீழ்தரமான ஒன்றையே கொடுக்கும்.** உலக வழக்கத்தின்படியே நீ வாழ்ந்தால் உலகம் உனக்கு கொடுக்கும் பரிசு கீழ்த்தரமான ஒன்றுதான். இது தேவைதானா? "அவர்கள் அப்படி சொன்னார்கள்", "இப்படி சொன்னார்கள்" என்று வாழ்ந்து கொண்டிருந்தால் நமக்கு இந்த வேதம் தேவையில்லை, இரட்சிப்பு தேவையில்லை, சபை தேவையில்லை, மனந்திரும்ப அவசியமில்லாமல் பழைய வாழ்க்கையில் உலக வழக்கத்தின் படியே வாழ்ந்து கொண்டிருக்கலாமே. நாம் வித்தியாசமான மேலான இடத்திற்கு பிரயாணம் செய்து கொண்டிருக்கின்றோம். அப்படியானால் நாம் உலக வழக்கத்தின்படியே, மனிதர்களுக்காய் வாழ்ந்து கொண்டிருப்பதில் அர்த்தம் இல்லையே! தேவன் நம்மை வெறுத்துவிட்டால் உலகத்தில் எவருமே நம்மை

ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். உலகம் நம்மை வெறுத்தால் பரவாயில்லை. தேவன் நம்மை ஏற்றுக்கொள்வார்.

இதைதான் பக்தன் "உலகம் வெறுக்கையில் நீரோ அணைக்கிறீர்" என்று அனுபவ பூர்வமாக பாடியிருக்கிறார். மனம் விரும்புவதை மாமிசம் செய்கின்ற ஒரு நிலை. அது தேவனுடைய கோபாக்கினையை தருகின்றது. மனிதனுடைய கோபம் இன்றைக்கு இருந்து நாளைக்கு மறைந்து போய்விடும். ஆனால் தேவ கோபாக்கினையோ காலாகாலமாயிருக்கும். மனிதனுடைய கோபம் ஒன்றுமே செய்ய முடியாது. ஆனால் தேவனுடைய கோபமோ உங்களை ஒன்றுமில்லாமல் செய்துவிடும். இது தேவைதானா? தேவனுடைய பிள்ளையாக இருந்த நீ இப்பொழுது யாராக இருக்கிறாய்? கோபாக்கினைக்குரிய ஒரு ஆளாக மாறிவிட்டாயா? இதற்கு காரணம் மனசும், மாம்சமும்தான். இதன் பின்விளைவு "இப்பிரபஞ்சத்தின் மேல் ஆசை". தேவனை விட்டு எப்படியாவது உங்களை பிரிக்க வேண்டுமென்பது பிசாசினுடைய குறிக்கோள். நீங்கள் தேவனோடு வாழ கூடாது, கிறிஸ்துவின் பெயரை சொல்லக் கூடாது, அவரோடு நீ கிட்டி சேரக் கூடாது, இப்படியெல்லாம் உங்களை பிரிப்பதற்காக எந்த கோணங்களிலெல்லாம் உன்னை தாக்க வேண்டுமோ அந்த கோணங்களிலெல்லாம் உன்னை தாக்க முயற்சிக்கிறான்.

தேவனுடைய கோபத்தின் விளைவு தேவனுடைய கோபத்தால் சோதோம், கொமோரா பட்டணத்திற்கு அழிவும், அக்கினியும் வந்தது. நோவாவின் காலத்தில் ஏற்பட்ட

கோபத்தினால் ஜலப்பிரவாகம் வந்து, எல்லோரையும் அழித்துப் போட்டது. இப்படியாக தேவகோபம் ஒன்றுமில்லாமல் அழித்துவிடும் என்ற உண்மையை நினைவிற்கொள்ளுவது நல்லது.

தொடர்ந்து, 2கொரி 4 : 4ல் தேவனுடைய சாயலாயிருக்கிற கிறிஸ்துவின் மகிமையான சுவிசேஷத்தின் ஒளி அவிசுவாசிகளாகிய அவர்களுக்குப் பிரகாசமாயிராதபடிக்கு, இப்பிரபஞ்சத்தின் தேவனானவன் அவர்களுடைய மனதைக் குருடாக்கினான்.

இதுவரை நீங்கள் வாசித்த ஒவ்வொரு குறிப்புகளிலும் "உலகம்" என்கின்ற வார்த்தை தொடர்ந்து பயன்படுத்துவதை கவனிக்க அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். அப்படியானால் உலகத்திற்கென்று ஒரு தேவன் இருக்கிறான். அதைபோல மீட்கப்பட்ட உனக்கென்றும் ஒரு தேவனிருக்கிறார். அவரை "அப்பா" என்று கூப்பிடுகின்ற போதெல்லாம் அவர் நமக்கு உதவி செய்கின்றார். இப்பிரபஞ்சத்தின் தேவனுடைய வேலை என்ன? அவன் என்ன செய்கிறான்? அவர்களுடைய மனதை குருடாக்கிவிடுகிறான். முதலாவது பிசாசு மக்களை தேவனை விட்டு பிரிக்கின்றான். அவர்களை பிரித்துப் பார்த்தும் அவர்கள் பிரியவில்லை என்று கண்டு தற்போது அவர்களது மனதை "குருடாக்கிவிடுகின்றான்". முதலாவது உங்களை "பிரிப்பது", இரண்டாவது "குருடாக்குவது", இன்றைக்கு சபைக்கு வந்தும், ஆராதிக்க முடியாத, துதிக்க முடியாத, செய்திகளை கிரகிக்க முடியாத ஒரு நிலை. உலகத்தின் மீது நீங்கள் ஆசை

வைத்தீர்களென்றால் உலகம் உங்களுக்கு தேவனாக மாறிவிடும். இந்த உலகத்தில் அதிகமான நேரத்தை உலக காரியங்களுக்கு செலவு செய்து நீங்கள் உலகமாக மாறிவிடாதீர்கள். இதில் அதிக கவனம் தேவை. மீன் கடலுக்குள் தான் வாழ்கின்றது. ஆனால் மீனுக்குள் உப்பின் தன்மை இல்லை. இந்த வசனத்தில் பிரகாசமாயிராதபடிக்கு என்ற வார்த்தை நினைவில் வைக்க வேண்டிய ஒன்று. இதற்கு காரணமே உலகத்தின் மேலுள்ள இழுப்பு சக்தியே. அதைப்போலவே உலகத்தில்வாழ்ந்தாலும் உலகத்தின் பல்வேறு காரியங்கள் ஒரு தேவனுடைய பிள்ளையை ஆட்டிப்படைப்பதை தேவன் விரும்புவதில்லை. இப்பிரபஞ்சத்தின் தேவன் இரட்சகர் இயேசுவையும் விட்டுவைக்க வில்லை. இதை மத் 4 : 8ம் வசனத்தில் காணலாம்.

மறுபடியும் பிசாசு அவரை மிகவும் உயர்ந்த மலையின்மேல் கொண்டுபோய், "உலகத்தின் சகல ராஜ்யங்களையும், அவைகளின் மகிமையையும் அவருக்குக் காண்பித்து",

இங்கே மூன்று காரியங்களை வரிசைப்படுத்தி காண்பிக்க விரும்புகின்றேன். அவரைக் கொண்டு போய், (மத்தேயு 4 : 1 - 10)

1) உலகத்தின் சகல ராஜ்யங்களையும் உலகத்தின் பொருட்களை காண்பித்தான். (கண்களின் இச்சை)

2) இந்த கல்லுகள் அப்பங்களாகும்படி சொல்லும். (ஜீவனத்தின் ஆசை)

3) இவைகளையெல்லாம் உமக்குத் தருவேன். (ஐசுவரியத்தின் மயக்கம்)

என் அன்பு வாசகரே நட்சத்திரங்களாய் ஜொலித்த பலரை பிசாசு கீழே தள்ளி இன்று அவர்களை ஒன்றுமில்லாமல் செய்துள்ளான், விழிப்படைவோம்!, தெளிவடைவோம்!

அறிந்துகொள்ள

சாத்தானின் தந்திரங்கள்

1) தந்திரமுள்ளவன், ஏமாற்றுகிறவன் - எபே 6 : 11 (Deceiver)

2) பொல்லாங்கன் - எப்பொழுதும் தேவனுடைய பிள்ளைகள் மேல் வேதனைகளை கொடுத்துக்கொண்டிருப்பவன் - எபே 6 : 16 (Evil)

3) கண்ணிகளை வைப்பவன் - கண்களுக்கு புலப்படாத வகையில் காரியங்களை செய்கிறவன் - 1தீமோ 3 : 7, 6 : 9, 2தீமோ 2 : 26 (Snare)

4) மோசம் போக்குகிறவன் - 2கொரி 2 : 11 (Fravd)

5) காயப்படுத்துகிறவன் - என்னை குட்டும் சாத்தான் 2கொரி 12 : 7 (Injured)

ஊழியர் பகுதி

நீதிக்கென்று விதையுங்கள்!

ஆண்டவர் இந்த பூமியில் ஒவ்வொரு மனிதனையும் ஏதோ ஒரு குறிக்கோளுக்காக தெரிந்துக் கொண்டார். அதில் சில வித்தியாசங்கள் இருக்கலாம். ஆனால் நோக்கம் ஒன்றுதான். இதை விளக்கும் ஒரு செய்தியை இங்கே உங்களோடு கூட பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

முதலாவது அப் 9 : 6ல் **"அவன் நடுங்கி திகைத்து, ஆண்டவரே, நான் என்ன செய்ய சித்தமாயிருக்கிறீர்?"** என்றான். இங்கே ஒரு மனிதனுக்குள்ளே உள்ள கேள்வியை பாருங்கள். **"நான் என்ன செய்ய வேண்டும்"** என்பதே கேள்வி. உங்கள் வாழ்க்கையில் நீங்கள் என்ன செய்ய வேண்டுமென்பதை அவர் நிச்சயமாய் உங்களுக்குச் சொல்லி தருவார். அதுதான் ஆவியானவர் வேலை. "நீ செய்ய வேண்டியது உனக்கு அருளப்படும்" என்றாரே அது ஒருநாளும் பொய்யுரையாது. உங்களுடைய படிப்பு, உங்களுடைய

திருமணம், உங்களுடைய உத்தியோகம், உங்களுடைய வாழ்க்கை, உங்களுடைய ஊழியம் ஒவ்வொன்றையும் அவர் திட்டமிட்டு செயல்படுத்துகின்றவர். இதைப்போல ஒரு நல்ல தகப்பன் உலகத்தில் நமக்கு இல்லையே. அவர் தீமையான ஒன்றை தம்முடைய பிள்ளைகளுக்கு அனுமதிக்கவே மாட்டார். நன்மையான ஒன்றையே செய்கின்றார். ஏனென்றால் நன்மையான எந்த ஈவும், பூரணமான எந்த வரங்களும் அவரிடத்திலிருந்து வருகின்றது. தீமையான ஒன்று பிசாசிடமிருந்து வருகின்றது என்பதை மறந்து போக வேண்டாம். அப்படியானால் அவர் சொல்வது என்ன? "நீ இந்த உலகத்தில் செய்ய வேண்டிய ஒரு வேலை இருக்கின்றது. அது உனக்கு சொல்லப்படும்". இந்த செய்தியை விளக்க ஆண்டவர் கூறும் ஒரு உவமையை இங்கே குறிப்பிட விரும்புகின்றேன்.

முதலாவது மத் 13 : 38 ல் **நிலம், உலகம், நல்ல விதை, ராஜ்யத்தின் புத்திரர். களைகள் பொல்லாங்கனுடைய புத்திரர்.** இந்த உலகத்திற்கு நாமெல்லாரும் நல்ல விதையாக இருக்கிறோம். இந்த விதைகளெல்லாம் பூமியில் விழுந்திருக்க வேண்டிய விதத்தில் விழுந்திருந்தால் இந்நேரம் எவ்வளவோ பலன் கிடைத்திருக்குமே. நீ யார்? நீ ஒரு "நல்ல விதை". உனக்கு தேவன் அழகான ஒரு பட்டம் கொடுத்திருக்கின்றார். நம் எல்லாருக்கும் பரலோகம் கொடுத்த ஒரு பட்டம் "நல்ல விதை". இந்த நல்ல விதையை மூட்டைக் கட்டி பூசனப்படுத்தி வைத்திருக்கின்றோமே. இந்த விதை இதுவரைக்கும் எங்கேயாவது, விழுந்து, முளைத்து பலன் தந்திருக்கின்றதா?

என்பதை ஒரு விசை சிந்தித்து பார்க்க அன்புடன் கேட்டுக்கொள்ளுகின்றேன். நம்மை பார்த்து பரலோகம் கூறும் வார்த்தை நல்ல விதை. கெட்ட விதையாக இருந்தால் நம்மை என்றைக்கோ அவர் அக்கினியில் போட்டிருப்பார். ஆண்டவர் உன்னை இன்னும் பூமியில் வைத்திருக்கும் நோக்கம், நீ விலையேறப்பெற்ற விதையாய், முத்தாய் இருப்பதினாலேயே. இங்கே நீங்கள் கவனிக்க வேண்டிய ஒரு வார்த்தை விதையென்று குறிப்பிடவில்லை. "நல்லவிதை" என்று குறிப்பிடப்பட்டுள்ளது. நாம் எல்லோரும் செய்யத் தவறின ஒன்றினை சற்றே சிந்தித்துப் பார்ப்பது நல்லது. நல்ல விதை "நல்ல கனி" கொடுக்கும். மட்டுமல்ல அந்த விதை வளரும்.

மத் 6 : 28ல் "காட்டு புஷ்பங்கள் எப்படி வளருகினற்து என்று கவனித்துப் பாருங்கள்" என்று ஆண்டவர் குறிப்பிடுகின்றதை இங்கே சுட்டிக்காண்பிக்க விரும்புகின்றேன். காட்டுபுஷ்பமே வளருகின்றது. அது விதைத்து வளருகின்ற ஒன்று அல்ல. அது காட்டினிலே வளருகின்றது. அதுவே வளரும்போது நீங்களும், நானும் நிச்சயமாய் வளர முடியும். நமக்கிருக்கின்ற சிலாக்கியம் எத்தனை மேன்மை. பொதுவாக காடுகளில் நல்ல பயிர் விளைய வாய்ப்பில்லை. காட்டைத்திருத்தினால் மட்டுமே பயிர் விளையும். அங்கே நீர் வளமிருந்தால் பயிர் விளையும். நீர்வளம் இல்லாத ஒன்றுக்குத்தான் "காடு" என்று பெயர். அப்படியானால் காட்டுபுஷ்பம், காட்டினில் வளருகின்றது என்று சொன்னால், நல்ல விதையாய் இருக்கின்ற நீங்களும், நானும் இன்னும்

பலன் தராமல் இருக்கின்றோம். காட்டுபுஷ்பங்களுக்கு எவருமே நீர் பாய்ச்சுவதில்லை, தண்ணீர் ஊற்றுவதுமில்லை, கவனித்து பராமரிப்பதுமில்லை. கவனம் செலுத்தப்படாத ஒன்றே வளரும்பொழுது உங்கள்மேலும், என்மேலும் ஆண்டவர் எவ்வளவு கவனம் செலுத்துகின்றார். தேவன் நம்மேல் கவனம் செலுத்தியிருக்காவிட்டால் இன்றைக்கு காலையில் நாம் எழுந்திருக்க முடியுமா? என்பது கேள்விக்குறி. கவனம் செலுத்தப்படாத ஒன்றே வளருமென்றால் அவர் உனக்கு நீர்பாய்ச்சி, உன் வாழ்க்கையின் களைகளை பிடுங்கி, உன்னை சுத்தம் பண்ணி, உன்னை உயர்ந்த இடத்தில் வைத்திருக்கின்றாரே இதுதான் தேவன் உன்மேல் வைத்திருக்கும் **அளவில்லாத கிருபை.** நீங்கள் வளர வேண்டும் என்பதற்காகவே வளருகின்ற ஒரு இடத்தில் உங்களை வைத்திருக்கின்றார். அதைத்தான் வேதம் "நற்குல திராட்சை செடி"யென்று கூறுகின்றது.

ஏசாயா 25 : 1ல் இங்கே நீங்கள் அறிந்து கொள்ள வேண்டிய சத்தியம் நீங்கள் ஒரு "நல்ல விதை".

இந்த நல்ல விதையை தேவன் எங்கே கொண்டுபோய் போடுகின்றாரென்றால் மத் 13 : 38ல் கூறப்பட்டுள்ளபடி "உலகத்தில்" விதைக்கின்றார். நிலம் இருக்கின்றது. விதை இருக்கின்றது. அப்படியானால் கண்டிப்பாக அங்கே செழிப்பு இருக்க வேண்டும். இன்றைய திருச்சபைகளில் உள்ள பரிதாபமான நிலை, நிலம் இருக்கின்றது, விதையுமிருக்கின்றது.

ஆனால் தேவன் எதிர்ப்பார்க்கின்ற செழிப்பும், வளர்ச்சியும் இல்லையே!. நல்ல விதையாகிய நீங்கள் இதுவரை பயன்படுத்த படவில்லையே. சற்று யோசித்துப் பாருங்கள். 100 கோடிக்கும் அதிகமாக உள்ள இந்த பரந்த பாரத தேசத்தில் விதைக்கு பஞ்சமில்லை. இந்தியாவின் ஒவ்வொரு மூலைமுடுக்குகளில் எங்கு பார்த்தாலும் விதைகளை கர்த்தர் வைத்திருக்கிறார். ஏராளமான விதைகள் இருக்கின்றது. ஆனால் அந்த விதைகள் பயன்படுத்தப்படாமலிருக்கின்றது. பயன்படுத்தப்படாத அந்த விதைகள் என்னவாகும். "பூசனம்" பிடித்துவிடும். நாம் ஒரு காலத்தில் களையாயிருந்தோம். களையாயிருந்த நம்மை ஆண்டவர் "விதையாய்" மாற்றினார். ஆகவே நாம் செய்ய வேண்டிய பணி கோதுமை மணியான நாம் முதலில் நிலத்தில் விழ வேண்டும். ஆனால் இன்றைய் நிலை "விதை" இன்னும் நிலத்தில் விழவே இல்லை. நிலத்தில் விழுந்தால் கண்டிப்பாக பலன் நிச்சயம்.

கோதுமை மணியானது நிலத்திலே விழுந்து சாவதற்கு முன்பு அது முதலில் தன்னை ஒப்புக் கொடுக்க வேண்டுமே. நிலத்தில் விழுவதற்கு தேவன் உங்களுக்கு கொடுக்கப்பட்ட வாய்ப்பை கொஞ்சம் பயன்படுத்துங்கள். ஒரு சிலருக்காவது ஆண்டவரைப் பற்றி சொல்லுங்கள். ஆண்டவரைப் பற்றி பேசுங்கள். இவ்வளவு நாளை வீணாக்கிவிட்டீர்களே. பிசாசு உங்கள் பலவீனங்களை சுட்டிக்காட்டி உங்களை குற்றப்படுத்துவான். நீங்கள் சொல்ல வேண்டிய வார்த்தை "நான் ஒரு நல்ல விதை". மத் 6 : 28யை எப்பொழுதும்

நினைவு கூறுங்கள். காட்டினில் வளருகின்ற காட்டுபுஷ்பங்களே வளரும்பொழுது தேவன் உண்டாக்கின நல்ல விதையாயிருக்கின்ற நீங்கள் நிச்சயமாய் வளருவீர்கள்.

தொடர்ந்து யோவான் 4 : 35ல் **அறுப்புக்காலம் வளருகிறதற்கு இன்னும் நாலு மாதம் செல்லும் என்று நீங்கள் சொல்லுகிறதில்லையா? இதோ, வயல்நிலங்கள் இப்பொழுதே அறுப்புக்கு விளைந்திருக்கின்றதென்று உங்கள் கண்களை ஏறெடுத்துப் பாருங்கள்.** இங்கு நீங்கள் படித்த வசனங்கள் யாவும் வயலைப் பற்றியே வருகின்றது. இங்கே இரண்டு வார்த்தைகளை மட்டும் வலியுறுத்திக் காட்ட விரும்புகின்றேன். "இதோ", "இப்பொழுதே" என்பதே அந்த வார்த்தைகள். விதை எங்கேயிருக்கின்றது, "இதோ". இன்றைய திருச்சபை ஊழியர்களே யாரோ ஒருவர் வந்து சபையில் ஒரு அற்புதம் செய்ய வேண்டும். அப்பொழுதுதான் சபை வளரும் என்ற நினைவை உங்களை விட்டு எடுத்துப் போடும்படி அன்புடன் கேட்டுக்கொள்ளுகிறேன். விதை. "இதோ". அதை எப்பொழுது விதைக்க வேண்டும். "இப்பொழுதே" விதைக்க வேண்டும். இந்த விதைகளையெல்லாம் தேவன் உங்களை எந்தெந்த பகுதியில் வைத்திருக்கின்றாரோ, அந்தந்த பகுதியில் விதைத்தால் 4வது வரியின் கடைசி சொற்றொடரில் காணப்படும் "**அறுப்புக்கு விதைந்திருக்கும்**" என்ற வார்த்தை உங்களுக்கு சொந்தமாக மாறும். இன்றைய சபைகளில் விளைச்சலில்லை. காரணம் விதைக்கவேயில்லை. நீங்கள் நல்ல விசுவாசிகள்தான். ஆனால் பூமியில் சரியாய் நீங்கள்

விதைக்கப்படவில்லை. ஒருவேளை நீங்கள் அதற்காக ஒப்புக்கொடுக்கவில்லையா? இல்லை உங்களுக்கு இதுவரை இந்த உண்மை தெரியவில்லையா? எப்படியும் இந்த செய்தியின் முடிவிலே உங்களில், உங்களுக்குள் ஒரு மாற்றம் ஏற்பட ஜெபிக்கின்றேன். இது ஒரு பெரிய உலகம். நீங்கள் இருப்பது எந்த பகுதியாக இருந்தாலும் இந்த உலகத்தில் நீங்கள் செய்ய வேண்டிய ஒரு "பெரிய வேலை" இதுதான். காட்டு புஷ்பத்தை எவரும் விதைக்கின்றதேயில்லை. நீங்கள் நல்ல விதையல்லவா? நல்ல விதையாயிருக்கின்ற நீங்கள் ஆகாதவர்களாய், காட்டு புஷ்பமாய், கசப்பான செடியாய் மாறினது என்ன? யோசித்துப் பாருங்கள். நல்ல விதை பூமியில் விழுந்தால் நல்ல பலனுண்டு. இந்த பரந்த பாரத தேசத்தில் கோடிக்கணக்கான விதைகளும் இந்நேரம் விழுந்திருந்தால் நல்ல விளைச்சல் தந்திருக்குமே. இந்த செய்தியை வாசித்துக் கொண்டிருக்கும்பொழுதுதானே அதற்கான தீர்மானம் செய்யுங்கள். **பட்டங்கள் முக்கியமல்ல, நம்முடைய பலன்தான் முக்கியம்.** பட்டங்கள் நம்மை பரலோகம் கொண்டுபோவதில்லை. "பட்டங்கள்" பலன் தருவதில்லை. "விதைகள்தான்" பலன் தரும். நீங்கள் நல்ல விதையென்பதை உலகம் சொல்ல வேண்டும். விதை காட்சிப் பொருளாயிருந்தால் விதைக்கு அர்த்தமில்லை. "நல்ல உலகம்" என்று வேதம் குறிப்பிடுகின்றது. இந்த உலகம் இன்றைக்கு நல்ல உலகமாயில்லை. காரணம்? நல்ல விதைகள் பூமியில் விதைக்கப்படவில்லை. நல்ல விதைகள் இந்த உலகத்தில் விதைக்கப்பட்டிருக்குமேயானால் இன்றைக்கு இத்தனை சினிமா

தியேட்டர்களும், சாராய கடைகளும் இருந்திருக்காதே. இந்த விதைகள் தனக்கும் பயன்படவில்லை. இந்த உலகத்திற்கும் பயன்படவில்லை. "நல்ல உலகமாக" மாறாததற்கு காரணம் நல்ல விதைகள் தன்னில்தான் நல்ல விதைகளாக இருக்கின்றதேயொழிய பூமியில் இன்னும் விழுந்து சாக மனமில்லை. பலன் கொடுக்கும்படியாகவே நீ இரட்சிக்கப்பட்டாய். தனிமரமாக இருந்த உன்னை கனிமரமாகவும், உவர் நிலமாக இருந்த உன்னை விளைநிலமாகவும் மாற்றினார்.

தொடர்ந்து கலா 6 : 10ல் "**ஆகையால் நமக்குக் கிடைக்கும் சமயத்திற்குத்தக்கதாக, யாவருக்கும் விசேஷமாக விசுவாச குடும்பத்தார்களுக்கும் நன்மை செய்யக்கடவோம்**" என்று எழுதப்பட்டுள்ளது. நமக்கு கிடைக்கும் சமயத்திற்கு தக்கதாய் தேவன் நமக்கு கொடுக்கின்ற ஒவ்வொரு வாய்ப்புகளையும் பயன்படுத்திக் கொள்ளுங்கள். நான் எந்த ஒரு கூட்டத்திற்கு சென்றும் இரட்சிக்கப்படவில்லை. எந்த ஒரு மேய்ப்பரும் எனக்கு சுவிசேஷம் சொல்லவில்லை. என் நண்பர் ஒருவர்தான் எனக்கு இரட்சிப்பின் செய்தியை அறிவித்தார். அவர் யாரையெல்லாம் சந்திக்கின்றாரோ ஒருவரையும் அவர் விடுவதில்லை. அவரிடம் வரும் அத்தனை பேருக்கும் சுவிசேஷம் சொல்லி விடுவார். அதனுடைய விளைவுதான் நான் இன்றைக்கு ஒரு தேவ ஊழியனாய் இருக்கின்றேன். உங்களுக்கு எப்பொழுதெல்லாம் சமயங்கிடைக்கின்றதோ அப்பொழுதெல்லாம் அந்த சமயத்தை

பயன்படுத்த மறவாதிருங்கள். ஒவ்வொரு மக்களும் தேவன் உங்களுக்கு கொடுக்கின்ற "வாய்ப்புக்கள்" என்பதை மறந்து விட வேண்டாம். வாய்ப்பு என்பது வாழ்க்கையின் ஒருமுறைதான் வரும். தேவன் தந்த வாய்ப்பை நழுவவிட்டால் பிறகு வாய்ப்புக்களே வராது. ரூத்தை திருமணம் செய்வதற்கு அவனுடைய உறவின் முறையானுக்கு ஒரு வாய்ப்பு வந்தது. அவன்தான் ரூத்தை திருமணம் செய்திருக்க வேண்டும். அவன் ரூத்தை திருமணம் செய்யவில்லை. அதற்கு இரண்டு காரணங்கள். ஒன்று, அவள் ஏற்கனவே விதவையாயிருக் கின்றாள். அவள் விதவையாயிருப்பதால் இவளையும் பராமரிக்க வேண்டும், அவளோடு கூட இருக்கும் அவள் மாமியாரையும் பராமரிக்க வேண்டிய நிலை. எனவே அவன் ரூத்தை திருமணம் செய்யவில்லை. யோசித்துப் பாருங்கள். அவனுக்கு வந்த வாய்ப்பை விட்டு விட்டான். அன்றைக்கு மட்டும் அவன் ரூத்தை விவாகம் பண்ணியிருப்பானேயானால் புதிய ஏற்பாட்டின் முதல் புத்தகத்தில் அவன் பெயர் இடம் பெற்றிருக்கும். அவன் தவறவிட்டுவிட்டான். மாறாக ஒலிமுக வாசலில் உட்கார்ந்திருந்த போவாஸ், அந்த போவாஸ் ரூத்தை விவாகம் செய்ததினால் மத்தேயு சுவிசேஷத்தின் முதல் அதிகாரத்தில் இடம் பெற்றான். அவன் சந்ததியில் இரட்சகர் இயேசு பிறந்தார். மத் 1 : 5ல் சல்மோன் போவாசை ராகாபினிடத்தில் பெற்றான். போவாஸ் ஒபேதை ரூத்தினிடத்தில் பெற்றான். ஒபேத் ஈசாயை பெற்றான். இப்படியாக போவாஸ் சரித்திர நாயகனானான். சம்மந்தப்படாத ஒருவன் சம்பந்தமாகிவிட்டான். நாம் வாழ்கின்ற வாழ்க்கை ஒரு

நிலையற்ற வாழ்வு. இந்த நிலையற்ற வாழ்க்கையிலே விதையை போகின்ற இடமெல்லாம் விதையுங்கள்.

கடைசியாக நீங்கள் விதைக்கின்ற உங்கள் பங்கு என்ன என்பதை தானி 12 : 3ல் காணலாம்.

"ஞானவான்கள் ஆகாயமண்டலத்தின் ஒளியைப் போலவும், அநேகரை நீதிக்குட்படுத்துகின்றவர்கள் நட்சத்திரங்களைப் போலவும் என்றென்றைக்குமுள்ள சதாகாலங்களிலும் பிரகாசிப்பார்கள்".

"நல்ல விதை" இப்பொழுது "ஞானவானாக" மாறிவிடுகின்றது. இப்பொழுது தேவன் உங்களுக்கு கொடுக்கும் பட்டம், "ஞானமுள்ள மனுஷன்". விதைக்காதவன் முட்டாளாகவும், விதைக்கின்றவன் ஞானவானாகவும் மாறுகின்றான். இப்படிப்பட்ட ஞானவான்கள் ஆகாயமண்டலத்திலே ஒளியைப் போலவும், அநேகரை நீதிக்குட்படுத்துகின்றவர்கள் நட்சத்திரங்களைப் போலவும் என்றென்றைக்கும் பிரகாசிப்பார்கள். இந்த செய்தியை வாசித்துக் கொண்டிருக்கும் என் அன்பு வாசகரே! நான் நல்ல விதையாயிருப்பேன், நான் பூமியிலே விழுவேன், இந்த பூமியை நல்ல பூமியாக மாற்றுவேன் என தீர்மானம் செய்யுங்கள். உங்களால் குடும்பங்கள் மாறும், தேசங்கள், பட்டணங்கள் மாறும். ஆமென்.

எங்களது வெளியீடுகள்

OPEN DOOR FULL GOSPEL CHURCH

65, Paramanantha Mudali Street, Seven Wells, Chennai - 600 001.
Ph.: (044) 25281985 E.mail:stephenopendoor@hotmail.com